www.tamilarangam.net

# மாக்ஸிம் கார்க்கியின்

# லெனினுடன் சில நாட்கள்



தமிழ்ப்புத்தகாலயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லெனினுடன் சில நாட்கள்

## மாக்ஸிம் கார்க்கி

தமிழாக்கம் :

**கு. அழகிரிசாமி**

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

**தமிழ்ப் புத்தகாலயம்**

ஃபிளாட் ஜி 3/8, மாசிலாமணி தெரு
தி.நகர், பாண்டிபஜார்
சென்னை - 600 017
Email : tamilputhakalayam@yahoo.com

Website : http://education.vsnl.com/dhagam

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெனினுடன் சில நாட்கள்
முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1951
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 1985
மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 1996
நான்காம் பதிப்பு : டிசம்பர், 2000
விலை : ரூ. 24.00

இந்த நூல் பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ்
அனுமதி பெற்று வெளியிடப்படுகிறது

DAYS WITH LENIN
BY MAXIM GORKY
© Tamil Puthakalayam
Fourth Edition : Dec, 2000
Pages 92
TAMIL PUTHAKALAYAM
Plot G, 3/18, Masilamani Street,
Pondy Bazaar, T.Nagar,
Chennai - 600 017
Phone 4345904
Price **Rs. 24/-**

Printed at : Udayam Offset

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

*** *** ***

ருஷ்யாவின் தனிப் பெருந்தலைவராக விளங்கிய லெனினுடன் நெருங்கிப் பழகியவர் மாக்ஸிம் கார்க்கி. இருவரும் உற்ற நண்பர்கள்; பரஸ்பரம் ஒருவரிடத்தில் ஒருவர் பெருமதிப்பு வைத்துப் பழகியவர்கள். கார்க்கி தம் வாழ்நாளில் நெருங்கிப் பழகியவர்களைப் பற்றி எழுதிய நினைவுக் குறிப்புகள் மிகவும் அற்புதமாக இருக்கின்றன. அதிலும் லெனினைப்பற்றி அவர் எழுதியிருக்கும் நினைவுக் குறிப்புகள் மிகமிக அற்புதமாக இருக்கின்றன. அந்த நினைவுக் குறிப்புகளே இந்தப் புத்தகம். லெனினுடை உருவத் தோற்றம், நடை உடை பாவனை, பேச்சுத் தோரணைகள், சீரிய பண்பு முதலியவற்றை இந்தக் குறிப்புகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. அத்துடன், லெனின் காலத்தில் நடந்த சில முக்கியமான நிகழ்ச்சிகளையும் கார்க்கி சித்திரிக்கிறார். அநேக கொள்கை, கோட்பாடுகளைப் பற்றி விளக்கமும் விமர்சனமும் செய்திருக்கிறார். லெனினைப் பற்றி எழுதப்பட்ட நூல்களில் முக்கியமானதொரு ஸ்தானத்தைப் பெறக் கூடியது இந்த "லெனினுடன் சில நாட்கள்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழி பெயர்க்கும் நோக்கத்துடன் இந்த நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் படித்தவர்களுக்கு, இதை மொழி பெயர்ப்பதில் உள்ள சிரமங்கள் தெரியவரும். ஆனாலும், ஆங்கில மொழி பெயர்ப்பை அடியொற்றியே இந்த நூலை மொழி பெயர்த்திருக்கிறேன். Social-Democracy என்பதை ''சமதர்ம ஜனநாயகம்'' எனவும், ntelligenstia என்ற பதத்தை, ''படித்த கூட்டம்'' எனவும் தமிழாக்கியிருக்கிறேன். இந்த நூலின் நடுவிலும், அடிக் குறிப்புகளிலும், 'பிராக்கெட்டுகளுக்கு'' நடுவில் காணப் படுவன யாவும், விளக்கத்தை முன்னிட்டு நானே எழுதிச் சேர்த்தவை. மற்ற அடிக்குறிப்புகள் யாவும் ஆங்கில நூலின் பதிப்பாசிரியர் எழுதியவையே.

கு. அழகிரிசாமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லெனினுடன் சில நாட்கள்

விலாடிமிர் லெனின் காலமாய் விட்டார். உலகம் அவரை இழந்ததனால், ஒரு நிகரற்ற மேதையை இழக்கும்படியாயிற்று. அவர் காலத்தில் வாழ்ந்த மேதைகளையெல்லாம்விட அவர் எவ்வளவோ பெரிய மேதாவி. இந்த உண்மையை அவருடைய விரோதிகளுங்கூடத் துணிவோடு ஒப்புக்கொண்டார்கள். லெனினைப் பற்றி, ஜெர்மன் பூர்ஷ்வாப் பத்திரிகையாகிய ''ப்ரேக்கர் டாகிப்லாட்'' என்பதில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அந்தக் கட்டுரையின் அடிநாதம் லெனினுடைய மாபெரும் தோற்றப் பொலிவைக் கண்டு மதிப்பும் பிரமிப்பும் கொண்டதாகவே அமைந்திருந்தது. அதன் இறுதி வாசகம்:

''மிகப் பெரியவர்; பயங்கரமானவர்; தம் மரணத்திலும் கூட நம்முடைய திருஷ்டியையெல்லாம் தாண்டி, அப்பால் நிற்பவர்-அப்படிப்பட்டவர் லெனின்.'' இந்தக் கட்டுரையின் உள்ளொலியானது வெறும் பிரமிப்பு மட்டுமல்ல; ''விரோதியின் சவத்தில் எப்போதும் நறுமணமே வீசும்'' என்பது போன்ற வாசகத்தில் அடங்கியிருக்கும் ஒட்டுப் பற்றில்லாத ஒருவித உணர்ச்சியையும் அந்த உள்ளொலி பிரதிபலிக்கவில்லை. அல்லது ஓய்வொழிச்சலற்று இயங்கிய ஒரு பெரிய சக்தி ஒழிந்தது என்று எண்ணி ''நல்ல வேளை'' எனச் சந்தோஷப்படும் ஒரு உணர்ச்சியும் அக்கட்டுரையில் இல்லை. ஒரு பெரிய மனிதன் மூலமாக மனித வர்க்கம் அடைகின்ற பெருமைதான் அந்தக் கட்டுரையின் உள்ளொலியாக அமைந்திருக்கிறது.

வாழ்வதற்குரிய பயமில்லாத காரணம், நிச்சய தீர்க்கமான மனோதிடம்-இந்த இரண்டுக்கும் சீரிய உதாரணமாக விளங்கியது லெனினுடைய வாழ்க்கை. இவருடைய மூர்த்திகரத்தை, பூர்ஷ்வாப் பத்திரிகைகளும் கூடப் பாராட்டின. ஆனால் இந்த ஒரு மதிப்பைத் தெரிவிக்கும் திரா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ணியோ, அல்லது நாகரிகப் பண்போ கூட வெளிநாட்டில் குடியேறி உள்ள ருஷ்ய பத்திரிகைகளுக்கு இல்லாமல் போய் விட்டது.

லெனினுடைய சித்திரத்தைத் தீட்டுவது சிரமமான காரியம். மீனுக்குச் செதில்கள் புறத் தோற்றத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளதுபோல, லெனினுடைய வார்த்தைகள் அவருடைய புறத் தோற்றத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தன. எதையும் எளிமையாக, நேரடியாகச் சொல்லுவது அவருடைய இயல்பின் பிரதான அம்சமாகும். அவருடைய பராக்கிரம சாதனைகளைச் சூழ்ந்து இன்று தெய்வீக ஒளிவட்டம் எதுவும் பிரகாசிக்க வில்லை. ருஷ்ய நாட்டுப் புரட்சி அறிஞன் ஒருவனிடம் இருந்த பராக்கிரமந்தான் அவரிடத்திலும் காணப்பட்டது. அந்தப் பராக்கிரமத்தை ருஷ்யா நன்கு அறியும். உலக சமுதாயத்தில் நீதியை நிலை நாட்ட முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன், மனித வர்க்கத்தின் நல்வாழ்வுக்குப் பாடுபட, சகல போக போக்கியங்களையும் துறந்து, யாதொரு கர்வமும் கொள்ளாது, தியாக வாழ்க் கையை மேற்கொண்டது தான் புரட்சி அறிஞனின் பராக் கிரமமாகும். லெனினிடத்திலும் அந்தப் பராக்கிரமந்தான் காணப்பட்டது.

அவர் இறந்ததும் அவரைப் பற்றி எழுதினேன். அப்பொழுது நான் தாங்க முடியாத துக்கத்துடன் இருந் தேன். அதனால் அன்று படபடப்பாகவும், ஒன்றுக்கொன்று பொருந்தாமலும் எழுதும்படியாயிற்று. அத்துடன் வேறு சில காரணங்களை உத்தேசித்தும் நான் பூரணமாக எழுத இயலவில்லை. லெனின் கூர்ந்த திருஷ்டி படைத்தவர்; பெரிய ஞானி. ''பெரிய ஞானத்தில் பெரிய துக்கமும் அடங்கியிருக்கிறது.''

வெகு காலத்துக்கு அப்பால் உள்ளதை நோக்குவதே அவருடைய வழக்கம். 1919க்கும் 1921க்கும் நடுவில் அவர் சிலரைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போது, அவர்கள் பிற்காலத்தில் எப்படி மாறுவார்கள் என்பதைக் கொஞ்சங்கூடப் பிசகாமல்-தீர்க்க தரிசனமாகக் கூறினார். இந்தத் தீர்க்க தரிசனங்கள் எப்போதும் நமக்கு இதந்தருவனவாக இருப்பதில்லை. இவற்றை நம்ப வேண்டும் என்ற விருப்பமும் ஒருவனுக்கு ஏற்படுவது கிடையாது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவர் சந்தேகப் பட்டவையெல்லாம் பிற்காலத்தில் உண்மையாகவே மாறி விட்டன. நான் முன்னால் எழுதிய நினைவுக் குறிப்புகளில் இடைவெளிகளும் முரண்பாடுகளும் உள்ளன. இந்தக் குறைபாடுகளால், அந்தக் குறிப்புகளின் அரைகுறைத் தன்மை பெரிதாகிவிட்டது. நான் லண்டன் காங்கிரஸிலிருந்து* எழுத ஆரம்பித்திருக்க வேண்டும். அந்தக் காங்கிரஸில் சந்தேகம், அவநம்பிக்கை, வெளிப்படையான விரோதம், வெறுப்பு ஆகியவற்றின் பகைப்புலனில் லெனினுடைய ஸ்வருபத்தைத் தெள்ளத் தெளிவாகக் காண முடிந்தது.

## முதல் சந்திப்பு

என் மனக்கண் முன் துலாம்பரமாகக் காட்சியளிக்கிறது, லண்டன் நகரத்தின் ஒருகோடியில் உள்ள ஒரு மாதா கோவில். மரக்கட்டையால் கட்டப்பட்ட அதன் வெறும் சுவர்கள் யாதொரு அலங்காரமுமின்றி, படுமோசம் என்று சொல்லும் அளவுக்குக் காட்சியளித்தன. அதில் மிகவும் குறுகிய, உயரமான ஜன்னல்கள் வைக்கப்பட்ட ஒடுக்கமான ஒரு ஹால். அந்த ஹால், ஒரு ஏழைப் பள்ளிக்கூடத்தின் வகுப்பு அறையைப் போல் இருந்தது.

வெளியே நின்று பார்க்கும்போதுதான் ஏதோ மாதா கோவில் என்று சொல்லும்படியாக இருந்ததே தவிர, உள்ளே நுழைந்துவிட்டால் முற்றிலும் வேறு மாதிரியாகவே

---

* லண்டன் காங்கிரஸ்-1907-ல் லண்டனில் கூடிய ருஷ்ய சமதர்ம ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் கூட்டம் (அல்லது மகாநாடு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்தது. உள்ளே தேவாலயத்துக்குரிய அடையாளங்கள் எவையும் இல்லை. பாதிரியார் நின்று பிரசங்கம் செய்யும் மேடைகூட உயரமாக இல்லாமல் தாழ்ந்து இருந்தது. அது ஹாலின் கோடியில் இல்லாமல், வாசல் பக்கமாக இரண்டு கதவுகளுக்கும் மத்தியில் போடப்பட்டிருந்தது.

நான் இதற்குமுன் லெனினைப் பார்த்ததே இல்லை. அவரைப் பற்றி நான் எவ்வளவு படித்திருக்க வேண்டுமோ, அவ்வளவு படித்திருக்கவும் இல்லை. அவரைப் பற்றிக் கொஞ்சம் நஞ்சம் படித்திருந்ததும், எல்லாவற்றையும்விட அவரை நேரில் அறிந்தவர்கள் அவரைப்பற்றி உற்சாகம் ததும்பச் சொன்ன விஷயங்களும் சேர்ந்து, அவரிடத்தில் என்னை மிகுந்த ஈடுபாடு கொள்ளும்படி செய்தன. நாங்கள் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோது, அவர் சந்தோஷத்துடன் என் கையைப் பிடித்துக் குலுக்கினார். என்னைக் கூர்ந்து பார்த்தார். பழைய நண்பன் ஒருவன் பேசும் தோரணையில், வேடிக்கையாக, ‘‘நீங்கள் வந்தது ரொம்பவும் சந்தோஷம். உங்களுக்குச் சண்டை என்றால் ரொம்பவும் பிடிக்கும் என்று நினைக்கிறேன். இதோ இங்கே அருமையான தகராறு ஒன்று நடக்கப்போகிறது’’ என்று சொன்னார்.

லெனின் இந்த மாதிரி இருப்பார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அவர், ரகரத்தைத் தொண்டைக் குழியில் உருட்டி உச்சரித்தார். நிற்கும்போது கைகள் இரண்டையும் கட்டிக் கஷ்கத்தில் செருகிக் கொண்டு ஒரு மாதிரி ‘ஹாய்’யாக நின்று கொண்டிருந்தார். எப்படியும் அவர் ரொம்ப ரொம்பச் சாதாரண மனிதராகத் தோற்றம் அளித்தாரே ஒழிய, ஒரு தலைவர் என்று கருதுவதற்கு ஏற்றவாறு இல்லை. நான் இலக்கியப் பிரவர்த்தி உடையவன். அதனால் இப்படிப்பட்ட சிறு சிறு விவரங்களையெல்லாம் கவனிக்க நேரிடுகிறது. இந்த அவசியமான காரியமானது என்னைப் பொறுத்தமட்டிலும் ஒரு பழக்கமாக, சில சமயங்களில் எரிச்சல் தரும் பழக்கமாகக்கூட,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகிவிட்டது. ஜி. வி. பிளெக்கனாவை முதல் முதலாக நான் சந்தித்தபோது, அவர் கைகளைக் கட்டியவாறு நின்று கொண்டிருந்தார். மிகவும் கவனமான பார்வையுடன், எனக்குச் சற்றுச் சலிப்பு உண்டாக்கும் பார்வையுடன், என்னைப் பார்த்தார். அளவுக்கு மீறி வேலை செய்து களைத்துப்போன ஒரு வாத்தியார், அதிகப்பட்சமாக வந்து சேர்ந்த ஒரு மாணவனை அப்படித்தான் பார்ப்பது வழக்கம். அவர் சொன்னவற்றில், ''உங்கள் எழுத்துக்களில் எனக்கு மிகுந்த ஈடுபாடு'' என்ற சம்பிரதாய வாசகம் ஒன்றே ஒன்றுதான் என் ஞாபகத்தில் இருக்கிறது. பரஸ்பரம் மனம்விட்டு அளவளாவ வேண்டுமென்னும் விருப்பம், எனக்கோ அல்லது பிளெக்கனாவுக்கோ அந்தக் காங்கிரஸ் நடைபெற்று முடியும் வரையிலும் ஏற்படவே இல்லை.

எனக்கு முன்பாக ஒரு வழுக்கைத் தலை மனிதர் (லெனின்), கட்டுக்குட்டையாக வைரம் பாய்ந்த சரீரத்துடன் உள்ள ஒரு மனிதர் நின்று, ரகரங்களைத் தொண்டைக் குழியில் உருட்டிப் பேசிக்கொண்டிருந்தார். ஒரு கையால் என் கையைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் தம் நெற்றியைத் துடைத்துக் கொண்டார். அவருடைய நெற்றி, சாக்ரட்டீஸின் நெற்றியைப் போல் இருந்தது. தம் பிரகாசமான விழிகளால் என்னை அன்பாதரவோடு பார்த்துக் கொண்டிருந்தார். உடனே ''அன்னை'' என்ற என் புத்தகத்திலுள்ள குறைபாடுகளைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். அந்தப் புத்தகத்தின் மையெழுத்துப் பிரதி எஸ். பி லேடிஷ்னிகாவிடம் இருந்தபோது அவர் வாங்கி வாசித்திருக்க வேண்டும். நான் புத்தகத்தை முடிக்க வேண்டுமென்று அவசர அவசரமாக எழுதிக் கொண்டிருந்ததாக அவரிடம் தெரிவித்தேன். ஆனால் ஏன் அப்படி அவசரமாக எழுதினேன் என்பதை என்னால் சரிவர எடுத்துக் கூறமுடியவில்லை. லெனின் தான் சொன்னதை ஏற்றுக் கொண்டு தலையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆட்டினார். அப்புறம் நான் அவசரப்பட்டதன் காரணத்தை அவரே விளக்கமாக எடுத்துச் சொன்னார்: ''ஆம், அந்தப் புத்தகத்தைச் சீக்கிரம் எழுதி முடிக்கவேண்டும் என்பதே என் விருப்பமும். இப்படிப்பட்ட புத்தகம் அநேக தொழிலாளிகளுக்குத் தேவையாக உள்ளது அவர்கள் புரட்சி இயக்கங்களில் பங்கெடுத்துக் கொள்ளும்போது, தன்னுணர்வில்லாத நிலையிலும் குழப்பத்துடனும் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் ''அன்னை'' யைப் படிப்பதனால் மிகுந்த பிரயோஜனம் உண்டு. இன்றையத் தேவைக்கு மிகவும் பொருத்தமான புத்தகம்.'' என் புத்தகத்துக்கு அவர் கொடுத்த பாராட்டு இது ஒன்றுதான். ஆனால் என்னைப் பொறுத்தமட்டிலும் இது அபூர்வமான மதிப்பு வாய்ந்த பாராட்டாகும்.

பிறகு, ''அன்னை'' புத்தகம் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறதா என்றும், ருஷ்ய, அமெரிக்கத் தணிக்கையாளர்களால் அதில் கத்திரிப்பு வேலைகள் நடந்திருக்கின்றனவா என்றும் விசாரித்தார். ''அன்னை''யை எழுதிய ஆசிரியனைத் தண்டிக்க வேண்டுமென்றிருக்கிறார்கள் என நான் கூறினேன். இதைக் கேட்டதும் அவர் தம் புருவங்களைச் சுருக்கி விழித்தார். அப்புறம் சற்றே பின்பக்கமாகச் சாய்து கொண்டு, கண்களை மூடிய வண்ணம் ஒரேயடியாகச் சிரிக்கத் தொடங்கி விட்டார். இந்தச் சிரிப்பைக் கேட்டு எப். உரால்ஸ்கியும்-அவர்தான் என்று நினைக்கிறேன் மற்றும் மூன்று பேரும் அங்கு வந்து விட்டார்கள்.

எனக்கு ஒரே குதூகலம். பொறுக்கி எடுக்கப்பட்ட முந்நூறு கட்சி ஊழியர்களின் மத்தியில் நானும் ஒருவனாக இருந்தேன். அந்த முந்நூறு பேரும், ஸ்தாபன ரீதியாகத் திரண்டுள்ள ஒன்றரை லட்சம் தொழிலாளர்களால் காங்கிரஸுக்கு அனுப்பப்பட்டவர்கள் என்று எனக்குத் தெரிய வந்தது. என் கண் முன்பாக எல்லாக் கட்சித் தலைவர்களும் —பழைய புரட்சிக்காரர்களான பிளெக்கனாவ், அக்ஸெல்ராட், டியூஷ் ஆகியோரும் காட்சியளித்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என் குதூகலத்துக்குரிய காரணத்தைச் சொன்னால், வாசகரால் எளிதில் புரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். அதாவது, நான் இரண்டு வருஷ காலத்தை என் தாய் நாட்டை விட்டு வெளியிடத்திலே கழித்து வந்தபோது அடியோடு உற்சாகம் குன்றிப் போயிருந்தேன். என் மனக் கசப்பு பெர்லின் நகரில் ஆரம்பித்தது. அந்த நகரில்தான் நான் அநேகமாக எல்லா சமதர்ம ஜனநாயக வாதிகளையும் சந்தித்தேன். ஆகஸ்ட் பெபல், களைத்த ஆகிருதி படைத்த ஸிங்கர் ஆகியோர் அருகில் இருக்க, சுற்றிச்சூழ மதிப்புமிக்க பல பிரமுகர்கள் அமர்ந்திருக்க; நான் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டேன்.

## ஜெர்மன் சமதர்ம ஜனநாயக வாதிகளுடன்

விசாலமான வசதிகள் நிறைந்த ஒரு அறையில் உட்கார்ந்து நாங்கள் சாப்பிட்டோம். ஜன்னல்களில் நல்ல சரிகை வேலைப்பாடமைந்த திரைகள் தொங்கவிடப் பட்டிருந்தன. நாற்காலிகளின் முதுகில் சரிகைத் துணியைப் போர்த்தி மாட்டி வைத்திருந்தார்கள். உட்கார்ந்திருப்பவர்கள் அதில். சாயும்போது, நாற்காலிகளின் மெத்தையில் அழுக்கோ பிசு பிசுப்போ படியாமல் இருப்பதற்காக இந்த ஏற்பாடு. ஏற்பாடுகள் யாவும் திருப்திகரமாகவே இருந்தன. ஒவ்வொருவரும் பக்தி சிரத்தையுடன் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். அப்பொழுது மிகவும் ஆழ்ந்த குரலில், ஒருவரைப் பார்த்து ஒருவர் 'மால்ஸீட்' என்று சொல்லிக் கொண்டார்கள். 'மால்ஸீட்' என்ற பதத்தை இதற்கு முன் நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் 'மால்' என்ற பிரெஞ்சு வார்த்தைக்கு 'மோசமான' என்பது பொருள் என்றும், 'ஸீட்' என்ற ஜெர்மன் வார்த்தைக்குக் 'காலம்' என்பது பொருள் என்றும் எனக்குத் தெரியும்— ''மோசமான காலம்.''

www.tamilarangam.net



காட்ஸ்கியை "என் கனவு புருஷன்" என்று இரண்டு முறை குறிப்பிட்டார் எங்கர். கத்தி போன்ற மூக்குடன் இருந்த பெபல், ஏதோ தமக்குத் தாமே திருப்திகொண்ட மனிதராக எனக்குக் காட்சியளித்தார். ரேனிஷ் ஒயினையும் பீரையும் நாங்கள் அருந்தினோம். ஒயின் புளிப்பாகவும் வெது வெதுப்பாகவும் இருந்தது. சமதர்ம ஜனநாயக வாதிகள், ருஷ்யப்புரட்சியைப் பற்றியும், ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியை ஏதோ கை கொடுத்துத் தாங்கும் போஷகர்களைப் போல, கொஞ்சம் அனுதாபத்துடனும் அதே சமயத்தில் கசப்பாகவும் பேசினரார்கள். ஆனால் அவர்களுடைய கட்சியைப்பற்றி—ஜெர்மன் கட்சியைப்பற்றி—அவர்களுக்குப் பிரமாதமான அபிப்பிராயம்! யாதொரு மாசு மருவும் அற்ற கட்சி அது! பொதுவாக, அங்கு சுய திருப்தியைக் காட்டும் சூழ்நிலையே நிலவியது. நாற்காலிகள் கூட அவர்களைத் தாங்குவதில் சந்தோஷம் அடைந்திருப்பது போலத் தோற்றம் அளித்தன.

எனக்கும் ஜெர்மன் கட்சிக்கும் இருந்த தொடர்பு, அவ்வளவாகச் சுவாரஸ்யமில்லாத தொடர்பாகும். பார்வஸ் என்ற ஒருவன் அந்தக் கட்சியின் பிரதான அங்கத்தினனாக இருந்தான். அவன் பிற்காலத்தில் மகா அயோக்யனாக மாறிவிட்டான். "அதலபாதாளம்" என்ற என் நாடகத்தை, "ஸ்னானி" பதிப்பகம்* வெளியிட்டிருந்தது. நாடகக் கம்பெனிகள், உரிமை பெற்று அதை நடித்து வந்தன. அந்தக் கம்பெனிகள் நாடக வசூலில் குறிப்பிட்ட ஒரு பங்கை நாடக ஆசிரியருக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பங்குத் தொகையை வசூலிப்பதற்குரிய அதிகாரத்தை அளித்து, பார்வஸை ஸ்னானிப் பதிப்பகத்தார் அனுப்பி வைத்தார்கள். 1902-ம் வருஷத்தில், சட்ட விரோதமாக செபாஸ்டபூல் நகரத்துக்கு அவன் வந்திருந்த போது, ரயில்வே ஸ்டேஷனில் வைத்து அவனுக்கு இந்த

* போல்ஷ்விக்குகளின் சட்டபூர்வமான பதிப்பகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வசூல்—அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவன் வசூலிக்கும் தொகையைப் பின்கண்டபடி பகிர்ந்து கொள்ளுவது என்று ஏற்பாடு: வசூலித்த பணத்தில் 20 சத விகிதம் வசூலிப்பவனுக்கும் மீதித் தொகையில் கால் பங்கு நாடக ஆசிரியனாகிய எனக்கும் மிச்சத் தொகையெல்லாம் சமதர்ம ஜனநாயகக் கட்சி நிதிக்கும். இந்த நிபந்தனைகள் பார்வஸுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரியும். அத்துடன் இந்த நிபந்தனைகளைக் கண்டு அவன் சந்தோஷப்படவும் செய்தான். ஜெர்மனியில், நான்கு வருட காலத்தில் எல்லா நாடக மேடைகளிலும் இந்த நாடகம் நடைபெற்றிருந்தது. பெர்லின் நகரத்தில் மட்டும் அதை ஐந்நூற்றுக்கு மேற்பட்ட தடவைகள் நடித்திருக்கிறார்கள். ஆகவே பார்வஸ், ஆயிரக் கணக்கான மார்க்குகள்*வசூல் செய்திருக்கவேண்டும். வசூல் செய்த பணத்தை அவன் ''ஸ்னானி'' பதிப்பகத்துக்கு அனுப்பவில்லை. அதற்குப் பதிலாகப் பதிப்பகத்துக்கு, கே. பி. ப்யாட்னிட்ஸிக்கு, ஒரு கடிதம் மட்டும் எழுதியிருந்தான். அதில், தான் ஒரு இளம் பெண்ணுடன் இத்தாலிக்கு உல்லாசப் பிரயாணம் போய் வந்ததில் பணத்தையெல்லாம் செலவழித்துவிட்டதாக, கன குஷியோடு எழுதியிருந்தான். பிரயாணம் அருமையான உல்லாசப் பிரயாணமாகவே இருந்திருக்கும்; சந்தேகமில்லை. ஆனால் அவன் மொத்தப் பணத்தில் கால்வாசித் தொகையைத்தான் செலவழித்திருப்பான் என்று நினைத்து, மீதிப்பணம் சம்பந்தமாக ஜெர்மன் கட்சியின் மத்தியக் கமிட்டிக்குக் கடிதம் எழுதினேன். ஜி.பி. லேடிஸ்னிகாவ் மூலம் கடிதத்தை அனுப்பி வைத்தேன். ஆனால் மத்தியக் கமிட்டியோ, பார்வஸின் உல்லாசப் பிரயாண விஷயத்தைப் பொருட் படுத்தாமல் பேசாமல் இருந்தது. அப்புறம் தான், கட்சி அவனை நடவடிக்கை எடுத்துக் கீழே தள்ளி விட்டது என்று அறியலானேன். உண்மையில் அவனைக் காதைப் பிடித்து ஆட்டியிருக்க வேண்டும். சில காலத்துக்குப் பின் நான்

* மார்க்-ஜெர்மன் நாணயம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாரிஸ் நகரில் இருந்தபோது, பேரழகியான ஓர் இளம் பெண்ணை எனக்குச் சுட்டிக்காட்டி, பார்வஸ் இவளைத் தான் உல்லாசப் பிரயாணத்துக்குத் துணையாக இத்தாலிக்கு அழைத்துச் சென்றான் என்று சொன்னார்கள். ''ரொம்ப அருமையான பெண்! ரொம்ப அருமை!'' என்று நான் நினைத்துக்கொண்டேன்.

பெர்லின் நகரில் எழுத்தாளர்கள், ஓவியர்கள் கலா போஷகர்கள் முதலிய பலரையும் சந்தித்தேன். ஒவ்வொரு வரிடமும் ஒவ்வொரு வேறுபட்ட அளவில் சுயதிருப்தியும், தன் மதிப்பும் குடிகொண்டிருந்தன.

## அமெரிக்கப் பிரயாணம்

அமெரிக்காவில், மாரிஸ் ஹில்க்விட்டைப் பற்றி நிறையத் தெரிந்து கொள்ளமுடிந்தது. அவர் நியூயார்க் கவர்னர் பதவியையே தம் லட்சியமாகக் கொண்டு பாடுபட்டு வந்தார். அந்தச் சமயத்தில் சிறையிலிருந்து வெளிவந்த கிழவரான டெப்ஸ், சலித்து ஒதுங்கிய மனிதரைப் போல் ஒவ்வொருவரையும் - ஒவ்வொன்றையும் பற்றி ஏதாவது குறைகூறிய வண்ணமாக இருந்தார். அங்கே அநேக மனிதர்களைப் பார்த்தேன்; அநேக விஷயங்களைப் பார்த் தேன். ஆனால், ருஷ்யப் புரட்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஒரு மனிதரைக்கூட நான் சந்திக்கவில்லை. எல்லாவிடங்களிலும், ருஷ்யப் புரட்சியை ஐரோப்பிய வாழ்க் கையின் சாதாரண நடைமுறை நிகழ்ச்சி என்றும், ''சதா காலமும் காலரா, இல்லை என்றால் புரட்சி என்று ஏதாவது ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில்'' நிகழ்ந்த சாதாரண நடைமுறைச் சம்பவம் என்றும் கருதி னார்கள். அங்கே ஒரு ''அழகான பெண்'' வந்து சோஷலி ஸத்துக்குத் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண் டாள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமெரிக்காவுக்குப் போய், போல்ஷ்விக் கட்சிக்கு நிதி சேர்க்க வேண்டுமென்னும் யோசனையை முதல் முதலில் கூறியவர் எல். பி. கிராஸின். வி.வி. வரோவ்ஸ்கியை எனக்குக் காரியதரிசியாகவும், கூட்டங்கள் கூட்டும் ஆர் கனைஸராகவும் என்னோடு அனுப்பிவைக்க வேண்டும் என்ற யோசனை இருந்தது. அவருக்கு ஆங்கில பாஷை நன்றாகத் தெரியும். ஆனால் கட்சி அவருக்கு வேறு வேலை களைக் கொடுத்துவிட்டதால், அவருடைய ஸ்தானத்தை என். ஈ. புரேனின் ஏற்றுக்கொண்டார். இவருக்கு ஆங்கிலம் தெரியாது. அதனால் பிரயாணத்தின் போதும், அமெரிக் காவுக்குப் போய்ச் சேர்ந்த போதும் இவர் ஆங்கிலம் கற்றுக் கொண்டிருந்தார். என் பிரயாணத்தின் நோக்கம் என்ன என்பதைத் தெரிந்து கொண்டதும், சமதர்ம— புரட்சி வாதிகள் என் பிரயாணத்தில் சிறு பிள்ளைத் தனமான அக்கறை காட்டத் தொடங்கினார்கள். வரும் வழியில், செய்கோவ்ஸ்கியும், ஸிட்லோவ்ஸ்கியும் என்னைப் பின் லாந்தில் சந்தித்தார்கள். போல்ஷ்விக்குகளுக்கென்று நிதிவசூல் செய்யாமல் ''பொதுப் படையாகப் புரட்சிக் காகவே'' நிதிவசூல் செய்ய வேண்டும் என்று எனக்கு யோசனை கூறினார்கள். ''பொதுப் படையான புரட்சி'' எதற்கும் நிதிவசூல் செய்ய இயலாது என்று நான் மறுத்து விட்டேன். அதனால் அவர்கள் ''பாபூஷ்கா''*வை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள். கடைசியில் இரண்டு பேர் இரண்டு வேறுபட்ட புரட்சிகளுக்காக, பரஸ்பரம் யாதொரு தொடர்பும் சந்திப்பும்கூட இல்லாமல்

---

* ''பாபூஷ்கா''— இவளுடைய பெயர் காதரைன் ப்ரெஷ்கோவ்ஸ் காயா. இவளுடைய கோஷ்டியார் இவளை ருஷ்யப் புரட்சியின் ''பாட்டி'' என்று அழைத்து வந்தார்கள். யுத்த காலத்தில் சமதர்ம-தேசபக்தையாக இருந்தாள். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு சோவியத் யூனியனின் கொடிய விரோதியாக மாறினாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமெரிக்காவில் நிதிவசூல் செய்யும்படி நேர்ந்தது. இந்த இரண்டு நிதிகளில் எது அவசியமானது, எது நல்லது என்பதை அறிந்து கொள்ளுவதற்குரிய கால அவகாசமோ, அல்லது ஆர்வமோ அமெரிக்கர்களுக்கு இல்லை. ''பாபூஷ்கா''வைப் பற்றி ஏற்கெனவே அவளுடைய அமெரிக்க நண்பர்கள் நன்றாக விளம்பரம் செய்து வைத்திருந்தார்கள். அதனால் அவளை எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அதே சமயத்தில், ஜார் அரசாங்கத்தின் ஸ்தானீகராலயம் என் மீது ஒரு அவதூறைச் சுமத்திப் பரப்பியிருந்தது.* அமெரிக்கத் தோழர்களும் கூட ருஷ்யப் புரட்சியை ஒரு ''உள் நாட்டு நிகழ்ச்சி''யாக, உருப்பெறுவதற்குச் சாத்தியமில்லாமல் சிதையும் ஒரு நிகழ்ச்சியாகக் கருதி, நான் பொதுக் கூட்டங்களில் வசூல் செய்த பணத்தைத் ''தாராளமாக''க் கையாண்டு வந்தார்கள். மொத்தத்தில் நான் வசூல் செய்த பணம் மிக மிகச் சொற்பம். பத்தாயிரம் டாலர்களுக்கும் குறைவு. செய்திப் பத்திரிகைகளுக்கு எழுதிக் கொஞ்சம் பணம் பார்க்கலாம் என்று தீர்மானித்தேன். ஆனால் அமெரிக்காவிலும் ஒரு பார்வஸ் வந்து சேர்ந்தான். ஆகவே, என் அமெரிக்கப் பிரயாணம் தோல்வியில் முடிந்தது. ஆனாலும் அங்கேதான் ''அன்னை'' நாவலை எழுதினேன். அந்த நாவலில் தவறுகளும் குறைகளும் காணப்பட்டால், நான் அதை அங்கே எழுதியதுதான் அதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

---

* கார்க்கி நிதிவசூலுக்காக அமெரிக்காவுக்கு வந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டதும், அவரைச் சமூகப் பிரஷ்டம் செய்வதற்காகத் திட்டமிட்டு வேலை செய்யத் தொடங்கினார்கள். கார்க்கியின் கல்யாண சம்பந்தத்தை வியாஜமாகக் கொண்டே இந்த முயற்சியைத் தொடங்கியிருக்கலாம். இதன் பலனாக, கார்க்கி தாம் தங்கியிருந்த ஹோட்டலைக் காலி செய்து விட்டு ஒரு நண்பரின் வீட்டில் போய் தங்கும்படி நேரிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்புறம் இத்தாலிக்குப் புறப்பட்டேன். காப்ரித் தீவுக்கும் போய்ச் சேர்ந்தேன். அங்கே ருஷ்யப் புத்தகங்களையும், செய்திப் பத்திரிகைகளையும் படிப்பதில் மூழ்கி விட்டேன். இதனால் ஏற்கனவே குன்றியிருந்த என் உற்சாகம், அதிகமாகக் குறையத் தொடங்கியது. தனியாகப் பிடுங்கி எடுக்கப்பட்ட ஒரு பல்லுக்கு, உணரும் சக்தி இருக்குமென்றால், அதற்கு எனக்கு இருந்தது போன்ற தனிமை உணர்ச்சியே இருந்திருக்கும். பிரபலமானவர்களெல்லாம் ஒரு அரசியல் மேடையிலிருந்து மற்றொரு அரசியல் மேடைக்குப் பல்டி அடித்து வந்தது, என்னை ஒரேயடியாகப் பிரமிக்க வைத்து விட்டது.

சில புரட்சிக்காரர்கள் ருஷ்யாவிலிருந்து வெளிக் கிளம்பி உதிரிகளாக வந்து கொண்டிருந்தார்கள். நசுக்கப் பட்டும், பயமுறுத்தப்பட்டும், தங்கள் மீதும் தங்களை "உதவாக்கரை முயற்சி"யில் ஈடுபடுத்தியவர்கள் மீதும் கோபம் கொண்டவர்களாக வந்து கொண்டிருந்தார்கள்.

"எல்லாம் ஒழிந்துபோய் விட்டது. ஒவ்வொருவனையும் நசுக்கியோ, கொன்றோ, நாடு கடத்தியோ, சிறையிலிட்டோ ஒழித்துக் கட்டி விட்டார்கள்" என்று சொன்னார்கள் நாடோடிகளாகக் கிளம்பி அலையும் புரட்சிக்காரர்கள்.

பெரும்பாலான சங்கதி பெரிய கேலிக் கூத்தாகவே இருந்தது. ஆனால் குதூகலத்தின் சாயை மட்டும் தென்படவே இல்லை. ருஷ்யாவிலிருந்து வந்த ஒரு திறமை மிக்க எழுத்தாளர், நான் "அதலபாதாளம்" என்ற நாடகத்தில் வரும் லூக்கா என்ற நாடக பாத்திரம் போல நடந்து கொள்ளுவதாகச் சொன்னார். இளைஞர்களின் மத்தியில் சென்று, இனிப்பாகப் பேசி அவர்களைக் கவர்ந்திழுத்து, என்னை நம்பும்படி செய்து, அப்புறம் அவர்கள் மண்டையில் அடிவாங்கியதும் நான் ஓட்டமெடுத்து விட்டதாக அவர் கூறினார். மற்றொருவர், நான் கொள்கைகளைப் பேசிப் பேசி உருப்படாமல் போனதாகவும், உள்ள சரக்குகளெல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லாம் காலியாகிப்போன வெற்றுத் தோட்டாவாக நான் இப்போது இருப்பதாகவும் சொன்னார். அத்துடன், மன்னரின் தலைமையில் நடைபெறுகிறது என்ற ஒரே காரணத்திற்காக நான் நாட்டியத்தின் பெருமையையே ஒப்புக்கொள்ள மறுக்கிறவன் என்றும் என்னைக் கூறினார். மொத்தத்தில் முட்டாள்தனமான, கேலிக் கூத்தான விஷயங்கள் பலவற்றை அவர்கள் சொன்னார்கள். ருஷ்யா விலிருந்து தொத்து நோயைப் பரப்பும் அபாயகரமான புழுதி பறந்து வருவதாக எனக்கு அடிக்கடித் தோன்றிக் கொண்டிருந்தது.

அப்புறம், திடீரென்று நான் ருஷ்ய சமதர்ம-ஜனநாயகக் கட்சியின் மகாநாட்டில் (லண்டன் காங்கிரஸில்) கலந்து கொண்டேன். இந்தத் திடீர் நிகழ்ச்சி ஏதோ ஒரு கட்டுக் கதையில் நடைபெறக்கூடிய சம்பவம் போலவே எனக்குத் தோன்றியது. அதனால், அந்த நாள் எனக்கு ஒரு மகத்தான, இன்பகரமான, நாளாகவே இருந்தது!

## லண்டன் காங்கிரஸில்

என்னுடைய சந்தோஷமெல்லாம் முதல் கூட்டம் வரையில்தான் நீடித்தது. அப்புறம் அவர்கள் "தற்கால நடைமுறை" பற்றி, ஒருவரை ஒருவர் மென்னி பிடித்து விவாதிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த விவாதங்களின் காரணமாக ஏற்பட்ட வெறியையும், ஆவேசத்தையும் கண்டு என் குதூகலமெல்லாம் பறந்து போய்விட்டது. இதற்கு முக்கிய காரணம் கட்சியானது சீர்திருத்தக் கோஷ்டி என்றும், புரட்சிக் கோஷ்டி என்றும் பிளவு படுகிறதே என்பதல்ல. இப்படிப்பட்ட பிளவை 1903-லேயே நான் எதிர்பார்த்திருந்தேன். என் குதூகலம் குன்றியதன் காரணம் என்ன? சீர்திருத்தவாதிகள் லெனினிடம் காட்டிய விரோத மனப்பான்மைதான். தண்ணீர் நிரம்பிய ரப்பர்க் குழாயைப் பலமாக அழுத்தியதும் எப்படித் தண்ணீர் கசிந்து வெளியே பாய்கிறதோ, அதுபோல அவர்களின்

www.tamilarangam.net



வாய்மொழிகளில் அந்த விரோத மனப்பான்மை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

சொல்லப்பட்ட விஷயம் முக்கியமானதாக எப்பொழுதும் இருந்துவிடுவதில்லை; அது எந்தத் தோரணையில் சொல்லப்பட்டது என்பதே சில சமயங்களில் முக்கியமானதாக ஆகிவிடுகிறது. பிராடஸ்டெண்ட் பாதிரியைப்போல், நன்கு பொத்தான் மாட்டிய இறுக்கமான கோட்டைப் போட்டுக் கொண்டு மகாநாட்டைத் திறந்து வைத்தார் பிளெக்கனாவ். பாதிரியாரைப் போலவே அவர் பேசினார். தம் கருத்துக்கள் மறுக்க முடியாதவை என்ற நம்பிக்கையுடனும், தம்முடைய ஒவ்வொரு வார்த்தையும், வார்த்தைகளின் நடுவில் இடைவெளியாக விழும் மௌனமும் அதிக மதிப்பு வாய்ந்தவை என்ற நினைப்புடனும் அவர் பேசினார். மேடைமீது ஏறி நின்றுகொண்டு, அழகு அழகாக உருட்டித் திரட்டப்பட்ட தம் வாசகங்களை நன்றாக அளந்து, திறமையாக வெளியிட்டுக் கொண்டிருந்தார். போல்ஷ்விக் பெஞ்சுகளில் ஏதேனும் ஒரு அரவம் கிளம்பினாலும், யாராவது தம் தோழருக்குக் 'குசுகுசு' என்று எதையாவது சொன்னாலும் அந்த மதிப்பு வாய்ந்த வாசாலகர் தம் பேச்சைச் சற்று நிறுத்தி, அந்தப் பக்கமாகத் திரும்பி, ஊசியால் குத்துவது போலப் பார்ப்பார். அவருடைய கோட்டுப் பொத்தான்களில் ஒன்றின்மீது அவருக்கு ரொம்ப ரொம்பப் பிரியம். அதனால் எப்பொழுதும் அதைத் தம் விரலால் தடவிக் கொடுத்துக் கொண்டும், பேச்சை அவ்வப்போது நிறுத்தும் சமயங்களில் மின்சாரப் பொத்தானை அழுத்துவதுபோல அதை அழுத்திக்கொண்டும் இருந்தார். இப்படி அழுத்துவதுதான் அவருடைய பேச்சின் இழையை அங்கங்கே கத்திரித்து விடுகிறதோ என்றும் தோன்றியது. ஒரு தடவை, யாரோ கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்க எழுந்த பிளெக்னாவ், தம் கைகளை மடக்கிக் கொண்டு உரத்த குரலிலும் மிக அலட்சியமாகவும், 'ஹா!' என்று கத்தினார். உடனே போல்ஷ்விக் பெஞ்சில் அமர்ந்திருந்த ஊழியர்கள் சிரித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டார்கள். பிளக்கனாவ் தம் புருவங்களை உயர்த்திப் பார்த்தார். அவருடைய கன்னம் வெளுத்துப் போய்விட்டது நான் மேடைக்குப் பக்கவாட்டில் அமர்ந்திருந்ததால் அவருடைய கன்னத்தைப் பார்க்க முடிந்தது.

முதல் கூட்டத்தில் பிளெக்கனாவ் பேசிக்கொண்டிருக்கும் போது, போல்ஷ்விக் பெஞ்சில் ஒரேயடியாக அமைதியற்றுப் போய் அதிகமான பரபரப்புடன் உட்கார்ந்திருந்தவர் லெனின்தான். ஒரு சமயம் பொறுக்க முடியாத குளிரினால் 'கொடுங்குகிறவர்போல' உடம்பைக் குறுக்கிக்கொண்டும், மற்றொரு சமயம் உஷ்ண மிகுதியைத் தாங்க முடியாதவர் போலக் கால் கைகளைப் பரத்திப் போட்டுக் கொண்டும் உட்கார்ந்திருந்தார். சட்டைக் கைகளில் விரல்களைத் திணித்துக் கொண்டும், தாடையைத் தேய்த்துக் கொண்டும், காலை ஆட்டிக் கொண்டும், எம். பி. டாம்ஸ்கி*யிடம் எதையோ குசுகுசுத்துக் கொண்டும் இருந்தார் லெனின். கட்சியில் ரிவிஷனிஸ்டுகளே** கிடையாது என்று பிளெக் கனாவ் சொன்னபோது, லெனின் குனிந்து உட்கார்ந்தார். அவருடைய வழுக்கைத் தலை சிவந்து விட்டது; மௌன மானசிரிப்பால் அவருடைய புஜங்கள் குலுங்கின. அவரை அடுத்தும், அவருக்குப் பின்புறமாகவும் உட்கார்ந்து கொண்டிருந்த ஊழியர்களும் புன்னகை செய்தார்கள். ஹாலின் பின் கோடியிலிருந்து ஒரு குரல், ''அப்படியானால் அங்கே உட்கார்ந்திருப்பவர்களெல்லாம் யார்?'' என்று இரைந்து கேட்டது.

---

* 1937-ம் வருஷ நீதிமன்ற விசாரணையில் இவர் ஐந்தாம் படை வேலை செய்த குற்றவாளி என நிரூபண மாயிற்று.

** ரிவிஷனிஸ்டுகள் - சீர்திருத்தவாதியான பெர்ன்ஸ் டீன், மார்க்ஸிஸத்தைத் ''திருத்தியமைக்கும்'' முயற்சியில் ஈடுபட்டார். அவரை ஆதரித்தவர்களே ரிவிஷனிஸ்டுகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தியோடார் டான் என்ற குள்ளமான மனிதர் எழுந்து பேசத் தொடங்கினார். தமக்கும் உண்மைக்கும் உள்ள தொடர்பு, தகப்பன்-மகள் தொடர்பு போன்றது எனக் கருதும் ஒருவனைப் போல அவர் பேசினார். அவர் இந்த அபிப்பிராயத்தைத் தமக்குத்தாமே கற்பித்துக்கொண்டு, அதை அனுதினமும் வளர்த்துக்கொண்டும் வந்தார். அத்துடன் தாம் காரல் மார்க்ஸின் அவதாரம் எனவும், போல்ஷ்விக்குகள் அரை குறைப் படிப்புள்ள, ஒழுங்கு மரியாதை தெரியாத சிறு குழந்தைகள் எனவும் அவர் கருதிக் கொண்டிருந்தார். மென்ஷ்விக்குகளுடன் அவர்கள் கொண்டிருந்த உறவை வைத்தே இந்த உண்மையை அளந்து விடலாம். ''மிகச் சிறந்த மார்க்ஸீய சிந்தனையாளர்''களெல்லாம் மென்ஷ்விக்குகளின் மத்தியில் இருப்பதாக அவர் கூறினார்.

மிக மிக வெறுப்புடன், ''நீங்கள் மார்க்ஸிஸ்டுகள் அல்ல; ஆம், நீங்கள் மார்க்ஸிஸ்டுகள் அல்ல'' என்று சொல்லிவிட்டுத் தம் முஷ்டியை முன் பக்கமாக நீட்டினார். அப்போது ஊழியர்களில் ஒருவர், ''எப்பொழுது நீங்கள் பழைய படியும் தாராளவாதிகளுடன் (லிபரல்ஸ்) தேநீர் விருந்து சாப்பிடப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்.

மார்டோவ் பேசியது முதல் கூட்டத்தில்தானா இல்லையா என்பது எனக்குச் சரியாக ஞாபகமில்லை மிகவும் கவர்ச்சிகரமான தோற்றம் படைத்த இந்த மனிதர் வாலிப வேகத்துடன் பேசலானார். கட்சியில் அபிப்பிராய வேற்றுமை உண்டாகிப் பிளவு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சோக நாடகத்தைக் கண்டு அவர் மிகவும் வேதனையடைந்திருந்தார். உடம்பையெல்லாம் ஆட்டிக் கொண்டும், முன்னும் பின்னுமாக அசைந்து கொண்டும், தம் சட்டையின் காலரைப் படபடப்புடன் சுழற்றிக் கொண்டும், கைகளை ஆட்டிக் கொண்டும் பேசினார் மார்ட்டோவ். அவர் உள்ளே போட்டிருக்கும் சட்டையின் கைகள், மேல் கோட்டின் கைகளின் வழியாக வெளியே வந்து தொங்கின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உடனே தம் கைகளை மேலே தூக்கி, சட்டைக் கைகள் உள்ளே தம் பழைய இடத்திற்குப் போகும் வண்ணம் குலுக்கினார். அவர் விவாதம் செய்வது போலப் பேசவில்லை; வற்புறுத்திக் கூறுகிறவர் போல வேண்டிக் கேட்டுக் கொள்கிறவர்போலத்தான் பேசினார். ''கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கட்சி மிகவும் பலவீனமாக இருக்கிறது. அது பிளவைத் தாங்காது. ஊழியர்கள், மற்ற எதையும் விட முதலில் சுதந்திரம் அடைய வேண்டும். அவர்கள் மனம் உடைந்து போகும்படி நாம் விட்டுவிடக் கூடாது.'' பிரசங்கத்தின் முதல் பகுதியில் சில இடங்களில் அவர் மட்டுக்கு மிஞ்சிய படபடப்புடன் பேசினார். வார்த்தைகளை ஏராளமாகக் கொட்டியதால் அவருடைய கருத்து இன்னதென்று தெளிவு படாமல் போய் விட்டது. அத்துடன் அவர் அங்கு நின்ற நிலையே கொஞ்சம் கூட்டப் பிடிக்காமல் இருந்தது. பேச்சின் முடிவில் அவர் யாதொரு அவசியமும் இல்லாமலே, மேலோங்கிய ''போராட்ட''க் குரலில் உணர்ச்சி வேகத்துடன் பேச ஆரம்பித்தார். ஆயுதந்தாங்கிய புரட்சிக்கு அடிகோலும் சகல முயற்சிகளையும், தீவிரவாதிகளையும் எதிர்த்துக் கூப்பாடு போட்டவர். அப்பொழுது போல்ஷ்விக் கோஷ்டியிலிருந்து ஒருவர், ''நீங்கள் சொல்வது ரொம்ப சரி!'' என்று இரைந்து சொன்னது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அந்தச் சமயத்தில் டாம்ஸ்கி, ''தோழர் மார்ட்டோவ் மனச்சாந்தி பெற வேண்டுமென்பதற்காக நாங்கள் எங்கள் கைகளை வெட்டி எறிய வேண்டுமா?'' என்று கேட்டதாக எனக்குத் தோன்றுகிறது. மார்ட்டோவ் பேசியது, முதல் கூட்டத்தில் தானா இல்லையா என்பது எனக்கு ஞாபகமே இல்லை. அங்கு வந்திருந்தவர்கள் பற்பல தினுசாகப் பேசினார்கள் என்பதைத் தெரிவிக்கவே இதைக் குறிப்பிடுகிறேன்.

மார்ட்டோவ் பேசி முடித்த பிறகு, தொழிலாளிகளின் அறையில் உணர்ச்சி உத்வேகமற்ற விவாதம் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவாதம் இருள் மூடிப்போயிருந்தது. ''உங்கள் கட்சியில் மார்ட்டோவ் இருக்கிறார்! அவர் 'இஸ்க்ரா'* கோஷ்டியைச் சேர்ந்தவர்'' என்றும், ''நம் அறிவாளிகள் தம் சுயரூபத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றும் அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

## லெனின் பேசுகிறார்

ரோஸா லக்ஸம்பர்க் வாசாலகத் திறமையுடன் உணர்ச்சிகரமாகவும், கடுமையாகவும், குத்தலாகவும் பேசினாள். அப்புறம் லெனின் மேடைமீது ஏறினார்; கரகரப்பான குரலில் அடித் தொண்டையிலிருந்து ''தோழர்களே!'' என்று முழங்கினார். முதலில் அவருடைய பேச்சு மோசமாக இருப்பது போல எனக்குத் தோன்றிற்று. ஒரு நிமிஷம் கழித்ததும் நானும், ஒவ்வொருவரும் அவருடைய பேச்சில் பரிபூரணமாக ஈடுபட்டு விட்டோம். சிக்கலான அரசியல் பிரச்னைகள் மிகவும் லகுவான முறையில் எடுத்துக் கூறப்படுவதை அப்பொழுதுதான் நான் முதல் முதலாகக் கண்டேன். சொல்லலங்காரத்துடன் பேசவேண்டுமென்ற பிரயாசை எதுவும் இல்லாமல் ஒவ்வொரு வார்த்தையையும் திருத்தமாகப் பேசினார். அதன் பொருளும் அதிசயிக்கத் தக்கவாறு மிகமிக வெளிப்படையாக இருந்தது. அவர் தம் பேச்சின் மூலமாக அசாதாரணமான முறையில் உள்ளத்தைக் கவர்ந்து விட்டார். அது எப்படி என்று வாசகருக்குச் சித்திரித்துக் காட்டுவது மிகவும் சிரமம்.

---

* இஸ்க்ரா-19000-லிருந்து 1903 வரை இஸ்க்ரா பத்திரிகை லெனினுடைய தலைமையில் நடந்து வந்தது. ருஷ்ய சமதர்ம ஜனநாயகப் பத்திரிகையாக அது நடை பெற்று வந்தது. லெனின் அதிலிருந்து 1903 நவம்பரில் ராஜிநாமா செய்து விலகி விட்டார். அப்புறம் அது மென்ஷ் விக்குகளின் பத்திரிகையாக 1905 வரை நடைபெற்று வந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன் பக்கமாகத் தம் கையை நீட்டி, அதைச் சற்று மேல் நோக்கி ஏந்திக் கொண்டு அவர் பேசினார். அப்பொழுது அவர் ஒவ்வொரு வார்த்தையையும் தம் கையால் நிறுத்துப் பார்த்து வெளியிடுவது போலவும், எதிரிகளின் வாதங்களை முறத்தில் போட்டுப் புடைத்தெடுப்பது போலவும் இருந்தது. எதிரிகளின் வாதங்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தம்முடைய கட்சியை எடுத்துச் சொன்னார். தொழிலாளி வர்க்கத்தின் உரிமையையும், கடமையையும் பற்றிக் கூறும்போது, தொழிலாளர்கள் தாங்கள் சொந்த வழியைத்தான் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமே ஒழிய, தாராள வாதிகளான பூர்ஷ்வாக்களோடு கைகோத்துக் கொண்டு செல்வதோ, அல்லது அவர்களைப் பின்பற்றிச் செல்வதோ தவறு என்று கூறினார். அவர் சொன்ன இந்த விஷயங்கள் யாவும் அசாதாரணமாக இருந்தன. ஆனால் அவர் தம்முடைய மனோபீஷ்டப்படி இவ்வாறு சொல்லாமல், சரித்திரத்தின் மனோபீஷ்டப்படி சொல்லுவது போலவே இருந்தது. அவருடைய பேச்சின் ஒருமைப்பாடு, பூரணத்துவம், நேர்முகமான பிரயோகம், ஆற்றல் ஆகியவையும், மேடையில் நின்ற அவருடைய தோற்றமும் சேர்ந்து ஒரு மகத்தான ஓவியம் போலவே இருந்தன. அந்த ஓவியத்தில் சகலமும் அடங்கியிருந்தது. அதில் தேவைக்கு மிஞ்சிய அம்சங்கள் இல்லை; அதில் ஏதேனும் அலங்கார வேலைப்பாடுகள் காணப்பட்டாலும், அவை கண்ணுக்கு அலங்காரங்களாகக் காட்சியளிக்கவில்லை. முகத்தில் இரண்டு கண்கள் இருப்பதும் கையில் ஐந்து விரல்கள் இருப்பதும் எப்படி இயல்பாகவும், இன்றியமையாதவையாகவும் இருக்கின்றனவோ அது போலவே அந்த ஓவியத்தில் அலங்காரங்களும் அமைந்திருந்தன. அவருக்கு முன்னால் பேசியவர்களை விட அவர் சுருக்கமாகவே பேசினார். ஆனால் அவர் பேச்சுத்தான் கூட்டத்தின் மனதில் அதிகமாகப் பதிந்திருந்தது. இது என் ஒருவனுடைய அபிப்பிராயம் மட்டுமல்ல. எனக்குப் பின்னால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்தவர்கள், ''ஓ, இவருடைய பேச்சில் விஷயச் சிறப்பு இருக்கிறது''. என்று உற்சாகத்துடன் 'குசுகுசு' என்று பேசிக்கொண்டதும் எனக்குக் கேட்டது. அவர்கள் பேசிக் கொண்டது உண்மை. அவருடைய தீர்மானங்கள் செயற் கையாக இட்டுக் கட்டியவையல்ல; அவை தமக்குத் தாமே, இன்றியமையாத முறையில் வளர்ந்து அவ்வாறு உருவாகி யிருக்கின்றன. லெனினுடைய பேச்சில் மென்ஷ்விக்குகளுக்கு ஒரே வெறுப்பு; தங்கள் கடுகடுப்பை வெளிப்படையாக அவர்கள் காட்டிக் கொண்டார்கள். பேச்சின்மீது அவர்கள் காட்டிய வெறுப்பைவிட, லெனினிடத்தில் காட்டிய வெறுப்பு அதிகம். புரட்சி சித்தாந்தம் பரிபூரண வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும், நடைமுறை வேலையை அந்தச் சித்தாந்தத்தைக் கொண்டு சீர் தூக்கும்படியாக இருக்க வேண்டும் என்று கூறினார் லெனின். கேட்பவர்கள் 'சரி' என்று ஏற்றுக்கொள்ளும் வண்ணம் இந்த அத்தியாவசி யத்தை அவர் வற்புறுத்தும் போதெல்லாம், மென்ஷ்விக் குகள் அதிகக் கடு கடுப்புடன் நடுநடுவே பேச்சுக்கு இடைஞ் சலாகப் பின் கண்டவாறு சந்தடி பண்ணிக் கொண்டிருந் தார்கள்.

''தத்துவ விசாரம் செய்வதற்காக மகாநாடு கூட்டப் படவில்லை!'' ''வாத்திமைத்தனம் பண்ண வேண்டாம்! நாங்கள் பள்ளிப்பிள்ளைகள் அல்ல!''

அப்பொழுது நெட்டையான ஒரு தாடிக்கார ஆசாமி எழுந்தான். பார்ப்பதற்குக் கடைக்காரன் மாதிரி இருந்தது. தன் இருப்பிடத்திலிருந்து துள்ளிக் குதித்து, ''சதிகாரர்கள்! புத்தி கெட்டவர்கள்!'' என்று கூப்பாடு போட்டான். ரோஸா லக்ஸம்பர்க் குற்றம் சாட்டும் தோரணையில் தன் தலையை அசைத்தாள். பின்னால் நடந்த ஒரு கூட்டத்தில் அவள் மென்ஷ்விக்குகளைப் பார்த்து, ''நீங்கள் மார்க்ஸி ஸத்தின் அடிப்படையில் நிற்கவில்லை; அதற்குப் பதிலாக அதன்மீது உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்கள். ஏன்- அதன்மேல் நீங்கள் படுத்து விட்டீர்கள்'' என்றாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மகாநாட்டு மண்டபத்தில் கெட்ட எண்ணமும், எரிச்சலும், நையாண்டியும், குரோதமும்தான் நிறைந்திருந்தன. லெனினைப் பார்த்துக் கொண்டிருக்கும் விழிகளில் நூறு தினுசான குணபாவங்கள் பிரதிபலித்தன. இந்த விரோதச் செயல்களில் அவர் அசைந்து கொடுத்ததாகவே தெரியவில்லை. குதூகலத்துடனும், அமைதியாகவும்தான் அவர் பேசினார். புறத்தோற்றத்திற்கு இவ்வளவு அமைதியோடு நடந்து கொண்டதன் காரணமாக, அவருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைச் சில தினங்களுக்குப் பிறகு நான் அறியலானேன். ‘‘பூரண வளர்ச்சி பெற்ற சித்தாந்தத்தின் உதவியினால்தான், கட்சியின் நடுவில் ஏற்படும் வேற்றுமைகளுடைய காரணங்களைக் கண்டறிய முடியும்’’ என்று அவர் தெரிவித்த இயல்பான விஷயத்திற்கு இப்படிப்பட்ட எதிர்ப்பு காண்பிக்கப்பட்டது விசித்திரமாகவும், பரிதாபகரமாகவும் இருந்தது. மகாநாட்டின் போது, நாளுக்கு நாள் லெனினுக்கு அதிக பலமும், அதிக மனோதிடமும், அதிக நம்பிக்கையும் கிடைத்து வருவது போல எனக்குத் தோன்றியது. முந்திய நாள் பேசியதைவிட மறுநாள் அதிக உறுதியுடன் அவர் பேசினார். கட்சியில் இருந்த போல்ஷ்விக் கோஷ்டி, ஒரு நாளுக்கு ஒரு நாள் அதிக மன உரம் பெற்று வந்தது; தளர்ந்து போய் குனிந்து கொடுக்காத தீரத்தைப் பெற்றது. இது ஒரு புறமிருக்க, ரோஸா லக்ஸம்பர்க் மென்ஷ்விக்குகளை எதிர்த்து நிகழ்த்திய ஆற்றல் சான்ற, அழகிய பிரசங்கமும், ‘‘தொழிலாளர் காங்கிரஸ்’’ என்னும் அபிப்பிராயத்தை எதிர்த்துச் சம்மட்டி அடி கொடுத்துப் பேசிய எம். பி. டாம்ஸ்கியின் கடுமையான பிரசங்கமும் என்னை மிகவும் கவர்ந்து விட்டன.

## லெனினும் தொழிலாளர்களும்

ஓய்வு நேரங்களை லெனின் தொழிலாளர்களோடு கழித்தார். அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிய சிறு சிறு விவரங்களையும் விசாரித்துக் கொண்டிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''மனைவிமார் எப்படி இருக்கின்றனர்? வீட்டு வேலையிலேயே மூழ்கிக் கிடக்கிறார்களா? தங்கள் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு எதையாவது படிக்கிறார்களா? எதைப் பற்றியாவது தெரிந்து கொள்ளுகிறார்களா?'' என்றெல்லாம் விசாரித்தார்.

லெனினை இந்த மகாநாட்டில் முதல் முதலாகப் பார்த்த சில தொழிலாளர்கள், ஒரு நாள் 'ஹைட் பார்க்' கில் உட்கார்ந்து, அவருடைய குண விசேஷத்தைப் பற்றி சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவன், கேட்போர் மனதில் பதியும் வண்ணம் பின்கண்டவாறு சொன்னான்:

''எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன்: ஐரோப்பாவிலும் தொழிலாளர் சார்பில் அவரைப்போன்ற புத்தி சூட்சமம் நிறைந்த ஆசாமிகள் இருக்கக் கூடும். ஆனால் அவரைப் போல, பார்த்த இடத்தில் அப்படியே நம்மை ஆட்கொள்ளக்கூடிய ஒரு ஆசாமியை நாம் பார்க்க முடியும் என்று நான் நம்பவில்லை.''

அப்பொழுது வேறொருவன் புன்னகை செய்து கொண்டே, ''அவர் நம்முள் ஒருவர். ஆம், சந்தேகமில்லை'' என்று சொன்னான்.

''அதைப் போல பிளெக்கனாவும் நம்முள் ஒருவர்தான்'' என்று மற்றொருவன் சொன்னான். அதற்குச் சரியான முறையில் ஒருவன் பதில் சொன்னான்:

''ஆனால் பிளெக்கனாவ் எப்போதும் நமக்குப் போதனை செய்து கொண்டிருக்கிறார்; அதிகாரதோரணையில் நமக்குப் போதிக்கிறார். ஆனால் லெனினோ, உண்மையான தலைவராகவும் தோழராகவும் இருக்கிறார்.'' இவ்வாறு அவன் கூறிய பிறகு, ஒரு இளைஞன் தமாஷாக ''பிளெக்கனாவின் கோட் அவர் உடம்புக்குப் போதாமல் இறுக்கமாக இருக்கிறது'' என்று சொன்னான்.

www.tamilarangam.net



ஒரு சமயம் நாங்கள் ஹோட்டலுக்குப் போய்க்கொண்டிருந்தோம். போகும் வழியில் மென்ஷ்விக் கோஷ்டியைச் சேர்ந்த ஒரு தொழிலாளி, ஏதோ ஒரு கேள்வி கேட்பதற்காக லெனினை நிறுத்தினான். மற்ற எல்லோரும் மேலே நடந்துகொண்டிருக்க, லெனின் மட்டும் அங்கே நின்றுவிட்டார். ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு புருவத்தை நெரித்துக்கொண்டே லெனின் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார். ''இப்படிப்பட்ட அம்மாஞ்சிகளும் கூடக் கட்சி மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டது விசித்திரந்தான். அவன் என்னைப் பார்த்து, கட்சிக்குள் இந்தப் பிளவு ஏற்படக் காரணம் என்ன?' என்று கேட்டான். 'இதுதான் காரணம்: அதாவது உன் நண்பர்கள் 'பார்லிமெண்ட் ஸ்தானங்களை அடைய வேண்டுமென்கிறார்கள். நாங்கள், தொழிலாளி வர்க்கம் போராட்டத்திற்குத் தயார் செய்ய வேண்டும் என்கிறோம்' என்று அவனுக்குப் பதில் சொன்னேன்.''

இவ்வாறு லெனின் எங்களிடம் கூறினார். கேள்வி கேட்டவனுக்கு அப்புறம் விஷயம் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். எங்களில் அநேகர் அந்தச் சர்வ சாதாரணமான சிறு ஹோட்டலிலேயே ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டு வந்தோம். அப்போது லெனின் மிகவும் குறைவாகச் சாப்பிட்டதைப் பார்த்தேன். இரண்டு அல்லது மூன்று பொரித்த முட்டைகள், சிறு துடை கறித்துண்டு ஒன்று, கட்டியான கருப்புப் பீர் பானம் ஒரு குவளை...இவ்வளவுதான் அவர் சாப்பிட்டது. தம்மைப்பற்றி அவர் அநேகமாகச் சிரத்தை எடுத்துக்கொள்ளுவதே இல்லை; அதே சமயத்தில், தொழிலாளர் விஷயத்தில் அதிசயப்படும்படியாக அதிகக் கண்ணும் கருத்துமாக இருந்தார். இது ஒரு ஆச்சரியமாகவே இருந்தது.

ஹோட்டல் சம்பந்தப்பட்ட விஷயத்தை எம். எப். ஆண்ட்ரீயேவா கவனித்துவந்தாள். லெனின் அவளைப் பார்த்து, ''தொழிலாளிகளுக்குச் சாப்பாடு சரிவரக் கிடைக்கிறதா? என்ன! கிடைக்கவில்லையா? ஹூம், சரி, எங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளுக்கு இன்னுங் கொஞ்சம் ரொட்டியும் மாமிசமும் கிடைக்குமோ?'' என்று கேட்டார். ஒரு சமயம் என்னுடைய ஜாகைக்கு வந்திருந்தபோது, அங்கே கிடந்த படுக்கையை ஆழ்ந்த கவனத்துடன் தொட்டுப் பரிசோதித்துப் பார்த்தார். ''என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டேன். ''படுக்கையின் உறைகள் நன்றாகச் சலவை செய்யப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார். இதன் காரணம் எனக்கு முதலில் புரியவில்லை. லண்டன் நகரத்துப் படுக்கை உறைகள் எப்படி இருந்தால் என்ன? அதை இவர் ஏன் அறிய விரும்புகிறார்? என்னுடைய இந்தத் திகைப்பை அவர் கவனித்துக் கொண்டார். உடனே விஷயத்தை விளக்கினார்: ''நீங்கள் உங்கள் உடம்பை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்.''

1918-ம் வருஷம் இலையுதிர் காலத்தில், ஸார்மோவ விலிருந்து வந்திருந்த டிமிட்ரி பாவ்லோவ் என்ற ஒரு தொழிலாளியைப் பார்த்து, ''லெனினிடத்தில் காணப்படும் பிரதானமான இயல்பு என்ன?'' என்று கேட்டேன். ''எளிமைதான். அவர் உண்மையைப் போல அவ்வளவு எளிமையாக இருக்கிறார்'' என்று வெகு காலத்துக்கு முன்பே யோசித்து முடிவு கட்டிய விஷயத்தை சொல்லுவதுபோல அவன் சொன்னான். ஒருவனைப்பற்றிக் கடுமையாக விமர்சனம் செய்பவர்கள் அவனுக்குக் கீழே வேலை பார்க்கின்றவர்கள் தான். இது எல்லோரும் அறிந்த விஷயம். லெனினுடைய கார் டிரைவராகிய கில் என்பவன் பெரிய அனுபவஸ்தன். அவன் சொன்னான்: ''லெனின் ஈடு இணை இல்லாத மனிதர். அவரைப் போன்றவர்கள் வேறு யாருமேயில்லை. ஒரு சமயம் மியாஸ்னிட்ஸ்கி தெரு வழியாக நான் கார் ஓட்டிக் கொண்டு போனேன். லெனின் அந்தக் காரில் உட்கார்ந்து கொண்டிருந்தார். தெருவில் போக்கு வரத்து அதிகமாக இருந்தது. எதுவும் வந்து காரைமோதி விடுமோ என்ற பயத்துடன் அங்கேயே நின்று 'ஹார்'னை மட்டும் அமுக்கிக் கொண்டிருந்தேன். மனதுக்குள் ஒரே எரிச்சலாக இருந்தது. அப்பொழுது லெனின் காரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கதவைத் திறந்து என் அருகில் வந்தார். ர ாரைவிட்டு இறங்கும்போது கால் ஊன்றுகின்ற அந்தப் பலகையில் ஏறி நின்று கொண்டார். எந்த நேரத்திலும் வேறுகார்கள் வந்து அவரை மோதிவிடக் கூடிய அபாய நிலை. ஆனாலும் அவர் அங்கேயே நின்று கொண்டு 'கில்! கவலைப்படாதே! மற்ற வர்களைப் போலவே நீயும் காரை மேலே ஓட்டிக் கொண்டு போ' என்றார். நான் ரொம்பக் காலத்திய டிரைவர். ஆனால், அம்மாதிரிக் காரியத்தை வேறு யாரும் செய்ய நான் பார்த்ததில்லை.

அவருடைய கருத்துக்கள் யாவும் எவ்வளவு இலகு வாகவும், எவ்வளவு இயல்பாகவும் ஒரே வழியில் சென்று கொண்டிருந்தன என்பதை வாசகர்கள் உணரும்படி செய்வது கஷ்டம். காம்பஸ்-ஊசியைப் போல, கொஞ்சங் கூடப் பிசகு ஏற்படாமல், தொழிலாளரின் வர்க்க நலன் களைப் பார்த்தே அவருடைய சிந்தனைகள் திரும்பின. லண்டனில் ஒரு நாள் மாலை நாங்கள் வேலை ஏதுமில்லாமல் ஓய்வாக இருந்தோம். அதனால் எங்களில் ஒரு சிலர், ஒரு சிறு கூட்டமாகச் ''சங்கீத மண்டப''த்துக்குப் போனோம். அது சகல ஜனங்களும் வரக்கூடிய ஒரு நாடக சாலை.

கோமாளிகளையும், ஹாஸ்ய நடிகர்களையும் பார்த்து லெனின் ஓரேடியாகச் சிரித்தார். நாடகத்தின் பிற நடிகர் களை அக்கறையில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார். பிரிட்டிஷ் கொலம்பியாவின் தொழிலாளர்கள் பெரிய மரங் களை உத்தரங்களுக்காக வெட்டிச் சாய்க்கும் காட்சியை மிகவும் கவனமாகப் பார்த்தார். நாடக மேடையின் பின் புறத்தில் காட்டுப்புறத்தைக் காட்டும் ஒரு சிறு சீன். அதற்கு முன்னால், இரண்டு இளைஞர்கள் சுமார் ஒரு மீட்டர் கனமுள்ள ஒரு அடிமரத்தை ஒரு நிமிஷ நேரத்தில் வெட்டிச் சாய்த்தார்கள். உடனே லெனின், ''நாடகம் பார்க்கும் ஜனங்களுக்காகவே இவ்வாறு செய்கிறார்கள். உண்மையில் இவ்வளவு சீக்கிரமாக மரத்தை வெட்டிவிட முடியாது. ஆனாலும் அவர்கள் நாடகமேடையில் கோடாலிகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உபயோகிக்கிறார்கள்; மரத்தை உதவாக்கரைத் துண்டுகளாக ஒரே வாக்கில் வெட்டி எறிகிறார்கள். இதுதான் ஆங்கில நாகரிகம்'' என்று சொன்னார். அப்புறம் முதலாளித்துவத்தின் கீழ் அராஜக முறைப்படி உற்பத்தி நடைபெறுவதையும், அதிகமான மூலப்பொருள் வீணாகக் காலி செய்யப்படுவதையும் பற்றிப் பேசத் தொடங்கினார். பேச்சை முடிக்கும்போது, 'இன்னும் இந்த விஷயத்தை வைத்து யாரும் ஒரு புத்தகம் எழுதவில்லையே' என்று சொல்லி வருந்தினார். அவர் பேசியதன் பொருள் எனக்கு அவ்வளவாக விளங்கவில்லை. அதற்காக அவரிடம் நான் சந்தேகம் கேட்கத் துணியவில்லை. ஏனென்றால் அவர் ஹாஸ்ய நாடகங்களைப் பற்றி சில விஷயங்களைச் சொல்லத் தொடங்கினார். ''ஹாஸ்ய நாடகம், இது வரையிலும் பொதுப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்துக்களை நையாண்டி செய்யவும், அவற்றை மாற்றியமைக்கவும், நடைமுறையின் பலவந்தத் தீர்ப்பைப் பகிரங்கமாக எடுத்துக் காட்டவும் ஏற்ற ஒரு முயற்சி. இந்த நாடகத்தில் சிக்கலான அம்சங்கள் இருந்தாலும், ரஸமாகவே இருக்கிறது!'' என்றார். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, காப்ரித் தீவில் இருந்தபோது, ஏ. ஏ. பாக்டேனாவ-மாலினோவ்ஸ்கியுடன் கற்பனார்த்தத்தைச் சித்திரிக்கும் நாவலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது, ''முதலாளித்துவத் திமிங்கிலங்கள் மண்ணுலகை எப்படித் திருடியிருக்கின்றன. எப்படி எண்ணெய்யையும் இரும்பையும், மரத்தையும், நிலக்கரியையும் விரயமாக்கியிருக்கின்றன என்ற விஷயங்களைப் பொருளாக வைத்துத் தொழிலாளிகளுக்காக நீங்கள் ஒரு நாவல் எழுதினால், அது உபயோகமுள்ள புத்தகமாக இருக்கும், ஸ்ரீமான் மாகிஸ்ட் * அவர்களே!'' என்று லெனின் சொன்னார்.

---

* மாகிஸ்ட் - ஆஸ்திரிய பௌதிக சாஸ்திரியான எர்னஸ்ட் மாக் என்பவரின் உயிரற்ற யந்திர சித்தாந்தங்களின் அடிப்படையில் மார்க்ஸிஸத்துடன் தத்துவார்த்த லட்சிய வாதத்தைக் கலந்து, மார்க்ஸிஸத்தைத் திருத்தியமைக்க விரும்பிய எண்ணத்தை மாகிஸம் என்று கூறினார்கள். அந்த எண்ணம் உடையவர்கள் மாகிஸ்ட்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரிஸில் ஒரு சந்திப்பு

லண்டனில் என்னிடம் விடைபெற்றுப் புறப்படும் போது, ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்குத் தாம் காப்பிரித் தீவுக்கு வரப்போவதாக லெனின் தெரிவித்தார். அவர் வருவது சம்பந்தமான தீர்மானத்திற்கு வருமுன்பு, அவரை நான் பாரிஸில் சந்தித்தேன். அவர் இரண்டு அறைகள் உள்ள ஒரு மாணவர் விடுதியில் இருந்தார். உருவத்தில்தான் அது மாணவர் விடுதியாக இருந்ததே ஒழிய, பரிசுத்தத் திலும் ஒழுங்கு பெற ஒவ்வொரு வஸ்துவும் வைக்கப்பட்டிருந் ததிலும் அது மாணவர் விடுதியாக இல்லை. குருப்ஸ்காயா *எங்களுக்குத் தேநீர் கொடுத்து விட்டு வெளியே போய் விட்டாள். நாங்கள் இருவரும் தனியாக இருந்தோம். அந்தச் சமயத்தில்தான் 'ஸ்னானி' பதிப்பகம் முறிந்து போயி ருந்தது. அதனால், கூடிய மட்டிலும் எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த எல்லா இலக்கிய கர்த்தர்களுக்கும் ஏற்ற ஒரு புதிய பதிப்பகத்தை ஆரம்பிப்பதைப்பற்றி அவரோடு கலந்து பேசுவதற்காக நான் வந்திருந்தேன். பதிப்பகத்தின் ஆசிரிய இலாகாவை வெளிநாட்டில் அமைக்க வேண்டும் என்று நான் யோசனை சொன்னேன். அதில் வி. வரோவ்ஸ்கியும் மற்றும் யாராவது ஒருவரும் இருக்க வேண்டுமென்றும், அவர்களுக்குப் பிரதிநிதியாக ருஷ்யாவில் வி. ஏ டைஸ்னி ட்ஸ்கி-ஸட்ரோயேவை நியமிக்க வேண்டுமென்றும் தெரி வித்தேன். மேற்கத்திய இலக்கிய வரலாற்றையும் ருஷ்ய வரலாற்றையும் பற்றியும், நாகரிக வரலாற்றைப் பற்றியும் வரிசையாகப் பல புத்தகங்களை வெளியிட வேண்டு மென்பது என் கருத்து. அவ்வாறு வெளியிட்டால், தொழி லாளிகள், தங்களுக்குத் தாங்களே விஷயஞானம் பெற்றுக் கொள்ளவும், பிரசாரம் செய்யவும் வசதியாக இருக்கும்

* குருப்ஸ்காயா-லெனினுடைய மனைவி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என நான் கருதினேன். ஆனால், என் திட்டத்தை அடியோடு புறக்கணித்து விட்டார் லெனின். அரசாங்கத்தின் தணிக்கையையும், பதிப்பகத்திற்கு ஸ்தாபன ரீதியாகத் தோழர்களைத் திரட்டுவதில் உள்ள கஷ்டத்தையும் லெனின் எனக்குச் சுட்டிக் காட்டினார். பெரும்பாலான தோழர்கள் கட்சியின் நடைமுறை வேலையில் பரிபூரணமாக ஈடுபட்டிருந்தார்கள். புத்தகம் எழுத அவர்களுக்கு அவகாசம் இல்லை. அவர் முடிவாகச் சுட்டிக்காட்டிய பிரதானமான காரணம் ஏறக்குறையப் பின் வருமாறு: ''கனமான புத்தகங்களை, எழுத இப்பொழுது அவகாசமில்லை. புத்தகங்களை, கட்சியின் அறிவுத்துறையில் வேலை செய்யும் படித்தகூட்டம்தான் படிக்கும். ஆனால் அவர்களோ இப்பொழுது சோஷலிஸத்தைக் கைவிட்டுத் தாராளவாதத்தைக் கைக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களை அந்த வழியிலிருந்து திருப்புவது அல்ல நம் வேலை. நமக்குத் தேவை செய்திப் பத்திரிகைகளும் துண்டுப் பிரசுரங்களுந்தான். ''ஸ்னானி'' நூலகத்தைப் பழையபடியும் புதுப்பிப்பது நல்ல காரியம்தான். ஆனால் அது ருஷ்யாவில் சாத்தியமில்லை. அங்கு தணிக்கை இருந்து வருகிறது. போக்கு வரவு சாதன சம்பந்தமாகச் சிரமங்கள் இருப்பதால், இங்கும் அது சாத்தியமில்லை. சட்ட விரோதமான பிரசுரங்களை மலை மலையாக அச்சிட்டுக் குவித்து, அவற்றை விநியோகம் செய்வது நடக்காத காரியம். கொஞ்சம் சௌகரியமான நிலை ஏற்படுகிற வரையில், பதிப்பக விஷயத்தில் நாம் பொறுத்திருப்போம்''

அப்புறம் ''த்யூமா'' (பார்லிமெண்ட்) பற்றியும், ''கேடட்டுகள்''* பற்றியும் வழக்கம்போல் தெள்ளத் தெளிவான முறையில் பேச ஆரம்பித்தார். கேடட்டுகள்,

---

* கேடட்டுகள் - பூர்ஷ்வா - லிபரல் அரசியல் நிருபண ஜனநாயகக் கட்சி அங்கத்தினர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''அக்டோபரிஸ்டு''*களாக இருக்க வெட்கப்படுகிறார்கள் என்றார். ''அவர்களுக்கு இனி ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. இனிமேல் அவர்கள் சரியான வழியைக் கடைப்பிடிக்க வேண்டியதுதான்.'' இவ்வாறு கூறிவிட்டு, உடனடியாக யுத்தம் ஏற்படச் சாத்தியம் இருக்கிறது என்பதற்குப் பல காரணங்களைத் தர்க்க ரீதியாக எடுத்துச் சொன்னார். ஒரு யுத்தமல்ல, வரிசையாகப் பல யுத்தங்களும் ஏற்படுவதற்குரிய காரணங்களைக் கூறினார். அவருடைய தீர்க்க தரிசனப்படி வெகு சீக்கிரத்திலேயே பால்கன் நாடுகளில் யுத்தம் வந்து விட்டது. லெனின் எழுந்து நின்று, கையின் பெருவிரல்களைத் தம்முடைய 'வெயிஸ்ட் கோட்'டின் கைத்துவாரங்களில் திணித்துக்கொண்டு, முன்னும் பின்னுமாக அந்தச் சிறு அறையில் மெதுவாக நடந்தார். தம் பிரகாசமான விழிகளைச் சுழித்துக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டு, ''யுத்தம் வருகிறது. அது தவிர்க்க முடியாதது. முதலாளித்துவ உலகம் அழுக ஆரம்பித்து விட்டது. ஜனங்கள் சுயதேசப் பெருமையென்ற போதைச் சரக்கினால் தங்களுக்குத் தாங்களே விஷம் ஊட்டிக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். நாம் ஒரு ஐரோப்பிய யுத்தத்தையே பார்க்கப் போகிறோம் என்பது என் கருத்து. அப்பொழுது உழைப்பாளிகள் என்ன செய்வார்கள்? அவர்களால், யுத்தப் படுகொலைகளைத் தவிர்க்க இயலாது. அதற்குரிய பலமும் அவர்களிடம் இராது. தவிர்க்க வேண்டுமானால் அதை எப்படித் தவிர்ப்பது? ஐரோப்பா முழுவதிலும் ஒரு பொது வேலை நிறுத்தத்தை ஆரம்பிப்பதா? அதற்கு, அவர்கள் இன்னும் போதுமானபடி ஸ்தாபன ரீதியாகத் திரளவில்லை; அதற்குரிய வர்க்க உணர்ச்சியைப் பெறவும் இல்லை. இப்படிப்பட்ட ஒரு வேலை நிறுத்தம், உள் நாட்டு யுத்தத்

---

* அக்டோபரிஸ்டுகள் – பெரிய முதலாளிகள், நிலச் சுவான்தார்கள் ஆகியோரின் கட்சி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துக்கு ஒரு சங்கேதமாக இருக்கும்! ஆனால் [பிரத்யட்ச (நிலையை உணர்ந்த) அரசியல் வாதிகளாகிய நாம் அதைக் கணக்கில் சேர்க்க முடியாது'' என்றார் லெனின். அப்புறம் கொஞ்சம் நின்று, தரையில் பூட்ஸைத் தேய்த்துக் கொண்டு, மனவருத்தத்துடன் சொன்னார். ''ஆம், உழைப்பாளிகள் கஷ்டத்திற்கு ஆளாகத்தான் செய்வார்கள். இன்னும் சிறிது காலத்துக்கு அவர்கள் தலைவிதி அப்படித் தான் இருக்கும். ஆனால் உழைப்பாளிகளின் விரோதிகளும் தமக்குள்ளேயே ஒருவரை ஒருவர் பலவீனப் படுத்திக் கொண்டிருப்பார்கள். அதுவும் தவிர்க்க முடியாத காரியமே.'' லெனின் என் அருகில் வந்தார். உரத்த குரலில் பேசாமல், அழுத்தமான குரலிலும், பிரமிப்பு அடைந்தவர் போலவும் பேசினார்! ''இல்லை, இதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்த மனிதர்கள், பசியோடிருக்கும் மனிதர்களை ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடும்படியாக ஏன் பலவந்தப் படுத்த வேண்டு? இதைவிட மடத்தனமான, அக்கிரமமான குற்றம் ஒன்று இருக்கமுடியுமா, சொல்லுங்கள். இந்த யுத்தத்தில் தொழிலாளிகள் அடையும் நஷ்டம் பயங்கரமாகவும் அமோக மாகவும் இருக்கும். ஆனால் முடிவில் அவர்கள் லாபத்தை அடைவார்கள்; அது சரித்திரத்தின் தீர்ப்பு.'' அடிக்கடி அவர் சரித்திரத்தைப் பற்றிப் பேசுவார். ஆனால் சரித் திரத்தை ஒரு தெய்வ பீடமாகக் கருதி அதன் தீர்ப்புக்கோ, சக்திக்கோ மூடபக்தியுடன் தலைவணங்கும் தன்மை அவருடைய பேச்சில் பிரதிபலித்தது கிடையாது.

அவருடைய சொற்கள் அவருக்குப் பரபரப்பை ஊட்டின. உட்கார்ந்து, நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டார். ஆறிப்போன குளிர்ந்த தேநீரைக் குடித்து விட்டு, எதிர்பாராதவிதமாக, உங்கள் அமெரிக்கப் பிரயாணம் என்னவாயிற்று? நீங்கள் அங்கு போன காரியம் என்ன என்பதைப் பத்திரிகைகள் மூலமாக அறிந்தேன்.

www.tamilarangam.net



காரியம் எப்படி முடிந்தது?'' என்று கேட்டார். அமெரிக்காவில் ''அபாய''க் கட்டங்களின் நடுவே ''பராக்கிரம சாதனை'' களை நான் சாதித்ததைச் சுருக்கமாகச் சொன்னேன். உடனே லெனின் விழுந்து விழுந்து சிரித்தார். இப்படிச் சிரிக்கும் ஒரு மனிதனை நான் பார்த்ததே இல்லை. சமுதாயத்தில் அபாயகரமான நாச விளைவுகள் ஏற்படப் போவதை தீர்க்க தரிசனமாகக் காணக்கூடியவர் லெனின். அவை தவிர்க்க முடியாத நிலையில் ஏற்படப் போகின்றன என்பதை உணரக்கூடியவர். அத்துடன் முதலாளித்துவ உலகத்தினிடம் சற்றேனும் விட்டுக்கொடுக்காத, வைராக்கிய சித்தம் படைத்த வெறுப்புக் கொண்டவர். இப்படிப் பட்ட ஒருவர் கண்ணீர் வரக்கூடிய வரையில், மூச்சுத் திணறுகிற வரையில், சிறு குழந்தையைப் போலச் சிரிப்பதைக் காண ஒரு அதிசயமாகவே இருந்தது. அவரைப் போலச் சிரிப்பதற்கு, மிக உயர்ந்த, தூய்மையான சித்தம் படைத்திருக்க வேண்டும். சிரித்துக் கொண்டே, ''நீங்கள் ஒரு ஹாஸ்ய கர்த்தா, ஐயா!'' என்றார். ''இவ்வளவு தமாஷாக ஒரு விஷயம் இருக்கும் என்று நான் நினைத்துப் பார்த்தது கூடக் கிடையாது.'' இவ்வாறு கூறிவிட்டுக் கண்களைத் துடைத்தார். அப்புறம் திடீரென்று தமாஷை நிறுத்திவிட்டு ஆழ்ந்த உணர்ச்சியுடன் பேசத் தொடங்கினார். மிருதுவான புன்னகையுடன், ''உங்கள் தோல்வியை ஹாஸ்யமாகப் பார்க்க முடிகிறது. இது மிகவும் நல்லது. ஹாஸ்யம் மிகச் சிறந்த பண்பாகும். வாழ்க்கை துக்ககரமாக இருப்பது போலவே வேடிக்கையாகவும் இருக்கிறது. வாழ்க்கையில் துக்கம் இருக்கும் அளவுக்கு வேடிக்கையும் இருக்கிறது.''

ஒரு நாள் கழித்து நான் அவருடைய இருப்பிடத்திற்கு வருவது என்று இருவரும் தீர்மானித்தோம். ஆனால் பருவ நிலை மோசமாக இருந்ததால் அன்று மாலையில் நான் ரத்தமாக உமிழ்ந்து கொண்டிருந்தேன். ஆகவே அங்கிருந்து மறுநாளே புறப்பட்டு விட்டேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இத்தாலியில் லெனின்

பாரிஸில் சந்தித்த பிறகு, கப்பலில்தான் நாங்கள் அடுத்தபடியாகச் சந்தித்தோம். கப்பலில் லெனின், இரண்டு வேறுபட்ட மனோநிலைகளில், இரண்டு லெனின்களாக எனக்குக் காட்சியளித்ததைக் கண்டு நான் வியப்புற்றேன். ஒரு லெனின், கடற்பாலத்தில் நாங்கள் நின்று கொண்டிருந்தபோது திடீரென்றும் தீர்மானமாகவும், "ஏ. எம்!* நானும் மாகிஸ்டுகளும் ஒத்துப் போகும்படி செய்துவிடலாம் என்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த விதமான ராஜியில் உள்ள பலவீனத்தைச் சுட்டிக்காட்டிக் கடிதம் எழுதி உங்களை எச்சரித்திருந்தும் நீங்கள் அந்த நம்பிக்கையைக் கைவிடவில்லை. இனிமேலாவது அம்மாதிரி முயற்சிகளைச் செய்யாதீர்கள்" என்று என்னைப் பார்த்துச் சொன்னார். அவர் கூறுவது முற்றிலுமே உண்மையல்ல என்று என் விடுதியை நோக்கி நடந்து செல்லும் போதும், வேறொரு சந்தர்ப்பத்திலும் விளக்கிக் கூற முயன்றேன். ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கும் இரண்டு முரண்பட்ட தத்துவங்களுக்கிடையில் ராஜி செய்து வைக்க வேண்டுமென்ற நோக்கம் எனக்கு என்றுமே இருந்ததில்லை. அத்துடன் அந்த இரண்டு தத்துவங்களையும் நான் பரிபூரணமாகப் புரிந்து கொள்ளவும் இல்லை. மேலும், என் வாலிபத்திலிருந்தே எனக்கு எல்லாத் தத்துவங்களிடத்திலும் அவநம்பிக்கை இருந்து வந்தது. இந்த அவ நம்பிக்கைக்குக் காரணம், தத்துவத்துக்கும் என் சொந்த அனுபவத்துக்கும் உள்ள முரண்பாடுதான். என்னைப் பொறுத்தமட்டிலும், உலகம் இப்பொழுதுதான் உருவாகத் தொடங்கியிருக்கிறது என்றும், ஆனால் தத்துவ சாஸ்திரமானது அதற்குள் அதன் மண்டையில் அடித்து அதைப் பார்த்து, "நீ எதை

---

* ஏ. எம் – மாக்ஸிம் கார்க்கியின் இயற் பெயரின் சுருக்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறாய்? என்ன காரியத் துக்காகப் போய்க் கொண்டிருக்கிறாய்? ஏன் நீ சிந்தனை செய்து பார்க்கிறாய்?'' என்றெல்லாம் கொஞ்சம் கூடப் பொருத்தமில்லாத கேள்விகளைப் போட்டுக் கொண்டிருக் கிறது என்றும் கருதினேன். சில தத்துவ சாஸ்திரிகளோ, ''நில்!'' என்று ஒரே உத்தரவைப் போட்டார்கள். அத்துடன், தத்துவமானது பெண்ணைப் போன்று சாதா ரணமாக, கோரமாகக் கூட இருக்கக் கூடும் என்றும், ஆனால் அழகாக உடுத்தி அலங்கரித்து விட்டால் அழகின் சொருபமாகக் கருதத் தக்க நிலையை அடையக் கூடும் என்றும் கருதியிருந்தேன். இதை நான் லெனினிடத்தில் சொன்னதும் அவர் சிரித்து விட்டார். ''நீங்கள் அதை வைத்து ஹாஸ்யம் பண்ணுகிறீர்கள். உலகம் இப்பொழுது தான் உருவாகத் தொடங்கியிருக்கிறது என்று சொன்னீர் களே, அதைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்தால் இந்த அபிப்பிராயத்தை விட்டு, வெகுகாலத்துக்கு முன்பே நீங்கள் எந்த அபிப்பிராயத்துக்கு வந்திருக்க வேண்டுமோ அந்த அபிப்பிராயத்திற்கு வந்து சேருவீர்கள்'' என்றார். ஏ.ஏ. பாக்டனோவும், ஏ. லுனாசார்ஸ்கியும், வி.ஏ. பஸாரோவும் நிரம்பப் படித்த, சகலமும் அறிந்த முக்கியஸ்தர்கள் என்றும், அவர்களுக்கு இணையாகக் கட்சியில் வேறு யாரும் கிடையாது என்றும் நான் சொன்னேன். ''இதை வேண்டு மானால் ஒப்புக் கொள்ளுவோம். ஆனால் அதனால் ஏற்படும் விளைவு என்ன?'' என்று அவர் கேட்டார். ''முடிவில் ஒரே லட்சியத்தை அடைவதற்காகப் பாடுபடக் கூடியவர்கள் என்று அவர்களை நான் கருதுகிறேன். அவர்களை நன்றாகப் புரிந்து கொண்டு அவர்கள் கூறுவது உண்மை என்று கண்டறிந்தோமானால், அவர்களுடைய லட்சிய ஒற்றுமையானது தத்துவ முரண்பாடுகளை அடியோடு ஒழித்துக் கட்டிவிடும் என்று நினைக்கிறேன்.'' இவ்வாறு நான் சொன்னதும், ''அப்படியென்றால் உங்க ளுக்கு இன்னும் ராஜி செய்துவைக்கும் நம்பிக்கை இருக்கிறது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று ஆகிறது. அது சுத்த உதவாக்கரைக் காரியம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பரிபூரணமாக இந்த எண்ணத்தை விட்டொழியுங்கள். நண்பன் என்ற முறையில் உங்களுக்கு இந்த யோசனையைக் கூறுகிறேன். உங்களைப் பொறுத்த மட்டிலும், பிளெக்கனாவும் அதே லட்சியத்தை உடையவராகத்தான் இருக்கிறார். அவர் ஆத்ம ஞானியாக இல்லாமல் லோகாயதவாதியாக இருந்தும், அவருடைய லட்சியம் முற்றிலும் வேறு என்றுதான் நான் கருதுகிறேன்'' என்றார் லெனின்.

இந்த இடத்தில் எங்கள் சம்பாஷணை முடிவடைந்தது. அவர் சொன்ன வார்த்தைகளை அப்படியே இங்கு எழுதி விடவில்லை என்பதை நான் குறிப்பிடத் தேவையில்லை என்று நினைக்கிறேன். ஆனால், அவருடைய கருத்துக் களைக் கொஞ்சம் கூடப் பிசகாமல் எழுதியிருக்கிறேன் என்பது நிச்சயம்.

லண்டன் காங்கிரஸில் இருந்ததையும் விட அதிக உறுதியோடும், வளைந்து கொடுக்காத தன்மையோடும் என் முன் காட்சியளித்தார் லெனின். லண்டன் காங்கிரஸின் போது அவர் மிகவும் மனக் கலவரத்துடன் இருந்தார். கட்சியில் ஏற்பட்ட பிளவினால் அவர் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் இப்பொழுது மனச் சாந்தியுடன் இருந்தார். எதிலும் பரவசமடையாமல் ஒதுங்கி நின்று குதித்தாலும் நையாண் டியும் பண்ணிக் கொண்டிருந்தார். தத்துவார்த்தப் பிரஸ் தாபனங்களைத் தனியே ஒதுக்கி வைத்துவிட்டு, எந்நேரமும் விழிப்புடன் இருந்தார் ஏ.ஏ. பாக்டனோவ் மிக மிகக் கவர்ச்சிகரமான மனிதர்; மிருது சுபாவம் உடையவர். லெனினிடத்தில் மிகவும் பிரியம் கொண்டவர். அவர் தம்மைப் பற்றிக் கொஞ்சம் பெரிய அபிப்பிராயம் உடை யவராக இருந்தபோதிலும், லெனின் அவரைப் பார்த்து,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''தெளிந்த சிந்தனை என்பது தெளிந்த வாக்குத்தான்'' என ஷோபனேர் சொல்லியிருக்கிறார் என்று தைக்கும் படியாகச் சொன்ன வேதனைச் சொற்களை அவர் கேட்க வேண்டியிருந்தது. ''இதைவிட ஒரு உண்மையான விஷயத்தை ஷோபனோர் சொல்லவில்லை. தோழர் பாக்டனோவ்! நீங்கள் உங்கள் கருத்தைத் தெளிவாக விளக்குவதில்லை. தொழிலாளிவர்க்கத்துக்கு நீங்கள் நல்கும் மாற்றுத் தத்துவம் என்ன என்பதையும், மார்க்ஸீயத்தை விட மாகிஸம் எப்படிப் புரட்சிகரமானது என்பதையும் ஒரு சில வார்த்தைகளில் எனக்கு விளக்குங்கள்'' என்றார் லெனின்.\ அவ்வண்ணமே பாக்டனோவ் விளக்குவதற்கு முயன்றார். ஆனால் உண்மையில் அவர் பேசியது குழப்ப மாக, வெறும் சொற்களாகவே இருந்தது. ''போதும் அந்த விஷயத்தை விட்டு விடுங்கள்'' என்று சொல்லிவிட்டு, யாரோ ஒருவர் ஜாரஸ் என்று நினைக்கிறேன் - ''ஞான போதகராக இருப்பதைவிட உண்மை பேசுவது விசேஷம் என்று சொல்லுகிறேன்'' என்று லெனின் கூறினார். பிறகு பாக்டனோவுடன் செஸ் (சதுரங்கம்) விளையாடுவதில் ஈடுபட்டு விட்டார். அதில் அவர் தோற்றுப் போனபோது அவருக்குக் கோபம் வந்து விட்டது; சிறு குழந்தையைப் போல உற்சாகத்தை இழந்து விரக்தியடைந்து விட்டார். இந்தக் குழந்தை விரக்தியும் அவருடைய ஆச்சரியகரமான சிரிப்பைப்போல், அவருடைய குணபாவத்தின் பூரணத்து வத்தையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து விடவில்லை.

அதே காப்ரித் தீவில் வேறொரு லெனினையும் நான் பார்த்தேன். இந்த லெனின் ஒரு அருமையான தோழர், உலகத்தில் உள்ள ஒவ்வொன்றின் மீதும் தளராத அக்கறை கொண்ட உல்லாசமான மனிதர்; பெரிய மனம் படைத் தவர். ஒரு நாள் மாலையில், எல்லோரும் உலாவுவதற்காக வெளியே போனபின்பு, என்னிடத்திலும் எம். எப். ஆண்ட்ரி யேவா விடத்திலும், மிகவும் துக்கத்துடனும் மனவருத்தத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துடனும் லெனின் சொன்னார்: ''இப்படிப்பட்ட அறிவாளிகள், கட்சிக்காக எவ்வளவோ நலன் தேடிக் கொடுத்தவர்கள், இன்னும் அதைப்போலப் பத்துமடங்கு நலன் தேடிக் கொடுக்கக் கூடியவர்கள், நம்முடன் ஒன்று சேர்ந்து ஒத்துப் போவதற்கில்லாமல் இருக்கிறார்கள்! இவர்கள் அப்படி ஒத்துப்போக மாட்டார்கள். இவர்களைப் போன்ற நூற்றுக் கணக்கான மனிதர்கள் இந்தக் கொடுங்கோலாட்சியினால் பாழாக்கப்பட்டு, அங்கஹீனம் செய்யப்பட்டுக் கிடக்கிறார்கள்.''

மற்றொரு சமயம். அவர் சொன்னார்; ''லுனாசார்ஸ்கி கட்சிக்குத் திரும்பவும் வருவார். மற்ற இருவரைப் போல அவர் அவ்வளவு தனி மனித வாதம் உடையவர் அல்ல. அவரிடத்தில் மகத்தான திறமை இருக்கிறது. அப்படிப்பட்ட திறமையை எங்கேனும் அபூர்வமாகத்தான் பார்க்க முடியும். அவர் விஷயத்தில் நான் பிரியமாக இருக்கிறேன். அவர் அருமையான தோழர், தெரியுமா? பிரெஞ்சு நாட்டுப் புத்தி தீட்சண்யம் அவரிடம் இருக்கிறது. எதையும் பெரிது படுத்தாமல் உல்லாசமாக இருக்கும் அவருடைய பண்பும் பிரெஞ்சுப் பண்புதான். அவரிடம் உள்ள அழகு ரசனை தான் இந்த உல்லாசப் பண்புக்குக் காரணகர்த்தா.''

காப்ரியில் உள்ள செம்படவர்களின் வாழ்க்கை விவரங்களை விரிவாக விசாரித்துக் கொண்டிருந்தார் லெனின். சம்பாத்தியம் எவ்வளவு, பாதிரிகளின் செல்வாக்கு எப்படியிருக்கிறது. அவர்களுடைய பள்ளிக்கூடங்கள் எந்த மாதிரி இருக்கின்றன என்றெல்லாம் கேட்டார். 'எத்தனை விஷயங்களில் தான் இவருக்கு அக்கரையிருக்கிறது!' என்று எண்ணி ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. ஒரு ஏழைக்குடியானவனின் மகனாகிய பாதிரி ஒருவனை லெனினுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். உடனே அவனைப்பார்த்து, குடியானவர்கள் தங்கள் குழந்தைகளை அடிக்கடி பள்ளிக் கூடத்துக்கு அனுப்புகிறார்களா, படித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளர் திரும்பும் பிள்ளைகள் பாதிரிகளாகத் திரும்புகிறார்களா என்று லெனின் கேட்டார்.

"இது ஒரு விதிவிலக்கான காரியமாக நடைபெற வில்லை என்றால், இதை வாடிகனுடைய (போப்பி னுடைய) கொள்கையென்றே கொள்ள வேண்டும்; தந்திர மான கொள்கை இது! தெரிந்ததா?"

மற்ற ஜனங்களைவிட எவ்வளவோ உயர்ந்த நிலையில் இருக்கும் ஒரு மனிதன், கொஞ்சம்கூடச் சொந்த ஆசை அபிலாஷைகள் இல்லாமல், சாதாரண ஜனங்களிடத்தில் இவ்வளவு அக்கரை காட்டுவதை என்னால் கற்பனை பண்ண முடியவில்லை.

லெனினிடத்தில் ஏதோ ஒரு காந்த சக்தியிருந்தது' அந்தக்காந்தம் பாட்டாளிமக்களின் உள்ளத்தையும், அனு தாபத்தையும் தன் பக்கம் ஆகர்ஷித்தது. லெனின் இத்தாலிய பாஷையில் பேசவில்லை. ஆனால் காப்ரியின் செம்படவர்கள், சாலியாபினையும் மற்றும் பல முக்கியமான ருஷ்யப் பிரபலஸ்தர்களையும் பார்த்துள்ள அந்தச் செம்படவர்கள், ஏனென்றும் யோசிக்காமலே அவருக்குத் தனிப்பட்டதொரு விசேஷ ஸ்தானம் கொடுத்து விட் டார்கள். லெனினுடைய சிரிப்பு மோகனமானது. மனிதப் பிறவிகளின் விகாரமான அறியாமையையும், சாதுரியப் பேச்சாளர்களின் இந்திர ஜாலங்களையும் கண்டறிந்த பிறகும், சூதுவாதற்ற குழந்தையுள்ளத்தைக் கண்டு மகிழ் கின்ற ஒரு மனிதனின் இதய பூர்வமான சிரிப்பு அது. ஜியோவானி ஸ்படாரோ என்ற வயது முதிர்ந்த செம்படவன் ஒருவன், "யோக்கியமான மனிதனால்தான் இந்த மாதிரிச் சிரிக்க முடியும்" என்று லெனினைப் பற்றிச் சொன்னான்.

சில சமயங்களில் ஆகாயம் போன்றிருக்கும் ஸ்படிக மயமான நீல நிறத் தண்ணீரில் தாங்கள் படகோட்டிச் செல்லுவோம். அப்பொழுது அவர் நூலைப் போட்டு மீன் பிடிக்கக் கற்றுக் கொண்டார். 'நூல் இலேசாக ஆடத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடங்குவதை விரல்கள் உணர்ந்த மாத்திரத்தில், மீன் தூண்டிலில் விழுந்து விட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்' என்று, செம்படவர்கள் அவருக்குச் சொன்னார்கள். மீன் அகப்பட்டுக் கொண்டதும், 'ட்ரின் ட்ரின்' என்று செம்படவர்கள் சொல்லுவார்கள். லெனினும் தம் தூண்டிலில் மீன் விழுந்ததும், குழந்தையைப் போல ஆனந்தத்துடனும் வேட்டைக்காரன் வேட்டை கிடைத்ததும் செய்கின்ற ஆரவாரத்துடனும் "ட்ரின் ட்ரின்" என்று உரக்கச் சொன்னார். இதைக் கேட்டுச் செம்படவர்கள், குழந்தைகளைப் போலக் 'கடகட'வென்று சிரித்தார்கள். லெனினுக்கு "ஸ்ரீமான் ட்ரின் ட்ரின்" என்று கேலிப் பெயரும் வைத்து விட்டார்கள். லெனின் அப்பால் போன பிறகு, அவர்கள் "ட்ரின் ட்ரினுடைய காரியம் எப்படி இருக்கிறது? இன்னும் ஜாரின் கையில் அவர் பிடிபட வில்லையோ?" என்று விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

காப்ரிக்கு லெனின் வந்து சென்றபிறகு பிளெக்னாவ் அங்கு வந்தாரா, அல்லது லெனின் வந்ததற்கு முன்னால் வந்தாரா என்று எனக்குச் சரியாக ஞாபகமில்லை. காப்ரியில் குடியேறியிருந்த எழுத்தாளரான ஆலிகர், ஸோட்சியில் புரட்சிக்கு ஏற்பாடு செய்ததனால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த லோரான்ட்ஸ்-மெட்னர், பால் விக்டர் சிக் ஆகியோரும் மற்றும் இரண்டொருவரும் பிளெக்னாவைச் சந்தித்துப் பேச விரும்பினார்கள். ஆனால் பிளெக்னாவ் பேட்டியளிக்க மறுத்துவிட்டார். அவ்வாறு செய்ய அவருக்கு உரிமை உண்டு. ஏனென்றால் அவருக்கு உடல் நிலை சரியாக இல்லை; ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகத்தான் அங்கு வந்திருக்கிறார். ஆனால் ஆலிகரும், லோரன்ஸும், பிளெக்னாவ் பேட்டியளிக்க மறுத்தது அவமானப் படுத்தும் தோரணையில் இருந்தது என்று என்னிடம் கூறினார்கள். ஆலிகர் கொஞ்சம் விறைப்பான ஆசாமி. "எந்தக் காரியத்தையும் நடத்திக் காட்டுவதற்கு லாயக்கில்லாமல், வெறும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேச்சுப் பேச விரும்புகிற கூட்டத்தைக் காணப் பிடிக்க வில்லை'' என்ற முறையில் பிளெக்னாவ் ஏதோ சொன்ன தாக ஆலிகர் உறுதியோடு கூறினார். பிளெக்னாவ் என்னோடு இருக்கும்போது, அவர் உண்மையில் காப்ரி வாசிகள் எவரையும் பார்க்க விரும்பவில்லை. ஆனால் லெனின் எல்லோரையும் பார்த்தார். பிளெக்னாவ் எதைப் பற்றியும் விசாரிக்கவே இல்லை. ஏற்கனவே சகலத்தையும் அறிந்து, அதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவது போலவே அவர் சொல்லிக் கொண்டிருந்தார். விசாலமான ருஷ்ய சம்பிரதாயப்படி அவர் அறிவுத் திறமை பெற்றிருந் தார்; ஐரோப்பியக் கல்வியும் கற்றிருந்தார். தம் வாக்குச் சாதுரியத்தை மற்றவர்கள் முன்னிலையில் காட்டிக்கொள்ளு வதில் அவருக்கு விருப்பம். பரிகாசம் செய்யவேண்டும் என்ற காரணத்திற்காக, வெளிநாட்டுத் தோழர்களிடத்திலோ அல்லது ருஷ்யத் தோழர்களிடத்திலோ உள்ள ஏதேனும் ஒரு பலவீனமான அம்சத்தைக் கொடூரமாக அழுத்திச் சுட்டிக் காண்பிப்பார். அவருடைய சாதுரிய வாக்குகள் பெரும்பாலும் நேரடியாக விஷயத்தைச் சொல்லாமல் குழம்பிக் கொண்டிருந்ததாகவே எனக்குத் தோன்றியது. அவருடைய சாதுரிய வசனங்களில் என் ஞாபகத்தில் இருப்பவை பின்வருமாறு: ''கொஞ்சங்கூட நிதானமற்ற நிதானம் உடையவரான மேஹ்ரிங்; எரிகோ கபர்ரி ஆள் மாறாட்டம் செய்யும் மோசக்காரன்; அவனிடம் பொன்னும் இல்லை, இரும்பும் இல்லை!'' இந்தச் சொல் வித்தைக்கு அஸ்திவாரம், ''பெர்ரோ'' என்ற வார்த்தைதான். பெர்ரோ என்றால் இரும்பு. அவருடைய சாதுரிய வசனங்கள் யாவும் இந்தத் தினுசிலேயே இருக்கும். ஜனங்களைத் தாங்கிக் காப்பாற்றுகிறவரைப் போல, ஏன் அவர்களுடைய தெய்வம் போலவே அவர் நடந்து கொள்ளுவது வழக்கம். அறிவுத் திறம் படைத்த எழுத்தாளர் என்ற முறையிலும், சித்தாந்த ரீதியில் கட்சிக்கு உத்வேகம் அளித்தவர் என்ற முறையிலும் அவரிடம் எனக்குப் பெரு மதிப்பு உண்டு. அவரிடத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அளவுக்கு மீறிப் ''பிரபுத்துவ'' தோரணை இருந்தது. என்னுடைய இந்த அபிப்பிராயம் தப்பாகக்கூட இருக்கலாம். தப்பையே பண்ணிக் கொண்டிருப்பதில் எனக்கு விருப்பம் எதுவும் கிடையாது. ஆனால், நானும் மற்றவர்களைப் போலவே எந்தக் காலத்திலுமே தப்புப் பண்ணாமல் இருப்பதும் சாத்தியமன்று. ஆனால் ஒரு விஷயம் உண்மை. பிளெக்கனாவ், லெனின் - இந்த இருவரைப் போல வெவ்வேறு விதமான இரு மனிதர்களை நான் பார்த்தது கிடையாது. இப்படி அவர்கள் இருந்ததில் வியப்பு ஒன்றுமில்லை ஒருவர் பழைய உலகத்தைத் தகர்த்தெறிவதைத் தம் வேலையாகக் கொண்டு, அதை முற்றுவித்துக் கொண்டிருந்தார். மற்றொருவர் புது உலக நிர்மாண வேலையை ஆரம்பித்துக் கொண்டிருந்தார்.

உண்மையாகவே வெறுப்பதற்கு இயலாத ஒருவனால், உண்மையாக அன்பு காட்டுவதற்கும் இயலாது என்ற நிலையை வாழ்க்கை உண்டாக்கியிருக்கிறது. இது வாழ்க்கையின் மோசமான விளையாட்டுக்களில் ஒன்று. இந்த விளையாட்டுத்தான் உண்மை நிலையும்கூட. இது மனித இயல்பை மூலாதாரத்திலேயே வேறு மாதிரியாகத் திரித்து விடுகிறது; அத்துடன், இரண்டு பகுதிகளாக உள்ளதைப் பிறிப்பதைத் தவிர்க்க முடியாததாகவும், வெறுப்பின் மூலமாக அன்பு காட்டுவதை இன்றியமையாததாகவும், செய்துவிடுகிறது. வெறுக்கிறவனால் தான் அன்பு காட்ட முடியும் என்ற உண்மை, வாழ்க்கையின் இன்றைய நிலையை அடியோடு ஒழியும்படி சபிக்கிறது.

துன்பப்படுவதுதான் மோட்ச சாதனம் என்று உபதேசிக்கப்படுகிற ருஷ்ய நாட்டில், வருத்தம், துயரம், துன்பம் என்பனவற்றை லெனினைப் போல அவ்வளவு கடுமையாக அருவருப்போடு வெறுத்த ஒரு மனிதனை நான் பார்த்ததுமில்லை; அப்படிப்பட்ட ஒருவனைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. அவர் பிறந்த நாட்டில் பிரமாதமான இலக்கிய சிருஷ்டிகள் என்பவை துன்பப்படுவதைப் புகழ்ந்து,

www.tamilarangam.net



அதற்குப் புனிதத் தன்மை கொடுக்கும் சுவிசேஷங்களாக இருந்தன. ஒன்றுக்கொன்று வித்தியாசமே இல்லாமல் ஒன்றுபோல அற்ப விஷயங்களையே வர்ணிக்கும் புத்தகங்களின் ஆதிக்கத்தில்தான், அங்கு வாலிபம் தன் வாழ்க்கையைத் தொடங்குகிறது. இப்படிப்பட்ட நாட்டில் பிறந்த அவர், மிக உன்னத ஸ்தானம் பெறுவதற்குக் காரணமாக இருந்தது, வாழ்க்கையின் துன்ப நாடகத்தின் மீது அவருக்கிருந்த வெறுப்புத்தான். ஐரோப்பாவிலேயே ருஷ்ய இலக்கியந்தான், மனித முயற்சிக்கு அதிக அளவில் அவநம்பிக்கை ஊட்டுவது. நம் புத்தகங்கள் யாவும் எதைப் பொருளாகக் கொண்டு எழுதப்படுகின்றன? நம்முடைய முட்டாள் தனத்தினாலும், எதேச்சதிகாரத்தின் நசுக்குகின்ற பாரத்தினாலும், பெண்களினாலும், பக்கத்து வீட்டுக் காதலினாலும், பிரபஞ்சத்தின் தோல்விகரமான அமைப்பினாலும், தாம் வாலிபத்தில் எப்படிக் கஷ்டப்படுகிறோம், நடு வயதில் எப்படிக் கஷ்டப்படுகிறோம்; அப்புறம் முதுமைப் பிராயத்தில் நம் வாழ்நாளில் செய்த தவற்றுக்காகவும், பற்கள் இல்லாமல் போய்விட்டதற்காவும், அஜீரணத்தினாலும், மரண பயத்தினாலும் எப்படிக் கஷ்டப்படுகிறோம் என்ற விஷயங்களை வைத்துத்தான் நம் நாட்டில் புத்தகங்கள் யாவும் எழுதப்படுகின்றன. ஏதேனும் ஒரு அரசியல் குற்றத்துக்காக ஒரு மாத சிறை வாழ்க்கையும் ஒரு வருஷ தேசப் பிரஷ்டத்தையும் அனுபவித்த ருஷ்யன் ஒவ்வொருவனுமே, தன் துன்பானுவங்களை ஒரு புத்தகமாக எழுதி ருஷ்யாவுக்கு வழங்குவதைத் தன் புனிதமான கடமையாகக் கருதுகிறான். இதேபோல, இன்பகரமான வாழ்க்கையனுபவங்களைப் புத்தகமாக எழுத வேண்டுமென்று எவனும் நினைக்கக் கூடவில்லை. ருஷ்ய மக்கள் தங்கள் வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்று சிந்திக்கும் பழக்கம் உடையவர்கள்; ஆனால் வாழ்க்கையை அவ்வாறு சிறப்பான முறையில் உருவாக்க அவர்களுக்கு இயலாதிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இன்ப வாழ்க்கையைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறும் ஒரு புத்தகம் வெளிவந்தால், அது இன்ப வாழ்க்கைக்கு வழி வகுப்பது எப்படி என்று அவர்களுக்குக் கற்பிக்கக்கூடும் அல்லவா?

மனித வர்க்கத்தினுடைய துன்பத்தின்மீது லெனினுக்கு ராஜி செய்து வைக்க இயலாத, அவியாத பகைமை. அதே சமயத்தில் துன்பமானது வாழ்க்கையின் அந்தியாவசியமான, தவிர்க்க முடியாத பகுதியல்ல. ஆனால் அது ஒரு சாபக்கேடு. அதை மக்கள் அடியோடு துடைத்தெறிந்து விடவேண்டும். துடைத்தெறிய முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கை, இப்படிப்பட்ட உணர்ச்சி உடையவராக இருந்ததால்தான் அவர் யாரையும் விடப் பெரிய மனிதனாக இருந்தார் என்பது என் அபிப்பிராயம் அவரிடம் காணப்பட்ட இந்த அடிப்படை அம்சம், ஒரு லோகாயதவாதி, மனித முயற்சியிடம் கொள்ளுகின்ற தளராத நம்பிக்கைதான் என்று நான் கூறுவேன்; மற்றபடி அதை ருஷ்ய அம்சம் என்று கூற இயலாது. இந்த அம்சம்தான் அந்த மனிதரிடம் என்னைக் கவர்ந்து இழுத்தது. அந்த மனிதர் மாந்தருக்குள் ஒரு தெய்வம்.

## லெனினோடு அபிப்பிராய பேதங்கள்

1917-18 வருஷங்களில், லெனினுக்கும் எனக்கும் இருந்த உறவு, என் விருப்பத்துக்குகந்த முறையில் இல்லை. ஆனால் அப்பொழுது வேறு விதமாக இருந்திருக்கவும் முடியாது. அவர் ஓர் அரசியல்வாதி. அவர் தம் திருஷ்டியை எல்லாம் தெளிவுபடுத்திப் பரிபூரணமாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம். குடியானவர்கள் என்ற பெரும் பாரத்தைச் சுமக்கும் ருஷ்யா என்ற கப்பலின் மாலுமியான அவருக்கு அது இன்றியமையாதது. ஆனால் எனக்கோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயற்கையிலேயே அரசியலின் மீது ஒரு வெறுப்பு இருந்து வந்தது. பொது ஜனங்களின், குறிப்பாகக் குடியானவர்களின் பகுத்தறியும் சக்தியில் எனக்கு நம்பிக்கையே கிடையாது. ஒழுங்கு படுத்தப் படாத கருத்துக்களில்லாமல், வெறும் காரண காரிய ஞானம் இருந்தபோதிலும், அது ஆக்க முயற்சிக்கு வேண்டிய சக்தியாக அமைவது துர்லபம். அத்துடன், சமூக அளவில் மனித நலன்களைப் பற்றிச் சிந்திக்காத பொது மக்களுடைய உள்ளத்தில் கருத்துக்களும் இருக்க முடியாது.

பொது மக்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சி மிருகத்தனமான கொள்ளைக்காரர்களைத் தோற்றுவித்து விடுகிறது. அந்த மிருகங்கள் பொது மக்களை அடிமைப்படுத்தி, அவர்களுடைய ரத்தத்தைக் குடித்தே உயிர் வாழ்கின்றன. ஒரே ஒரு சக்திதான், பொதுமக்களை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க முடியும் என்பதைப் பொதுமக்கள் உணருகிற வரையில், அந்த மிருகங்கள் ரத்தத்தைக் குடித்துக் கொண்டுதான் இருக்கும். அந்தச் சக்திதான், லெனின் போதித்த உண்மையின் சக்தி.

1917-ல் லெனின் ருஷ்யா வந்து சேர்ந்ததும் தம் சித்தாந்தங்களை* அச்சிட்டு வெளியிட்டார். இந்தச் சிந்தாந்தங்களின் மூலம் ருஷ்யாவில் அரசியல் ஞானம் பெற்ற தொழிலாளிகளும், சிறந்த கல்வியறிவு பெற்ற உண்மையான புரட்சிக்காரர்களும் அடங்கிய சிறிய

---

* ஏழை விவசாயிகளின் துணை கொண்டு பாட்டாளி மக்கள் பூர்ஷ்வாக்களிடமிருந்து அதிகாரத்தைப் பறிக்கும் வரையில் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்குரிய வேலைத்திட்டமும், பிப்ரவரி புரட்சியின் தன்மையைப் பற்றிய ஆராய்ச்சி விளக்கமும் அடங்கிய சித்தாந்தங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டத்தை, ஆனால் வீரபராக்கிரமம் நிறைந்த கூட்டத்தை, குடியானவர்களின் பொருட்டாக லெனின் பலியிடுகிறார் என்று நான் நினைத்தேன். பிடியளவு உப்புப் போன்று ருஷ்யாவில் உள்ள ஒரே ஒரு உயிர்த்துடிப்புள்ள சக்தியை, குடியானவர்கள் என்ற பெருங்கடலில் கலந்தால், கலந்தது தெரியாமல் அது கரைந்து விடும்; அந்தக் கலப்பினால் ருஷ்ய மக்களின் உள்ளத்திலோ, வாழ்க்கையிலோ, வரலாற்றிலோ யாதொரு மாறுதலும் ஏற்படாது என்று நான் எண்ணினேன். கல்வி ஞானம் பெற்றவர்கள், பொதுவாக விஞ்ஞானிகளும் யந்திர சாதன நுணுக்கம் அறிந்தவர்களும் இயற்கையிலேயே புரட்சிக்காரர்கள் என்று நான் கருதினேன். சமதர்மவாதிகளான இந்த அறிஞர்களும் தொழிலாளிகளும் சேர்ந்த கூட்டம், ருஷ்யாவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒரு கிடைத்தற்கரிய சக்தி என்பது என் கருத்து. இந்தச் சக்தியைத்தவிர வேறு எந்தச் சக்தியும் அதிகாரத்தைக் கைப்பற்றியதையும், கிராமத்தை ஸ்தாபன ரீதியாகத் திரட்டியதையும் 1917-ம் வருஷம் வரையில் நான் பார்த்தது கிடையாது. ஆள் எண்ணிக்கையில் மிக மிகக் குறைவாக இருக்கும் மேற்சொன்ன சக்தி, தனக்குள் தற்போது நிலவியுள்ள முரண்பாடுகளையும் பிழைகளையும் பரிபூரணமாக ஒழித்து ஒற்றுமையை நிலை நாட்டினால்தான் தன் காரியத்தை அதனால் நிறைவேற்ற முடியும். அவர்கள் ஒரு மகத்தான அரிய சாதனையைச் சாதிக்க வேண்டியிருக்கிறது. அதாவது அவர்கள் கிராமங்களில் உள்ள அராஜக நிலையை மாற்றி, ஒரு ஒழுங்குமுறை நிலவச் செய்ய வேண்டும்; குடியானவனின் மனப்போக்கிலும் ஒரு ஒழுங்குமுறை நிலவும்படி செய்யவேண்டும்; அவனைப் பகுத்தறிவுக்கொத்த முறையில் வேலை செய்யவும், தன் பொருளாதாரத்தை வேறுவிதமாக மாற்றியமைத்துக் கொள்ளவும், சகல வழிகளிலும் தேசம் முன்னேறுவதற்காகப் பாடுபடவும் கற்றுக் கொடுக்க வேண்டும். இது எப்பொழுது சாத்தியமாகும்? கிராமத்தின் பிறவிக் குணங்களை, நகரத்தின் பகுத்தறிவு அடக்கியாளும்படிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யும் போதுதான் இது சாத்தியமாகும். தேசத்தின் கலாசார சக்திகள் அபிவிருத்தியடைவதற்கு ஏதுவாக இருக்கும் நிலைகளைச் சிருஷ்டி செய்வதை, புரட்சி சாதிக்க வேண்டிய பிரதான காரியமாக நான் கருதினேன். இதை லட்சியமாகக் கொண்டு, காப்ரியில் தொழிலாளிகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் நிறுவ ஏற்பாடு செய்தேன். 1907-லிருந்து 1913 வரை, பிற்போக்கு நிலை தலை தூக்கியிருந்த காலத்தில், சாத்தியமான வழிகளிலெல்லாம் தொழிலாளிகளின் உத்வேகத்தை வளர்ப்பதில் என் முயற்சியைச் செலவிட்டேன். இதே லட்சியத்துடன்தான், தான், பிப்ரவரிப் புரட்சி முடிந்ததும் உடனடியாக ஆக்க பூர்வமான விஞ்ஞானத்தை அபிவிருத்தி செய்யவும், பரப்பவும் ஒரு கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தக் கழகம் ஒரு புறத்தில் ருஷ்யாவில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்களை நிறுவவும், வேறொரு புறத்தில் தொழிலாளிகளிடையே விரிந்த அளவில் விஞ்ஞான அறிவையும், யந்திர சாதன அறிவையும் பரப்பவும் பாடுபட்டு வந்தது. கழகத்தின் தலைமைப் பீடத்தில் தலைசிறந்த விஞ்ஞானிகளும், விஞ்ஞான சபைகளின் அங்கத்தினர்களுமான வி. ஏ. ஸ்டெக்லாவ், எல். ஏ. சுகாயேவ், பர்ஸ்மான், எஸ். பி. கோஸ்டிலேவ், ஏ. ஏ. கெட்ரோவ்ஸ்கி முதலிய பலரும் அமர்ந்திருந்தனர். அதற்கு வேண்டிய சாதனங்கள் யாவும் பெரும் பிரயாசைப் பட்டுச் சேகரித்து வைக்கப்பட்டன. மிருக சாஸ்திர, தாவர சாஸ்திர ஆராய்ச்சி நிலையத்துக்காக ஏற்கெனவே எஸ்.பி. கோஸ்டிலேவ் இடம் தேட ஆரம்பித்து விட்டார். இங்கே என்னுடைய நிலையைத் தெளிவுபடுத்தச் சில விஷயங்களைத் தெரிவிக்கிறேன். அப்போது கிராமங்களில் அமோகமாக நிலவியிருந்த எழுத்தறிவின்மை நகரத்தைப் பாதித்தது. குடியானவர்கள் சமுதாய உணர்ச்சி என்பதே இல்லாமல் உதிரிகளான தனி மனித வாதத்தில் தோய்ந்து கிடந்தனர். இந்தக் காரணங்களால் என் வாழ்நாள் முழுவதும் என் உணர்ச்சி உத்வேகங்களெல்லாம் நசுக்கப்பட்டுக் கிடந்தன. யுத்தத்தின் பயனாகக் கஷ்டம் நிறைந்த ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலை அப்போது நிலவிவந்தது; முக்கியமாகக் கிராமங்கள் பின்னும் அதிகமாக அராஜக நிலை அடைந்து சிதறுண்டு போய்க் கிடந்தன. இந்த நிலைக்கு விமோசனம் காண வேண்டுமானால், அரசியல் ஞானம் பெற்ற தொழிலாளிகள் விஞ்ஞான, யந்திர சாதன அறிஞர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு சர்வாதிகாரத்தை அடைவது ஒன்றே வழி என்பது என் கருத்து. ருஷ்யப் புரட்சியில் படித்த கூட்டத்தின் பங்கு என்ன என்ற விஷயத்தில் எனக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் அபிப்பிராய பேதம் இருந்தது.

ருஷ்யப் புரட்சிக்குத் திட்டம் தயாரித்தவர்களும் அதே படித்த கூட்டந்தான். போல்ஷ்விக்கர்கள் யாவரும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே. நூற்றுக்கணக்கான தொழிலாளிகளுக்கு, சமுதாய ரீதியில் சாதிக்க வேண்டிய வீரச் செயலையும், உண்மையான ஞானத்தையும் போதித்தவர்கள் போல்ஷ்விக்கர்கள். ருஷ்யச் சரித்திரம் என்ற பெரும் பாரத்தை இழுத்துச் செல்லத்தக்க பேராற்றல் ருஷ்யாவின் படித்த கூட்டத்திடந்தான் இருந்ததாகவும், இருப்பதாகவும், இருக்கப் போவதாகவும் நான் எண்ணியிருந்தேன். பொது ஜனங்கள் எத்தனையோ அதிர்ச்சிகளையும், உணர்ச்சிகளையும், மனக்கிளர்ச்சிகளையும் அனுபவித்தவர்கள்தான் என்றாலும், அவர்களுடைய கூட்டுச் சக்திக்கு வெளியிடத்துத் தலைமை தேவையாகவே இருந்தது.

இவ்விதமாக நான் பதின்மூன்று வருஷங்களுக்கு முன்பு அபிப்பிராயப்பட்டேன். அவை யாவும் தவறான அபிப்பிராயங்கள். என் நினைவுக் குறிப்புகளில் இந்தப் பக்கத்தைக் கிழித்தெறிய வேண்டும். ஆனால், ''பேனா எழுதியதைக் கோடாலி வெட்டியெறிய முடியாது.'' அத்துடன் லெனின் அடிக்கடி கூறுவதுபோல, ''நம் தவறுகளிலிருந்து நாம் பாடம் படிக்கிறோம்'' என் தவறை வாசகரும் தெரிந்து கொள்ளட்டும். இப்படித் தெரிந்து கொள்ளுவது, அவசரப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட முடிவுக்கு வருகிறவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகப் பயன்படும் அல்லவா? 'விசேஷத்திறமை பெற்ற பல அறிஞர்கள் தொடர்ந்து செய்து வந்த ஈனத்தனமான அறிஞர்களைப்பற்றி நான் கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளுவதைத்தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது. மனதில் இப்படி மாறுதல் நிகழ்வது மனிதனையும் பாதிக்காமல் விடுவதில்லை. அதிலும் வயது முதிர்ந்த மனிதனைப் பாதிக்காமல் விடுவதே இல்லை. உண்மையான பொது ஜனத் தலைவர்களுடைய கடமை மிக மிகக் கஷ்டம் நிறைந்ததாக இருக்கிறது. ஏதோ ஓர் அளவில் ஒரு தலைவன் கொடுமை நிறைந்தவனாக இல்லாமல் இருப்பது சாத்தியமில்லை. தாமஸ் மன்னரின் கீழ் கொல்லப்பட்டவர்கள் அதிகமாக இருக்கக்கூடும். ஆனால் இது நடவாதிருந்தால், லெனின் தலைமையில் நடந்த அந்தப் புரட்சிக்கு, அதிக பலம் கொண்ட எதிர்ப்பைச் சிருஷ்டித்திருப்பார்கள். இங்கே நாம் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். நாகரிகம் வளரவளர, மனித உயிரின் மதிப்புக் குறைந்து கொண்டே வருவது வெளிப்படையாகவே தெரிகிறது. அதற்கு, இன்றைய ஐரோப்பாவில் ஜனங்களைக் கொல்லப் புதிய உபாயங்கள் தோன்றிக்கொண்டிருப்பதும், அப்படிக் கொல்லுவதில் ரசனை ஏற்பட்டிருப்பதும் தக்க சான்றுகள்.

திரு போதகர்கள், ருஷ்யப் புரட்சி ரத்த வேட்கை கொண்டதென்று பசப்புகிறார்கள். இதே நீதிமான்கள், நான்கு வருஷ ஐரோப்பிய யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களுக்கு யாதொரு இரக்கமும் காட்டவில்லை. அதுமட்டுமல்லாமல், இந்த வெறுக்கத்தக்க யுத்தம் ''வெற்றிகரமான முடி''வை அடையும் வரை, அவர்கள் தங்களால் இயன்ற வழிகளிலெல்லாம் அந்த நெருப்பை வளர்த்தும் வந்தார்கள். இப்படிப்பட்டவர்கள் பாசாங்கு பண்ணிக் கொண்டு ''ரத்த வேட்கை' என்று சொல்லுவதை எவ்வளவு தூரம் ஒப்புக் கொள்ளுகிறீர்கள், எவ்வளவு தூரம் உங்கள் உள்ளம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதனால் கிளர்ச்சியுற்றிருக்கிறது என்பதை வெளிப்படையாகச் சொல்லும்படி நான் ஒவ்வொருவருக்கும் சவால் விடுகிறேன். இன்று ''நாகரிகம்'' அடைந்த நாடுகள் பாழ்பட்டு, செத்துக் கொண்டிருக்கின்றன. ஆபாசமான ''பெட்டி பூர்ஷ்வா பிலிஸ்டினிஸம்''* மேலோங்கி நின்று ஆட்சி செலுத்துகிறது. அதன் சுருக்குக் கயிற்றுக்குத் தப்ப முடியாது. ஜனங்களின் கழுத்தை இப்போது நெரித்துக் கொன்று கொண்டிருக்கிறார்கள்.

லெனினுடைய கொடுமையைப் பற்றி எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள்; எவ்வளவோ எழுதியிருக்கிறார்கள். அவர் சம்பந்தமாகத் திரிக்கப்பட்ட புளுகுகளையும், வதந்திகளையும் மறுத்துக் கொண்டிருக்கும் பைத்தியக்காரத்தனத்தை நான் செய்யப் போவதில்லை. புளுகுவதும், அவதூறுகளைச் சிருஷ்டிப்பதும் பெட்டி பூர்ஷ்வா அரசியலின் இயல்பு. எதிரிகளை அவர்கள் எப்போதுமே அப்படித்தான் தாக்குவார்கள். உலகத்தில் எந்தப் பெரிய மனிதன் மீதும் மண்ணை எறிந்துதான் இருக்கிறார்கள். மண்ணெறி படாத ஒரு பெரிய மனிதனை நாம் பார்க்கவே முடியாது. இது யாரும் அறிந்ததுதான். மேலும் எல்லா ஜனங்களிடத்திலும் ஒரு குணம் காணப்படுகிறது. அதாவது பெரிய மனிதனாக இருக்கும் ஒருவனைத் தங்கள் திருஷ்டியளவுக்குத் தாழ்த்துவதிலும், தாழ்த்துவதுடன் நிற்காமல் தாங்களே சிருஷ்டித்து தாங்களே ''தினசரி வாழ்க்கை'' என்று அழைக்கின்ற கொழ கொழக்கு அழிச்சேற்றில், தங்கள் காலடியில், அந்தப் பெரிய மனிதனை உருட்டி விடுவதிலும், எல்லோருக்கும் ஒரு பிரியம்.

கீழ்க்காணும் நிகழ்ச்சி என் ஞாபகத்தில் ஆழப்பதிந்து, நினைக்கும்போதெல்லாம் அருவருப்பைத் தருகிறது. 1919-ல், பீட்டர்ஸ் பர்க்கில் ''கிராம ஏழைகள்'' மகாநாடு

* குட்டிப் பூர்ஷ்வாக்களின் அநாகரிகத் தன்மை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒன்று நடைபெற்றது. வடக்கு ருஷ்யாவின் கிராமங்களி லிருந்து பல்லாயிரக் கணக்கான குடியானவர்கள் மகா நாட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்களில் சில நூற்றுக் கணக்கானவர்களுக்கு ரோமனோவ் குடும்பத்தின் குளிர்கால மாளிகையில் ஜாகை வசதி செய்யப்பட்டிருந்தது. மகாநாடு முடிந்தது; எல்லோரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள். அப்புறம் அந்த மாளிகையைப் போய்ப் பார்த்தபோது, சகல ஸ்நான அறைகளையும், அநேக விலை மதிக்க முடியாத அழகிய பூந்தொட்டிகளையும் அங்கே தங்கியிருந் தவர்கள் கக்கூஸ் காரியத்துக்குப் பயன்படுத்தியிருப்பது தெரிய வந்தது. எந்த ஒரு அவசியத்தை முன்னிட்டும் அவர்கள் இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. மாளி கையின் கக்கூஸ்கள் நல்ல நிலையில்தான் இருந்தன; தண்ணீர் வசதியும் குறைவில்லாமல்தான் இருந்தது. அப்படியிருக்க அவர்கள் இப்படிப் போக்கிரித்தனம் பண்ணு வானேன்? அதுதான் அழகான வஸ்துக்களை ஆபாச மாக்கிக் கேவலப்படுத்த வேண்டுமென்ற ஆசை. அழகா யிருப்பதை நொறுக்கி உருக்குலைத்து, இழிவுபடுத்த வேண்டுமென்ற இந்தப் பழிவாங்கும் ஆசை, இரண்டும் புரட்சிகளின் போதும், யுத்தத்தின் போதும் நூற்றுக்கணக் கான சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டிருக்கிறது. குடியான வர்கள் விஷயத்தில் எனக்கிருந்த நம்பிக்கையின்மையின் காரணமாக நான் கிராம ஏழைகளின் நடத்தையைப் பற்றி இவ்வாறு அழுத்திக் கூறுவதாக நினைக்கக் கூடாது. பேரறிஞர்கள் பலரிடத்திலும் அழகை அசிங்கப்படுத்தும் இந்த ஆசை இருப்பதைப் பார்த்திருக்கிறேன். உதாரணமாக ருஷ்யாவிலிருந்து ஓடி வெளிநாடுகளில் குடியேறியிருப் பவர்கள் சிலரைக் கூறலாம். தாங்கள் ருஷ்யாவில் இல்லா விட்டால், அங்கே நல்லது எதுவும் இருக்க முடியாதென்று நினைக்கக் கூடியவர்கள் அவர்கள்.

அசாதாரணமான, அழகு நிறைந்த வஸ்துக்களை உருக்குலைக்க விரும்பும் இந்தக் கெட்ட ஆசையும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அசாதாரணமான மனிதனைக் கேவலப் படுத்த விரும்பும் கெடு புத்தியும் அடிப்படையில் ஒன்றுதான். அசாதாரணமாக உள்ள எதுவும், ஜனங்களைத் தாங்கள் வாழவிரும்பும் முறையில் வாழவிடாமல் தடுக்கிறது. ஜனங்களுக்கு ஏதேனும் ஆசைகள் இருக்குமென்றால், அவை சமூகப் பழக்கங்களில் அடிப்படையான மாறுதல் செய்ய வேண்டுமென்பதில் இல்லை; மேற்கொண்டு அதிகப் பழக்கங்களைக் கடைப் பிடிக்க வேண்டுமென்பதில்தான் ஆசை இருக்கிறது. பெரும்பான்மையோர், "நாங்கள் பழகிப்போன இந்த வாழ்க்கை முறையில் நீங்கள் தலையிடாதீர்கள்!" என்பதைத் தெரிவிப்பதற்காகவே அழுவதும், புகார் பண்ணுவதுமாக இருக்கிறார்கள். தாங்கள் பழகிப் போன வாழ்க்கையிலிருந்து மக்களை மீட்பது எப்படி என்பதை, மற்ற யாரையும் விட லெனின் நன்கு அறிந்திருந்தார். உலகத்தின் பூர்ஷ்வாக்களுக்கு லெனின் மீது எவ்வளவு வெறுப்பு இருக்கிறது என்பது பகிரங்கமாகவே தெரிகிறது. ஆனால் இந்த வெறுப்பின் மூலம் ஒரு உண்மை வெளி யாகிறது. அதாவது அகில உலகப் பாட்டாளிகளின் தலை வராகிய லெனின், உலக பூர்ஷ்வாக்களின் கண்களுக்கு எவ்வளவு பெரிய ஸ்வரூபத்தில், எவ்வளவு பயங்கரமாகக் காட்சியளிக்கிறார் என்பது வெளியாகிறது. அவருடைய பூத உடல் இப்பொழுது இல்லை. ஆனால் அவருடைய குரல் இருக்க இருக்க அதிகமான வெற்றி முழக்கத்துடன் உலகத் தொழிலாளிகளின் செவியில் ஒலி செய்து கொண் டிருக்கிறது. ஏற்கனவே உலகின் சகல மூலைகளிலும் அந்தக் குரல், புரட்சிக்கும், புதுவாழ்வுக்கும், மக்களிடையே சமத்துவம் நிலவும் புது உலக சிருஷ்டிக்கும் ஜனங்களைத் தூண்டிக் கொண்டுதான் இருக்கிறது. முன்பு லெனினுடைய மாணவர்களாக இருந்து இன்று அவருடைய போராற்றலின் வாரிஸ்களாக விளங்குபவர்கள் தினந்தினமும் வளர்ந் தோங்குகிற நம்பிக்கையுடனும், பலத்துடனும், வெற்றி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யுடனும் அந்த மகத்தான பணியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

## "சத்திய ஸ்வரூபம்"

வாழ வேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த நிச்சய தீர்க்கமான திடசித்தமும், வாழ்க்கையின் அருவருக்கத் தக்க அம்சங்கள் மீது அவருக்கிருந்த வெறுப்பும் என்னை அவர்பால் ஆகர்ஷித்தன. தாம் செய்த ஒவ்வொரு காரியத்திலும் வாலிபத் துடிப்புடன் அவர் காட்டி வந்த ஆர்வம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவருடைய நடமாட்டத்தில் லகுவும், துறு துறுப்பும் நிறைந்திருக்கும். அவருடைய பேச்சும், சைகை ஜாடைகளும் ஒரு லயப்பட்டு அமைந்திருந்தன. குறைந்த வார்த்தைகளில் ஆழ்ந்த கருத்துடன் அவர் பேசுவார். வாழ்க்கையில் காணும் பொய்களையும் துயரங்களையும் எதிர்த்து அலுப்புச் சலிப்பு இல்லாமல் போராடுகின்ற அவருடைய கூரிய விழிகள், சற்றே மங்கோலியத் தோற்றம் உடைய அவர் முகத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவை ஒரு சமயம் பிரகாசிக்கும்; ஒரு சமயம் கனன்று கொண்டிருக்கும்; ஒரு சமயம் உருட்டி விழிக்கும்; படபடவென்று ஒரு சமயம் இமைகளைக் கொட்டிக் கொண்டு பார்க்கும்; வேறொரு சமயம் நிந்தனையோடு புன்னகை செய்யும்; ஒரு சமயம் கோபத்துடன் மின் வீச்சு வீசும். அவருடைய கண்களின் பிரகாசம், அவருடைய சொற்களுக்கு அதிக சோபையைத் தந்தது. சில சமயங்களில், அவருடைய கட்டுக்கடங்காத ஆத்ம சக்தி கண்களின் வழியாகவும், வார்த்தைகளின் வழியாகவும் திரும்பத்திரும்பத் தீப்பொறிகளாகப் பறந்து வந்து தனியே நின்று பிரகாசித்துக் கொண்டிருப்பதுபோலத் தோன்றும். மறுப்பதற்கியலாத உண்மை, பிண்டரூபத்தில் வந்து அழுத்துவது போல அவருடைய சொற்கள் அமைத்திருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கார்க்கி*யின் பூங்காவில் லெனின் அமர்ந்திருக்கும் காட்சி ஒரு தனி விதமாகவும் அசாதாரணமாகவும் இருக்கும். அவரை நினைக்கும்போது, ஒரு நீண்ட மேஜையின் கோடியில் உட்கார்ந்து, தனித்திறமையுடன், தோழர்கள் எவ்வாறு தங்கள் வேலையைச் செய்துவர வேண்டுமென்று வழிகாட்டிக் கொண்டும், மாலுமியைப் போலக் கவனம் நிறைந்த பார்வையுடன் புன்னகை செய்து கொண்டும், முகத்தில் மகிழ்ச்சிக் குறியைக் காட்டிக் கொண்டும் இருக்கும் நிலையே காட்சியளிக்கிறது. இது தவறினால், உண்மையை அறியவேண்டுமென்னும் தாகம் கொண்ட மக்கள் கூட்டத்தின் முன்பாக, மௌனமாக இருக்கும் கூட்டத்தின் முன்பாக, மேடையின் மேல் ஏறி நின்றுகொண்டு, தலையைப் பின்னோக்கிச் சாய்த்து, தெள்ளத் தெளிவான அழுத்தந் திருத்தமான சொற்களில் பேசும் அவருடைய உருவம் ஞாபகத்துக்கு வருகிறது.

அவருடைய சொற்களை நினைத்தால், இழைப்புளியால் சீவிப்போடப்பட்ட உருக்குச் சீவல்களே என் மனக் கண் முன் வந்து நிற்கின்றன. இந்தச் சொற்களிலிருந்து, ஆச்சரியப் படத்தக்கவாறு எளிமை நிறைந்த தோற்றத்தில், சிற்பம் போலப் பரிபூரணமாக வடிக்கப்பட்ட சத்தியஸ்வரூபம் உருப் பெற்றுவிடுகிறது.

லாப நஷ்டத்தை யோசிக்காமல் துணிச்சலாகக் காரியத்தில் இறங்குவது அவர் வழக்கம். ஆனால் அது சூதாடியின் துணிச்சல் அல்ல. ஏனென்றால், அதில் பண ஆசை சம்பந்தப்படவில்லை. அசாதாரணமான மனோதிடத்தின் புறத்தோற்றமாகவே லெனினிடம் அந்தத் துணிச்சல் அமைந்திருந்தது. அந்தமாதிரியான மனோதிடம், தன் மகத்தான லட்சியப்பணியில் அசையாத நம்பிக்கை

---

* கர்க்கி-மாஸ்கோவுக்கு அருகில் உள்ள ஒரு கிராமம். லெனின் ஓய்வெடுப்பதற்கு அங்கு செல்வது வழக்கம். அங்குதான் அவர் 21-1-1924-ல் காலமானார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்ட ஒருவனுக்கு, தனக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பைப் பரிபூரணமாகக் கண் முன் நிறுத்திக் கண்ட றிந்த ஒருவனுக்கு, உலகக் குழப்பத்தில் தன் பங்கு என்ன, தன் எதிரியின் பங்கு என்ன என்பதைப் பூரணமாகத் தெரிந்து கொண்ட ஒருவனுக்கு உரிய மனோதிடமாகும். சதுரங்கம் விளையாடுவதிலும், "உடையின் வரலா"ற்றைப் புரட்டிப் பார்ப்பதிலும், தோழர்களுடன் மணிக்கணக்காக விவாதம் செய்வதிலும், மீன் பிடிப்பதிலும், காப்ரித்தீவின் கல் பாதைகளில் சுடுகின்ற தக்ஷிணாயன வெய்யிலில் உலா வுவதிலும் ஒரே மாதிரியான உற்சாகம் காண்பிப்பது அவர் வழக்கம். அதே உற்சாகத்துடனேயே பொன்னிறத்தில் பூத்துக் குலுங்கும் புதர்களையும், கருப்பு மூஞ்சியோடு காட்சியளிக்கும் செம்படவக் குழந்தைகளையும் பார்த்துக் களிப்பார். மாலை நேரத்தில் ருஷ்ய நாட்டைப்பற்றியும், ருஷ்ய கிராமங்களைப் பற்றியும் உள்ள கதைகளைக் கேட்டு விட்டுப் பெருமூச்செறிந்து கொண்டு, "ருஷ்யாவைப் பற்றி நான் அறிந்துள்ளது மிகமிகக் கொஞ்சம். சிம்பிர்ஸ்க், காஸன், பீட்டர்ஸ்பார்க், நாடு கடத்தப்பட்டு சைபீரியாவில் வாழ்ந்த வாழ்க்கை-ஏறக் குறைய ருஷ்யாவைப்பற்றி நான் அறிந்திருப்பது இவ்வளவுதான்" என்று சொல்லுவார்.

அவருக்குத் தமாஷ் மிகவும் பிடிக்கும். அவர் சிரிக்கும் போது தம் முழு உடம்பாலும் சிரிப்பார். சிரிப்பு வெள்ளம் அவரைப் பரிபூரணமாக அடித்துக் கொண்டு போய்விடும். சில சமயங்களில் அழுகை வரும் வரையில் சிரிப்பார். அவர் 'ஹூம் ஹூம்' என்று அடிக்கடி முனகுவது வழக்கம். அதில் எத்தனையோ விதமான மாறுதல்கள் நிகழும். குத்தல் முதல் அக்கரையில்லாத சந்தேகம் வரை அது பற்பல உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும். வாழ்க்கையின் முட்டாள் தனங்களை அலசிப் பார்க்கக் கூடிய கூர்ந்த பார்வை படைத்த ஒருவனுக்கு ஏற்படும் நுட்பமான ஹாஸ்ய உணர்ச்சியே அடிக்கடி அந்த "ஹூம் ஹூம்" முனகலில் நிறைந்திருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நன்கு கட்டமைந்த வைரம் பாய்ந்த உடம்பு. சாக்ரட்டீஸின் தலையைப் போன்ற தலை. தீட்சண்யமான கண்கள். அடிக்கடி அவர் ஒரு ஹாஸ்யமான அவசரத்தில் காட்சியளிப்பார். அதாவது தலையைப் பின்னோக்கிச் சாய்த்துக் கொள்ளுவார்; அப்புறம் அதை எப்படியோ ஒருவழியாகத் தம் புஜத்தின் பக்கமாகவும் சாய்த்துக் கொள்வார். கஷ்கத்திலும், அரைச் சட்டையின் கைத் துவாரங்களிலும் விரல்களைச் செருகிக் கொள்ளுவார். இந்த நிலையில் அவர் நின்றால் அது ரசிக்கத்தக்கதாகவும் வேடிக்கையாகவும் இருக்கும். அப்போது வெற்றி பெற்ற போர்ச் சேவலின் சாயலும் அவரிடம் காணப்படும். அந்தச் சமயத்தில் அவர் உடம்பு மகிழ்ச்சியினால் சோபை பெற்றுத் திகழும். தீமை நிறைந்த இந்த உலகில் அவர் ஒரு வயது முதிர்ந்த குழந்தை; மிகச் சிறந்த ஒரு மனித ஜீவன். முடிவில் அன்பு நிலவ வேண்டும் என்பதற்காக விரோதத்துக்கும் குரோதத்துக்கும் தம்மையே பலியிடுகின்ற மனித ஜீவன் அவர்.

## அறிவாளிகள், நிபுணர்கள்

1918 வரையில் நான் லெனினைச் சந்திக்கவில்லை; தூரத்தில் நின்றுகூட அவரைப் பார்க்கவில்லை. அந்த வருஷம் தான் அவரைக் கொல்லுவதற்குக் கடைசி முயற்சி நடைபெற்ற வருஷம்.* நான் வந்து அவரைப் பார்த்த போது, அவருடைய கை சரிவரக் குணமாகாமல் இருந்தது. அநேகமாகக் கையை உபயோகிக்க முடியாத நிலை, கழுத்தையும் அசைக்கமுடியவில்லை. கழுத்தின் வழியாகக் குண்டு பாய்ந்திருந்தது. இதைப் பார்த்ததும் என் கோப

* 1918-ல் லெனின் தொழிலாளிகள் கூட்டம் ஒன்றில் பேசிவிட்டு, தொழிற்சாலையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தபோது, டோரா கப்ளான் என்ற சமதர்மப் புரட்சிவாதி அவரைக் கொல்ல முயன்றான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெறியைக் காட்டிக் கொண்டேன். ஏற்கனவே அனுப வித்துத் தீர்த்த ஒன்றை விட்டுத் தள்ளுவது போல அவர் பதில் சொன்னார்; ''ஒரே களேபரமான நிலை; எதுவும் செய்வதற்கில்லை. ஒவ்வொருவனும் அவனவன் புத்திக்குத் தோன்றுகிறபடி நடந்து கொள்ளுகிறான்.''

நாங்கள் நட்பு முறையிலேயே சந்தித்துக் கொண்டோம். ஆனால் லெனினுடைய கூரிய, ஊடுருவுகின்ற பார்வையில் இரக்கம் குடி கொண்டிருந்தது. காரணம், அந்தச் சமயத்தில் சரியான வழியை விட்டுவிட்டுத் தடம் புரண்டு அலைந் தவர்களில் நானும் ஒருவனாக இருந்ததுதான்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு அவர் சொன்னார்: ''நம் மோடு இல்லாதவன் நமக்கு எதிரியாகவே இருக்கிறான். நடைமுறை நிகழ்ச்சிகளின் சம்பந்தமில்லாமல் இருப்ப தென்பது வெறுங் கனவு நிலைதானே ஒழிய வேறில்லை. இப்படிப்பட்டவர்கள் ஒரு காலத்தில் வாழ்ந்தார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும், இன்று அவர்கள் வாழவில்லை; வாழவும் முடியாது. அவர்களால் யாருக்கும் பிரயோஜனம் கிடையாது. கடைசி மனிதன்வரை சகலரும் யதார்த்த நிலையின் சுழலில் சிக்கித்தான் இருக்கிறார்கள். அந்தச் சுழலோ முன்னைவிட இப்போது அதிகச் சிரமம் தருவதாக இருக்கிறது. வாழ்க்கையை நான் மிகவும் சல்லி சாக எளிமைப் படுத்தி மதிப்பிடுவதாக நீங்கள் கருதுகிறீர் களா? இப்படி மதிப்பிடுவதன் காரணமாகக் கலாசாரத்துக்கு அழிவு ஏற்படும் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா? ஹூம்?'' இவ்வாறு கூறிவிட்டு வழக்கம் போல அந்தப் பரிகாசக் குரலில் ''ஹூம், ஹூம்'' என்றார்.

அவருடைய கூரிய பார்வை பின்னும் கூர்மை யடைந்தது. தாழ்ந்த குரலில் தொடர்ந்து பேசலானார்: ''லட்சக் கணக்கான குடியானவர்கள் கைத்துப்பாக்கி களுடன் நிற்பதால், கலாசாரத்துக்கு ஆபத்து ஏற்படாது என்று நீங்கள் அபிப்பிராயப்படுகிறீர்களா? அரசியல் திர்ணய

www.tamilarangam.net



சபை இந்த அராஜகத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்று விடும் என்று நினைக்கிறீர்களா? தேசத்தின் அராஜக நிலைமையைப் பற்றித் தடபுடல் பண்ணிக் கொண்டிருக்கும் உங்களுக்கு நாம் சாதிக்க வேண்டிய அரிய காரியங்கள் இன்னவை என்று மற்றவர்களைவிட நன்றாகப் புரிந்து கொள்ளும் சக்தி இருக்க வேண்டும். ருஷ்ய மக்களின் முன்னிலையில், எளிமை வாய்ந்த ஒன்றை, அவர்களால் பற்றிப் பிடித்துக் கொள்ள இயலும் ஒன்றை, நாம் சமர்ப்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சோவியத்துகளும் கம்யூனிஸமும் எளிமை வாய்ந்தவையாக உள்ளன. பாட்டாளி— படித்தவன் ஐக்கியம்? அந்த ஐக்கியம் மோசமானதல்ல. படித்தவர்களிடம் போய்ச் சொல்லுங்கள். அவர்கள் நம்மிடம் வரட்டும். உங்கள் அபிப்பிராயப்படி அவர்கள் நீதியின் உண்மை வழியர்கள். அப்படியிருக்கக் கவலை ஏன்? உண்மையில், அவர்கள் நம்மிடம் வரட்டும். மக்களைச் சுயபலத்தில் நிற்கச் செய்கின்ற, அகில உலகத் திற்கும் வாழ்க்கையின் உண்மையை எடுத்துக் கூறுகின்ற மகத்தான காரியத்தை மேற்கொண்டவர்கள் தான் நாம். நாம் மனித வாழ்க்கைக்குரிய நேர்வழி இன்ன தென்பதை மக்களுக்குக் காட்டுகிறவர்கள். அந்த வழி அடிமைத்தனம், பிச்சை யேற்கும் பிழைப்பு, இழிந்த நிலை ஆகியவற்றைக் கடந்து செல்லுவதற்கேற்ற வழியாக உள்ளது.'' இவ்வாறு கூறிவிட்டு அவர் சிரித்தார். அப்புறம் கொஞ்சம்கூட மன வருத்தத்தின் சாயல் இல்லாமல் கூறினார்: ''இதனால்தான் படித்த கூட்டத்தின் துப்பாக்கிக் குண்டு என் மீது பாய்ந் திருக்கிறது.'' சம்பாஷணையில் வேகம் சமநிலை அடைந் ததும் கசப்போடும், வருத்தத்தோடும் சொன்னார்:

''படித்த கூட்டம் நமக்குத் தேவை என்னும் அபிப் பிராயத்தை நான் மறுப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? ஆனால், அவர்கள் நம்மீது எவ்வளவு எதிரிடையான அபிப் பிராயத்துடன் இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்! சந்தர்ப்பத் தேவையைப் புரிந்து கொள்ளுவதில் அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எவ்வளவு மோசமாக இருக்கிறார்கள்! அத்துடன், நாம் இல்லாவிட்டால் தங்களுக்குப் பலமே கிடையாது என்பதையும், ஜனங்களை அணுகவும் தங்களால் இயலாது என்பதையும், அவர்கள் உணருவதில்லை. நம்மால் பலருடைய தலைகளுக்கு ஆபத்து வரும் என்றால், அதற்காகக் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள் அவர்கள் தான்.''

அநேகமாக நாங்கள் சந்திக்கும் போதெல்லாம் இந்த விஷயத்தைக் குறித்துச் சர்ச்சை செய்தோம். படித்த கூட்டத்திடம் அவருக்கு அவநம்பிக்கையும் விரோத உணர்ச்சியும் இருந்த போதிலும், புரட்சியின் வளர்ச்சிக் கட்டத்தில் அறிவின் பலத்துக்குரிய முக்கியத்துவத்தை அவர் சரியாகவே மதிப்பிட்டிருந்தார். அந்த அறிவின் பலத்திலிருந்துதான் புரட்சி வெடிக்கிறது என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். அந்தச் சக்தி புதிதாக ஏற்பட்டிருக்கும் நிலைமைகளுக்கு ஏற்றவாறு வளர்ச்சி பெற இயலாதிருப்பதையும் உண்மை என்று ஒப்புக் கொண்டார்.

அவருடனும், விஞ்ஞான சாஸ்திரக் கழக அங்கத்தினர்கள் மூவருடனும் நான் அமர்ந்திருந்த ஒரு சந்தர்ப்பம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள ஒரு தலைசிறந்த விஞ்ஞான ஸ்தாபனத்தைச் சீர்திருத்தி அமைக்கவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. அந்த மூவரும் விடை பெற்றுப் போன பிறகு, லெனின் திருப்தியுடன் சொன்னார்: ''ரொம்பவும் நல்லதாகப் போயிற்று. இவர்கள் புத்தி சூட்சுமம் உள்ள அறிஞர்கள். இவர்களைப் பொறுத்தமட்டிலும், ஒவ்வொன்றும் எளிமை வாய்ந்ததாக, குறிப்பிட்ட ஒழுங்கு முறை உடையதாகவே இருக்கிறது. இந்த ஆட்கள் தாங்கள் விரும்புவது என்ன என்பதைத் திட்டவட்டமாக அறிந்து கொண்டிருப்பதைப் பார்த்தீர்களா? இப்படிப்பட்டவர்களுடன் பணியாற்றுவதே ஒரு சந்தோஷகரமான காரியம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனக்கு ரொம்பப் பிடித்துப்போய் விட்டவர்'' என்று ருஷ்யாவின் விஞ்ஞானத் துறையில் உள்ள ஒரு பெரிய புள்ளியைக் குறிப்பிட்டார் லெனின். மறுநாள் டெலிபோன் மூலம் என்னை அழைத்து, ''நம்மோடு வந்து வேலை செய்ய முடியுமா என்று ஸ. வைக் கேளுங்கள்'' என்றார். ஸ. அதற்குச் சம்மதிக்கவே, லெனின் உண்மையிலேயே மனமகிழ்ச்சியடைந்து, கைகளைத் தேய்த்துக் கொண்டு தமாஷாகப் பேசும் தோரணையில் சொன்னார்: ''ருஷ்யாவிலும், ஐரோப்பாவிலும் உள்ள எல்லா ஆர்க்கிமெடீஸ்* களையும் ஒவ்வொருவராக நாம் வெற்றி கொள்ளப்போகிறோம். அப்புறம் அகில உலகமும், அது விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாறித்தான் ஆகவேண்டும்.''

கட்சியின் எட்டாவது காங்கிரஸில், என். ஐ. புகாரின் பல விஷயங்களைச் சொல்லிக் கொண்டு வரும்போதே, நடுவில், ''பூர்ஷ்வாக்களும், பாட்டாளிகளும் சேர்ந்து தேசீய இனமாக இருக்கிறார்கள். ஏதோ சில பூர்ஷ்வாக்களுடைய சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதென்பது இப்போது கொஞ்சம்கூடப் பொருத்தமில்லாத காரியம்'' என்றார். உடனே லெனின் அதை மறுத்து ''தப்பு, அது பொருத்தமில்லாத காரியமல்ல. பூர்ஷ்வாக்களையும் தொழிலாளிகளையும் வித்தியாசப்படுத்தும் செயல் முறை**யை நீங்கள் வற்புறுத்துகிறீர்கள். ஆனால் இந்த முறை நாளடைவில் என்ன மாறுதலை அடையப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றார். அப்புறம் ஜெர்மனியை உதாரணம் காட்டி, வித்தியாசப்படுத்தும் செயல்முறை எவ்வளவு அசமந்தமாகவும், சிரமத்துடனும் வளர்கிறது என்பதைச் சுட்டிக்

---

* ஆர்க்கிமெடீஸ். [கி. மு. 287-212]: சுமார் 2200 வருஷங்களுக்கு முன் வாழ்ந்த கிரேக்க விஞ்ஞானி, கணித சாஸ்திரமேதை.

** வித்தியாசப்படுத்தும் செயல் முறை - Process of the differentiaiton.

www.tamilarangam.net



காண்பித்தார். பின்பு, கம்யூனிஸத்தைப் பலாத்காரத்தினால் நிலைநாட்டி விடமுடியாது என்று கூறிவிட்டு, தொழில் துறையிலும், ராணுவத் துறையிலும், கோவாப்ரேட்டிவ் இயக்கத் துறையிலும் படித்த கூட்டத்திற்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் இருக்கிறது என்பதைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தார். இந்தக் காங்கிரஸ் விவாதங்கள் பற்றி இஸ்வெஸ்தியா''*வில் வெளிவந்ததை இங்கே கொடுக்கிறேன்:

''அடுத்த மகாநாட்டில் இந்தப் பிரச்னை குறித்துப் பரிபூரணமாகவும், திட்டவட்டமாகவும் ஒரு தீர்மானத்துக்கு வந்தாக வேண்டும். பூர்ஷ்வா விஞ்ஞானத்தின் மூலமாகவும், யந்திர சாதன நுணுக்க ஞானத்தின் மூலமாகவும் மக்களால் கம்யூனிஸத்தை ஏற்றுக்கொள்ள முடிகின்ற கட்டத்தில் தான், கம்யூனிஸத்தை நாம் மேற்கொண்டு கட்டி வளர்க்க முடியும். இதற்கு அனுசரணையாக இருக்க நாம் பூர்ஷ்வாக்களிடமிருந்து யந்திர சாதனங்களைக் கைப்பற்ற வேண்டியது அவசியம்; அத்துடன் இந்த வகையில் பணியாற்றுவதற்கு விசேஷ நிபுணத்துவம் பெற்ற சகலரையும் நம் பக்கம் கவர்ந்திழுக்க வேண்டியது அவசியம். பூர்ஷ்வா நிபுணர்களின்றி, உற்பத்திச் சக்திகளை அதிகப்படுத்துவது இயலாத காரியம். அந்த நிபுணர்கள் சிநேக பூர்வமான ஒத்துழைப்பு நிலவுகின்ற சூழ்நிலையில், தொழிலாளிகளின் பிரதிநிதிகளும் கம்யூனிஸ்டுகளும் நிறைந்த சூழ்நிலையில், அமர்ந்து பணியாற்றும்படியான நிலையை உண்டுபண்ண வேண்டும். மேலும், அவர்கள் நம்முடைய தொடர்பைக் கத்திரித்துக் கொண்டு ஓடிவிடாமல் இருக்கும் படியான நிலையையும் சிருஷ்டிக்க வேண்டும். முதலாளித்துவத்தின் கீழ் வேலைசெய்வதைவிட நல்ல நிலையில் வேலை செய்யத்தக்க வசதியை அவர்களுக்கு அளிக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் பூர்ஷ்வாக்களிடமிருந்து கல்வி

---

* இஸ்வெஸ்தியா-சோவியத் அரசாங்கத்தின் பத்திரிகை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஞானம்பெற்ற இந்தக்கூட்டம் பணியாற்றத் தொடங்காது ஆனால் நிபுணர்கள் எல்லோரையும் ஒருமிக்க ஒரு துறையில் ஈடுபடுத்துவதும் இயலாத காரியம். பூர்ஷ்வா நிபுணர்கள் கலாசாரப்பணியில் அனுபவம் உடையவர்கள். பூர்ஷ்வா ஆட்சியின் எல்லைக் கோட்டுக்குள் அவர்கள் அந்தப் பணியை நடத்தி வந்திருக்கிறார்கள். அதாவது ஏராளமான நிர்மாண வேலைகள் மூலம் பூர்ஷ்வாக்களுக்குச் செல்வத்தைத் தேடித்தந்து, அந்த செல்வத்தில் மிகமிகக் குறைந்த அற்பப் பங்கை உழைப்பாளிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கலாச்சாரப்பணியை மேன்மேலும் தொடர்ந்து நடத்தி வந்தவர்கள். அது அவர்கள் தொழில். தொழிலாளிகள் கலாச்சாரத்துக்கு மதிப்புக் கொடுப்பதுடன், அதைப் பொதுமக்களிடம் பரப்புவதிலும் உதவி புரிகிறார்கள் என்பதை அவர்கள் உணரும் போது, தற்போது நம்மைப்பற்றி அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளுவார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் உள்ள அரசியல் தொடர்பு பிளவுபட்டு விடுகிறது. அத்துடன் நாம் ஆத்மார்த்த ரீதியில் அவர்களை வென்று நம் பக்கத்துக்குத் திருப்பிவிடுகிறோம். அவர்களை நம் பக்கத்தில் கவர்ந்திழுக்க வேண்டும். அதற்காக நாம் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். நிபுணர்களின் விவகாரத்தைப் பரிசீலனை செய்யும்போது சில்லறைத் தனமான எரிச்சல் உணர்ச்சிக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. வாழ்க்கையின் உயர்ந்த வசதிகளை அவர்களுக்கு நாம் அளிக்க வேண்டும். அதுதான் சிறந்த முறை. நேற்று, குட்டிப் பூர்ஷ்வாக் கட்சிகளைச் சட்டபூர்வமாக்குவது பற்றிப் பேசினோம்; இன்று மென்ஷ்விக்குகளையும் இடதுசாரிச் சமதர்மப் புரட்சிக்காரர்களையும் கைது செய்கிறோம். ஆனால் இந்தக் கொள்கை மாற்றத்தினூடேயும் ஒரு நேர்க்கோடு செல்லுகிறது. அதாவது, புரட்சிக்கு எதிர்ப்பான கிளர்ச்சியை வேரோடு பிடுங்கி எறிகிறோம்; பூர்ஷ்வாக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களின் கலாசார சாதனத்தை நமதாக்கிக் கொள்ளுகிறோம்.''

''மனிதாபிமான'' என்று குட்டிப் பூர்ஷ்வாக்கள் நயவஞ்சகமாகப் பேசி ஓலமிடுகிறார்கள். ஆனால் அவர்கள் ஓலமிடுவதில் உள்ளதைவிட எவ்வளவோ அதிகமாக, மேற்கண்ட மகத்தான கொள்கையில் உண்மையான உயிருள்ள சாரம் நிறைந்து விளங்குகிறது. தொழிலாளி வர்க்கத்துடன் ஒத்துழைத்து நேர்மையான பணியாற்றுவதற்காக விடுக்கப்படும் இந்த வேண்டுகோளைப் புரிந்து கொள்ளாமலும், பாராட்டாமலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இருட்கிடங்குகளும் இருட்டு மூலைகளும், நாச வேலையும் நம்பிக்கைத் துரோகமும்தான் பிடித்துப் போயிருக்கின்றன. பண்ணை-அடிமைத்தனம் ஒழிக்கப் பட்ட பின்பு, அநேக அடிமைகள், இயற்கையிலேயே அடிமைப்புத்தி படைத்தவர்கள், தாங்கள் எந்தக் குதிரை லாயங்களில் தங்கள் எஜமானர்களிடம் வழக்கமாகச் சவுக்கடி வாங்கி வந்தார்களோ அந்தக் குதிரை லாயங்களிலேயே அந்த எஜமானர்களுக்குத் தொடர்ந்து ஊழியம் செய்து வந்தார்கள்.

## புரட்சியில் கையாளும் முறைகள்

புரட்சியில் கையாளும் முறைகளிலும், புரட்சி வாழ்க்கையிலும் உள்ள கொடுமையைப் பற்றி நான் அடிக்கடி லெனினுடன் பேசுவது வழக்கம். ஆச்சரியத்துடனும் கோபத்துடனும் அவர் கேட்பார்: ''நீங்கள் விரும்புவது என்ன? முன்பின் கண்டறியாத, மூர்க்கத்தனம் நிறைந்த, இது போன்ற ஒரு போராட்டத்தில் இரக்கம் காட்டுவது சாத்தியமா? மிருதுவான உள்ளத்துடனும், உதாரண குணத்துடனும் நடந்து கொள்ள இங்கே இடம் இருக்கிறதா? ஐரோப்பியப் பாட்டாளிகளின் உதவி நமக்குக் கிடைக்க விடாமல் செய்யப் பட்டிருக்கிறது. புரட்சியை எதிர்க்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர்ப் புரட்சி நாலா பக்கங்களிலிருந்தும் நம் மீது கரடியைப் போலப் பாய்கிறது. இப்படியிருக்கும்போது நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? நாம் சரியற்ற முறையில் நடந்து கொள்ளுகிறோமா? நாம் எதிர்த்துப் போராட வேண்டாமா? நாம் முட்டாள் கூட்டமல்ல. நாம் விரும்புவதை நம் முயற்சியினால்தான் அடையமுடியும் என்று நமக்குத் தெரியும். என் அபிப்பிராயம் வேறு விதமாக இருக்குமென்றால் நான் இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பேன் என்றா நினைக்கிறீர்கள்?''

ஒருசமயம், காரசாரமான ஒரு விவாதத்துக்குப் பிறகு, ''எந்த விதமாக அடி கொடுக்க வேண்டும், போராட்டத்தின் போது எந்தக் காரியம் அதீதமானது என்பவற்றையெல்லாம் நீங்கள் எந்த அடிப்படையை வைத்து நிர்ணயிக்கிறீகள்?'' என்று கேட்டார். இந்த வெளிப்படையான கேள்விக்கு என்னால் தெளிவற்ற, கவிப்பாங்குள்ள பதில்தான் கொடுக்க முடியும். இதற்கு வேறு விதமாகப் பதில் சொல்ல முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது.

நான் அடிக்கடி பற்பல விஷயங்களுக்காக அவரிடம் வேண்டுகோள் விடுத்து அவரைத் திக்கு முக்காடச் செய்து விடுவேன். பல திறப்பட்ட ஆட்களின் பொருட்டு நான் என்னைத் தொல்லைப் படுத்திக் கொள்களுவதைக் கண்டு லெனின் வருத்தப்படுவார். ''உதவாக்கரைகளுக்காக நீங்கள் உங்கள் சக்தியையெல்லாம் விரயம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இது உங்களுக்கே தெரியவில்லையா?'' என்று என்னைப் பார்த்துக் கேட்பார். ஆனாலும் செய்தாக வேண்டுமென்று நான் நினைத்த காரியங்களைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருந்தேன், நிறுத்தவில்லை. உழைப்பாளிகளின் விரோதிகள் யார் என்பதை அறிந்த அந்த மனிதர் அப்பொழுது கோபத்துடன் என்னைக் கடைக்கண்ணால் பார்ப்பார். தலையைக் கடுமையாகக் குலுக்கிக் கொண்டு, ''தோழர்கள், தொழிலாளிகள்

www.tamilarangam.net



ஆகியோர்களின் முன்னிலையில் நீங்கள் பேரம் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்'' என்று சொல்லுவார். தோழர்களும், தொழிலாளிகளும் தங்களுக்கு உணர்ச்சிக் கொந்தளிப்பும் எரிச்சலும் ஏற்படும்போது, மதிப்பு வாய்ந்த மனிதர்களின் வாழ்க்கையையும் சுதந்திரத்தையும் மிக அலட்சியமாகக் கருதி விடுகிறார்கள் என்றும், இவ்வாறு அடிக்கடி நடக்கிறது என்றும் நான் சுட்டிக்காட்டினேன். அத்துடன், இவ்வாறு அலட்சியமாகக் கருதுவதன் மூலம் புரட்சியின் கடினமான உழைப்பையும், மாபெரும் கொடுமையும்-சில சமயங்களில் மூடத்தனமான கொடுமையையும் கூட-ஒன்றாகக் கருதி விடுகிறார்கள் என்றும், அலட்சிய புத்தி லட்சிய பூர்வமாகவும் தந்திர பூர்வமாகவும் மிகவும் கெட்டது என்றும், ஏனென்றால் அது புரட்சியில் பங்கெடுத்துக்கொள்ள இயலாதவாறு அநேக முக்கியமான மனிதர்களையெல்லாம் வெளியே தள்ளிவிட்டது என்றும் நான் கருதுவதாகச் சொன்னேன். அப்பொழுது லெனின் 'ஹூம், ஹூம்' என்று சொல்லிவிட்டு, படித்த கூட்டம் தொழிலாளர் நலன்களுக்குத் துரோகம் செய்த பல சந்தர்ப்பங்களை எனக்குச் சுட்டிக் காட்டினார்; அவர் சொன்னார்: ''நம்மில் பலர் எதிர்க் கட்சிக்குப் போய் நம்மைக் காட்டிக் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் இவ்வாறு செய்வதற்குக் காரணம் கோழைத்தனம் மட்டுமல்ல; அவர்களுக்குத் தன் மதிப்பு மிகவும் அதிகம்; எக்கச் சக்கமான சந்தர்ப்பத்தில் மாட்டிக்கொள்ள அவர்களுக்குப் பயம்; மேலும் தக்கதொரு எதார்த்தநிலை வந்து சேர்ந்ததும் தங்கள் அருமை பெருமையுள்ள சித்தாந்தத்துக்கு ஆபத்து வந்துவிடுமே 'என்ற அச்சம். இவைதான் அவர்கள் காட்டிக் கொடுப்பதற்குக் காரணங்கள். ஆனால் நாம் அதற்குப் பயந்து கொண்டிருக்கவில்லை. சித்தாந்தங்களிலோ, கற்பனைக் கணக்கீடுகளிலோ, தெய்வீகத் தன்மை எதுவும் இல்லை. அவை நமக்குக் கருவிகளாகத்தான் பயன்படுகின்றன.''

www.tamilarangam.net



ஆனால், என்னுடைய எந்த ஒரு வேண்டுகோளையும் அவர் புறக்கணித்து விட்டதாக எனக்கு ஞாபகமில்லை. என் வேண்டுகோள் சில சமயங்களில் நிலைவேறாமல் போயிருந் தால், அதற்கு அவருடைய தவறு காரணமாக இருந்திராது. தாறுமாறான நிலையிலிருந்த ருஷ்ய அரசாங்க யந்திரத்தின் தவறுதான் காரணமாக இருந்திருக்கும். கெட்ட எண்ணம் படைத்த அந்த அரசாங்கத்துக்கு மதிப்பு வாய்ந்த மனிதர் களின் கஷ்டத்தைக் குறைக்கவோ, அவர்களின் உயிர் களைக் காப்பாற்றவோ இஷ்டம் இல்லை. வேண்டுமென்றே தீங்கிழைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. எதிரியின் தீங்கில் கிறுக்குத்தனமான வெறியும், நயவஞ்சகமும் நிறைந் திருந்தன. தினமும் ஒன்று போலப் பழிக்குப்பழி வாங்கு வதற்கும், கெட்ட சிந்தையுடன் நடந்து கொள்ளுவதற்குக் அடிக்கடி பலன் கிட்டி விடுகின்றன. அத்துடன் சில கெட்ட எண்ணம் படைத்த அற்ப மனிதர்கள் வேறு இருக்கிறார்கள். அவர்களுக்கு அண்டை அயலாரின் துன்பங்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதில் ஒரு ஆனந்தம். அந்த ''ஆனந்த'' மான அனுபவத்தின் மீது அவர்களுக்கு ஒரே ஆசை.

ஒரு தடவை அவர் புன்னகை செய்து கொண்டே என்னிடம் ஒரு தந்தியைக் காட்டினார். ''பழைய படியும் என்னைக் கைது செய்திருக்கிறார்கள். நான் போகிறேன் என்பதை அவர்களிடம் தெரிவியுங்கள்'' என்று தந்தியில் கண்டிருந்தது. அதில் ஐவான் வால்னி கையெழுத்திட் டிருந்தார். ''நான் அவருடைய புத்தகத்தை வாசித்திருக் கிறேன். அது எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. முதல் ஐந்து வார்த்தைகளை வாசித்ததும், தவறுகளின் தவிர்க்க முடியாத தன்மையை உணர்ந்து கொண்டவரும், அல்லது தமக்குத் துன்பம் நேர்ந்தால் கோபவெறி கொள்ளாதவரும் ஆன மனிதர் இதோ இருக்கிறார் என்று அறிந்து கொண் டேன், அவர் இப்பொழுது மூன்றாவது தடவையாகக் கைது செய்யப்படுகிறார் என்று நினைக்கிறேன். நீங்கள் அவரை உடனே அந்தக் கிராமத்தை விட்டுப் போய் விடும்படி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொல்லுவது நல்லது. இல்லை என்றால் அடுத்த தடவை அவரைக் கொன்று விடுவார்கள். உண்மையில் அங்கே அவர்கள் அவரிடத்தில் அன்பாக இல்லை. கிராமத்தை விட்டுப் போய் விடும்படி தந்தி மூலம் அவருக்குத் தெரி வியுங்கள்'' என்றார் லெனின்.

தம் விரோதிகள் என்று கருதுகிறவர்களுக்குக்கூட லெனின் உதவி புரியச் சித்தமாக இருப்பார். உதவி புரி வதுடன் மட்டுமன்றி, அவர்களுடைய எதிர்காலத்திலும் அக்கறை எடுத்துக் கொள்ளுவார். இந்த உதவி புரியும் குணத்தைப் பார்த்து நான் அடிக்கடி பிரமித்துப் போயிருக் கிறேன். உதாரணமாக, (ராணுவ) ஜெனரலாக இருந்த ஒரு பௌதிக சாஸ்திரிக்கு மரண தண்டனை விதிக்கக் கூடிய சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டது. அது பற்றிய விருத் தாந்தத்தை நான் சொன்னேன். அதை மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, ''ஹூம் ஹூம்'' என்றார். ''அப்படியானால் தம்முடைய புதல்வர்கள் தம் ஆராய்ச்சிக் கூடத்தில் ஆயுத வெடிகளை மறைத்து வைத்தது அவருக்குத் தெரியாதென்று நீங்கள் கருதுகிறீர்களா? அது உண்மையாக இருக்கும் எனத் தோன்றவில்லை. ஆனால், இந்த விஷயத்தில் உண்மையைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை நாம் ட்ஸெர்ஷின்ஸ்கிக்கு விட்டு விடுவோம். உண்மையைக் கண்டறியும் கூரிய சுபாவம் அவரிடத்தில் அமைந்திருக்கிறது'' என்றார் லெனின். பல நட்களுக்குப் பிறகு பெட்ரோகிரேடில் போன் மூலமாக லெனின் சொன் னார்: ''உங்கள் பௌதிக சாஸ்திரியை நாங்கள் விடுவித்து விட்டோம். இதற்குள் அவர் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அடுத்தபடியாக அவர் செய்யப் போகும் வேலை என்ன?''

''ஹோமோமெல்ஷன் தயாரிக்கப் போகிறார்.''

''சரி சரி-கார்பாலிக் ஆஸிட். நல்லது, அவர் கார்பாலிக் ஆஸிட்டைக் காய்ச்சட்டும். அவருக்கு ஏதாவது தேவை என்றால் எனக்குத் தெரிவியுங்கள்.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லெனின் விளையாட்டாகப் பேசினார். ஒரு மனிதனு டைய உயிரைக் காப்பாற்றி விட்டோம் என்ற சந்தோ ஷத்தை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாமல், அதை மறைப்பதற்காகவே அவர் அவ்வாறு பேசினார். பல நாட் களுக்குப் பின் அவர் பழையபடியும் என்னிடம், ''பௌதிக சாஸ்திரியின் காரியங்கள் எப்படி நடந்து வருகின்றன? எல்லாம் சரிவர ஏற்பாடு செய்யப்பட்டாயிற்றல்லவா?'' என்று விசாரித்தார்.

1917-ல் பீட்டர்ஸ் பர்க்கில், சமையல்புரைக்கு, மிகவும் அழகான ஒரு பெண் வந்து சேர்ந்தாள். வந்து மிகவும் கடுமையாக, ''என் நாய்களுக்கு ஒரு எலும்பு கொடுங்கள், நான் ராஜகுமாரி'' என்றாள். அவளைப் பற்றி ஒரு கதை வழங்கியது. அதாவது தன் தாழ்வுற்ற நிலையையும் பசி யையும் தாங்கமாட்டாமல் அவள் தற்கொலை செய்து கொள்ளப் போனாளாம். அப்போது அவளுடைய தற்கொலை எண்ணத்தை நாய்கள் எப்படியோ முன் கூட்டியே கண்டுபிடித்து விட்டனவாம். உடனே அவளைப் பின் தொடர்ந்து ஓடி, ஒன்று கூடிக் கொண்டு ஊளையிட்டுக் கத்தி, அவள் தற்கொலை எண்ணத்தைக் கைவிடுமாறு செய்து விட்டனவாம். இந்தக் கதையை நான் லெனினிடம் சொன்னேன். அவர் என்னைக் கடைக்கண்களால் மேலும் கீழும் பார்த்தார். கண்களை உருட்டி விழித்தார். அப்புறம் கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்தகுரலில், ''இது முற்றிலும் கட்டுக் கதையானாலும், கதையின் மூலக் கருத்து மோசமாக இல்லை. இது புரட்சியின் ஹாஸ்யத்துணுக்கு'' என்றார், அப்புறம் மௌனமாக இருந்தார். பிறகு எழுந்து நின்று, மேஜைமீது இருந்த காகிதங்களை இனம் பிரித்துக் கொண்டே சிந்தனை தேங்கிய குரலில், ''ஆம், அவர்கள் மிகமிகச் சிரம தசையில் தான் இருக்கிறார்கள். சரித்திரம், ஒரு கொடுமையான மாற்றாந்தாய். அது பழிக்குப் பழி வாங்கும்போது எதைக் கொண்டும் தன் காரியத்தை நிறுத்து வதில்லை. (இதைப்பற்றி) நாம் என்ன சொல்ல இருக்கிறது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த ஜனங்களுக்கு இது கஷ்ட காலம். அவர்களில் புத்தி சாலிகளாக உள்ளவர்கள் தாங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டிருப்பதையும், தங்களால் திரும்பவும் முளை விட்டு வளர முடியாது என்பதையும் உணருகிறார்கள். ஐரோப்பிய மண்ணில் கொண்டுபோய் ஊன்றினாலும் அவர்கள் திருப்தியடைய மாட்டார்கள். அங்குபோய் அவர்களால் வேர் ஊன்ற முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?'' என்று கேட்டார். ''எனக்கு அப்படித் தோன்றவில்லை'' என்றேன். ''அப்படியானால், அவர்கள் நம் வழியில் நடப்பார்கள்; நம் வழியில் நடக்காத பட்சத்தில் அவர்கள் மற்றொரு முறை வந்து குறுக்கிட முயற்சி செய்வார்கள் என்று அர்த்தம். அப்படித்தானே?'' என்றார். நான் அவரைப் பார்த்து, ''நீங்கள் உண்மையிலேயே அவர்களுக்கு இரக்கம் காட்டுகிறீர்களா? அல்லது எனக்கு அப்படித் தோன்றுகிறதா?'' என்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில்: ''புத்திசாலிகளுக்காக நான் வருந்துகிறேன். நம்மிடம் போதிய அளவு புத்திக் கூர்மை மிக்கவர்கள் இல்லை. நாம் பெரும்பாலும் அறிவாற்றல் படைத்தவர்களாகவும் ஆனால், உள்ளத்தில் சோம்பல் பிடித்த பேர்வழிகளாகவும் இருக்கிறோம்.'' அப்புறம், தங்கள் வர்க்கத்தின் மனோநிலையைத் தாண்டி வளர்ந்து, போல்ஷ்விக்குகளுடன் சேர்ந்து வேலை செய்து கொண்டிருக்கும் அநேக தோழர்களை ஞாபகத்துக்குக் கொண்டுவந்து, அவர்களைப் பற்றிப் பிரமாதமாகச் சிலாகித்துப் பேசினார்.

## லெனினுடைய இயல்புகள்

லெனின் பிரமிக்கத்தக்க மனோதிடம் படைத்தவர். புரட்சிவாதியான ஒரு அறிவாளியிடம் காணப்படும் உன்னதமான பண்புகளெல்லாம் படைத்த சீரிய மனிதர். அவருடைய ஒழுங்கு முறையுள்ள வாழ்க்கை, பல சமயங்களில் அவரை சித்திரவதை செய்வதாகக் கூட இருக்கும். அந்த ழுங்கு முறையின் உச்சநிலையில் அவர் கலையைக்கூட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உதறியெறிந்துவிடுவார். ''மற்றவர்கள் கஷ்டமான வாழ்க்கை நடத்துகிறார்கள்; அதனால் நானும் கஷ்டமான வாழ்க்கை நடத்த வேண்டும்'' என்றும் எல். ஆண்ட்ரியேவ் என்ற வீரர் கூறியபடி, லெனின் நடந்து கொள்ளுவார். 1919-ல் கடுமையான பஞ்சம். அந்தச் சமயத்தில், வெளியூர் களிலிருந்து தோழர்கள், சிப்பாய்கள், குடியானவர்கள் ஆகியோர் அவருக்கு அனுப்பிவைத்த உணவு வகைகளைச் சாப்பிட அவர் நாணினார். உணவுப் பார்ஸல்கள் அவரு டைய இருப்பிடத்திற்கு வந்து சேரும்போது அவர் புருவங் களை நெரிப்பார்; உள்ளூரச் சங்கடப்படுவார்; வந்து சேர்ந்த மாவு, சர்க்கரை, வெண்ணெ ஆகியவற்றை நோயாளிகளாக உள்ள தோழர்களுக்கும், போதிய சாப்பாடு இல்லாமல் பலவீனமாக இருக்கும் தோழர்களுக்கும் அதி வேகமாகக் கொண்டுபோய்க் கொடுப்பார். ஒரு முறை என்னைத் தம்மோடு சாப்பிட அழைத்தார். ''உங்களுக்கு ஆவியில் வதக்கிய மீன் கொடுக்கிறேன். அதை ஆஸ்ட்ர கானிலிருந்து ஸாக்ரட்டீஸின் நெற்றி போன்ற தம் நெற்றியில் சுருக்கம் விழும்படியாகப் புருவத்தை நெரித்தார்; வேறு பக்கமாகத் திரும்பினார். ''என்னை ஒரு பிரபு என்று நினைத்துக் கொண்டு அவர்கள் என்னென்னவோ அனுப்பு கிறார்கள்! இதை நான் எப்படித் தடுப்பேன்? அவர்கள் அனுப்புவதை நான் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர் களுடைய மனம் புண்படும். ஆனால் என்னைச் சுற்றியிருப் பவர்களோ பசியால் பீடிக்கப் பட்டிருக்கிறார்கள்'' என்று கூறினார் லெனின்.

அவருக்கென்று தனிப்பட்ட கொள்கைப் பிடிப்புக்கள் எவையும் கிடையாது. புகையிலையையும் ஒயினையும் அவர் அறியமாட்டார். காலை முதல் மாலை வரை சிக்கல் நிறைந்த சிரமமான வேலையில் ஈடுபட்டிருப்பார். சொந்தச் சௌகரியங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பே கிடையாது. ஆனால் தோழர்களின் சுகவாழ்வில் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்பார். தம்முடைய படிப்பறையில் உட்கார்ந்து ஏக காலத்தில், வேகமாகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேசிக் கொண்டும், வைத்த பேனாவை எடுக்காமல் எழுதிக் கொண்டும் இருப்பார். "நமஸ்காரம். சௌக்கியமா? அநேகமாக எழுதியாகிவிட்டது. கிராமத்தில் உள்ள தோழர் ஒருவர், பக்கத்தில் எவரும் இல்லாமல் தனிமையில் கிடந்து கஷ்டப்படுகிறார்; அலுத்துப் போயிருக்கிறார். அவருக்கு உற்சாகம் ஊட்ட வேண்டும். மனநிலை நன்றாக இருப்பது கடைசிப் பட்சமான விஷயமல்ல!" இவ்வாறு பேசிக் கொண்டே எழுதுவார்.

மாஸ்கோவில் ஒரு தடவை நான் அவரைப் பார்க்கப் போயிருந்தேன். "சாப்பிட்டாச்சா?" என்று கேட்டார். "ஆம்" என்றேன். "உண்மைதானா?" என்று கேட்டார். "அதற்குச் சாட்சிகளும் இருக்கிறார்கள். கிரெம்லின் சாப்பாட்டு அறையில் சாப்பிட்டேன்" என்றேன்.

"அங்கே சாப்பாடு சுகமில்லை என்று கேள்விப்பட்டேன்."

"இல்லையே, நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இதைவிட நான்றாகவும் செய்து கொள்ளலாம்."

உடனே விபரமாக விசாரிக்க ஆரம்பித்து விட்டார்.

"ஏன் நன்றாக இல்லை? அதை எந்த வழியில் நன்றாகச் செய்து கொள்ளலாம்?"

இவ்வாறு கேட்டுவிட்டுக் கோபமாக முனகத் தொடங்கினார்: "ஏன், ஒரு நல்ல சமையற்காரனை அவர்கள் அமர்த்திக் கொள்ளக்கூடாது? களைத்துச் சோருகிறவரையில் வேலை செய்கிறவர்களுக்கு நல்ல சாப்பாடு போட வேண்டும். அப்படியானால்தான் அவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சாப்பிடுவார்கள். அங்கே சாப்பாடு மிகமிகச் சுருக்கமாகவே செலவாகிறது என்று எனக்குத் தெரியும். சாப்பாடு மோசமாக இருக்கிறது. அவர்கள் அவசியம் நல்ல சமையற்காரன் ஒருவனை அங்கே அமர்த்த வேண்டும்." இவ்வாறு கூறிவிட்டு, உணவு சுவையாயுள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாக இருந்தால் சாப்பிடும்போதும் ஜீரணமாகும்போதும் என்னென்ன பலாபலன்கள் ஏற்படும் என்பது குறித்து யாரோ ஒரு சுகாதார நிபுணர் கூறியிருக்கும் அபிப்பிரா யத்தை எடுத்துச் சொன்னார். நான் அவரைப் பார்த்து, ''இப்படிப்பட்ட விஷயங்களைக் குறித்துச் சிந்தனை செய்ய உங்களுக்கு நேரம் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டேன். அதற்குப் பதில் சொல்லும் முறையில், ''உடம்புக்கு ஏற்ற உணவை உட்கொள்ளுவதைப் பற்றியா?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார். அவருடைய குரலைக் கொண்டு, நான் கேட்ட கேள்வி பொருத்தமில்லாத கேள்வி என்பதை அறிந்து கொண்டேன்.

பி. ஏ. ஸ்காரகாதேவ் எனக்கு வெகு காலமாகத் தெரிந் தவர். அவர் ஸார்மோவோ ஊழியர். மென்மையான உள்ளம் படைத்தவர். ட்செகா* வேலை கடுமையாக இருக்கிறது என்று அவர் என்னிடம் தம் குறையைத் தெரிவித்துக் கொண்டார். நான் அவரைப் பார்த்து, ''அது உங்களுக்குப் பொருத்தமான வேலையில்லை என நினைக்கிறேன். அது உங்கள் இயல்புக்கு ஒவ்வாத வேலை'' என்றேன். அவர் நான் சொன்னதை ஒப்புக்கொண்டு, ''முற்றிலும் ஒவ்வாத வேலை'' என்று வருத்தத்துடன் கூறினார். பிறகு சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு, ''ஆனால் லெனின் கூட நம் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டுதான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நானும் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த வேலையைச் செய்ய முடியாமல் நான் பலவீனமாக இருக்கிறேன். இதற்காக வெட்கப்படுகிறேன்'' என்றார்.

தாங்கள் மேற்கொண்ட லட்சியத்தின் வெற்றிக்காக, தங்கள் சொந்த ''சமதர்ம லட்சியவாத''த்தைக் கட்டுப்

---

* ட்செகா-எதிர்ப்புரட்சியையும், நாச வேலையையும் எதிர்த்துப் போராட நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனின் சுருக்கப் பெயர். எதிர்ப் புரட்சியின் தோல்விக்குப்பின் அதற்கு அரசாங்க அரசியல் நிர்வாகம் எனப் பெயரிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்தி, பல்லைக் கடித்துக் கொண்டு வேலை செய்ய நேர்ந்த பல ஊழியர்களை முன்பும் பார்த்திருக்கிறேன்; இப்பொழுதும் பார்க்கிறேன். ஆனால் அவர்களைப் போல லெனினும் தம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் படி நேர்ந்ததா? அவர் சொந்த விஷயத்தில் கவனம் செலுத்துவது கிடையாது. அதனால் அவர் தம்மைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவதற்கு விஷயமே இல்லை. அவர் தம் அந்தரங்கமான போராட்டத்தை வெளியே தெரிவிப்பது கிடையாது. ஆனாலும், ஒரு முறை கார்க்கியில் இருக்கும் போது சில குழந்தைகளை அவர் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில், நம்முடைய வாழ்க்கையைவிட இவர்களுடைய வாழ்க்கை சந்தோஷம் நிறைந்ததாக இருக்கும். நாம் அனுபவித்தவற்றில் பெரும்பாலானவற்றை இவர்கள் அனுபவிக்க நேராது. இவர்களுடைய வாழ்க்கையில் இவ்வளவு அதிகமாகக் கொடுமை இராது'' என்றார். அப்புறம் தூரத்தே, கிராமத்தை ஒட்டியிருக்கும் குன்றுகளைப் பார்த்துக் கொண்டே துக்கமும், சிந்தனையும் கலந்த குரலில் சொன்னார்: ''ஆனாலும் நான் இவர்களைப் பார்த்துப் பொறாமைப்படவில்லை. நம் தலைமுறை பிரமிக்கத்தக்க, சரித்திர முக்கியத்துவமுள்ள, காரியத்தைச் சாதித்திருக்கிறது. கொடுமையை, நம் வாழ்க்கை நிலையானது அவசியமாக ஆக்கிவிட்ட கொடுமையை, பின்னால் வருகிறவர்கள் புரிந்து கொள்வார்கள்; அது நியாயமான கொடுமை என்பதை ஒப்புக் கொள்ளுவார்கள். ஒவ்வொன்றையுமே புரிந்து கொள்ளுவார்கள்; ஒவ்வொன்றையும்.'' இவ்வாறு கூறிவிட்டு, குழந்தைகளை அதிகக் கவனமாகவும், மிகமிக மிருதுவாகவும் தடவிக்கொடுத்தார்.

ஒருமுறை நான் அவரைப் பார்க்கப் போயிருந்த போது, அங்கே மேஜைமீது ''போரும் சமாதானமும்'' என்ற புத்தகம் கிடந்ததைப் பார்த்தேன். அவர் சொன்னார்: ''ஆம், டால்ஸ்டாய் (எழுதிய புத்தகம்) அதில் வேட்டையைப்பற்றிக் கூறும் பகுதியை வாசிக்க விரும்பி எடுத்தேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால், ஒரு தோழருக்குக் கடிதம் எழுதவேண்டிய விஷயம் ஞாபகத்துக்கு வந்து விட்டது. வாசிப்பதற்குக் கொஞ்சங் கூட நேரமில்லை. நீங்கள் டால்ஸ்டாயைப்பற்றி எழுதியிருக்கும் புத்தகத்தை நேற்றிரவுதான் சந்தர்ப்பத்லைச் சமாளித்துக் கொண்டு வாசித்தேன்.'' புன்னகை செய்து கொண்டும், கண்களை உருட்டி விழித்துக்கொண்டும் தம் நாற்காலியில் மெதுவாகச் சாய்ந்தார். தம் குரலைத் தாழ்த்திக்கொண்டு வேகமாகச் சொன்னார்: ''எப்பேர்பட்ட பிரமாண்டமான மனிதர்! ஆஹா! எப்பேர்பட்ட அற்புதமான மூளை! ஐயா! இதோ! உங்களுக்கு ஒரு கலைஞர் கிடைத்திருக்கிறார். இதைவிட ஆச்சரியகரமான ஒரு விஷயம் உங்களுக்குத் தெரியுமா? இந்தப் பிரபு (டால்ஸ்டாய்) தோன்றுகிறவரையில் இலக்கியத்தில் ஒரு உண்மைக் குடியானவனைப் பார்க்க முடியாமல் போய்விட்டதென்று உங்களுக்குத் தெரியுமா? அப்புறம் கண்களை உருட்டி விழித்து என்னைப் பார்த்தார். ஐரோப்பாவில் உள்ள யாரையும் இவருக்கு அருகில் நிறுத்த முடியுமா?'' என்று கேட்டார். அதற்கு அவரே பதில் சொல்லிக் கொண்டார். ''எவரையும் நிறுத்த முடியாது.'' பிறகு கைகளைத் தேய்த்துக்கொண்டு மனோதிருப்தியடைந்தவர் போலச் சிரித்தார்.

பல தடவைகள் அவரிடம் இந்தக் குணத்தை-அதாவது ருஷ்ய இலக்கியத்தை எண்ணிப் பெருமைப் படுவதை-நான் பார்த்திருக்கிறேன். இந்தக் குணம் லெனினுடைய இயற்கைக்கு மாறுபட்டதாக, சாதாரண ரகத்தைச் சேர்ந்ததாகக் கூடத் தோன்றியது. ஆனால், அதில் அவருடைய ஆழ்ந்த தாய்நாட்டுப் பற்று எதிரொலிப்பதைக் கண்டு கொண்டேன். காப்ரியில் இருக்கும்போது, சுறாமீன்களால் கிழித்து சிக்கலாக்கப்பட்ட வலைகளைச் செம்படவர்கள் ஜாக்கிரதையாகச் சிக்கெடுத்து விடுவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, ''நம் நாட்டுக்காரர்கள் இதைவிட வேகமாக வேலை செய்கிறார்கள்'' என்று கூறினார். லெனின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறியது சந்தேகாஸ்பதமானதாகத் தோன்றியது. அதை அவருக்குத் தெரிவித்தேன். உடனே மனக் கஷ்டத்துடன் அவர் சொன்னார், ''ஹூம் ஹூம். இங்கு வந்து வசிப்பதனால் நீங்கள் ருஷ்யாவை மறந்து கொண்டிருக்கிறீர்கள். இல்லையா?''

என்னிடம் வி. ஏ. டைஸ்னிட்ஸ்கி-ஸ்ட்ரோயோவ் ஒரு விஷயம் சொன்னார். அதாவது அவர் லெனினுடன் ஸ்விடனில் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். டைஸ்னிட்ஸ்கி, அப்பொழுது ட்யூரரைப்* பற்றிய ஒரு ஜெர்மன் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அதே வண்டியில் இருந்த சில ஜெர்மானியர்கள் அது என்ன புத்தகம் என்று கேட்டார்கள். சிறிது நேரம் சென்ற பிறகு, அந்த ஜெர்மானியர்கள் தங்கள் நாட்டின் மாபெரும் கலைஞரைப்பற்றி (ட்யூரரைப்பற்றி) கேள்விப்பட்டது கூட இல்லை என்று தெரிந்தது. இதைக் கண்டதும் லெனினுக்கு உற்சாகம் கிளம்பிவிட்டது. உடனே டைஸ்னிட்ஸ்கியைப் பார்த்து, ''அவர்களுக்கு அவர்கள் நாட்டுக் கலைஞர்களைப் பற்றித் தெரியவில்லை. ஆனால் நமக்குத் தெரிந்திருக்கிறது'' என்று இரண்டு தடவைகள் பெருமையோடு சொன்னார்.

மாஸ்கோவில் ஒருநாள் மாலை, ஈ. பி. பைஷ்கோவ்ஸ்காஜாவின் ஜாகையில் பீதோவனின்** சாஹித்யம் ஒன்றைக் கேட்டு அனுபவித்துக் கொண்டிருந்தார் லெனின். இஸையா டோப்ரோவீன் அதை வாத்தியத்தில் வாசித்தார். அப்பொழுது லெனின் சொன்னார்: ''அப்பாஸியோனாட்டாவைவிட உயர்ந்த ஒன்றை நான் கேட்டதே கிடையாது. தினம் தினமும் அதைக் கேட்டனுபவிக்க விரும்புகிறேன். அது அற்புதமான அதிமானுஷ்ய சங்கீதம். 'மனித ஜீவன்

---

* (ட்யூரர் [1471-1528]: ஜெர்மன் தேசத்தில்

** (பீதோவன் [1770-1827]: ஜெர்மன் தேசத்தின் சங்கீத சாஹித்ய கர்த்தா. உலகப் புகழ்பெற்றவர்.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களால் எப்பேர்ப்பட்ட அற்புதங்களையெல்லாம் சாதிக்க முடிகிறது!' என்று எப்போதும் பெருமையோடு நான் நினைத்துக் கொள்ளுகிறேன். ஒரு வேளை இது என் அப்பாவித்தனமாகக் கூட இருக்கலாம்.'' பிறகு கண்களை உருட்டி விழித்துக்கொண்டு, புன்னகையோடும் சற்று மனத் துயரத்தோடும் சொன்னார்: ''ஆனால் அடிக்கடி சங்கீதத்தைக் கேட்க என்னால் இயலாது. அது நரம்பு களைப் பாதிக்கிறது, பைத்தியக்காரத் தனமான விஷயங் களை, சொகுசான விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்ற விருப்பத்தை நமக்கு உண்டாக்குகிறது. இந்த மோசமான நரகத்தில் வாழ்ந்துகொண்டே இப்படிப்பட்ட அழகைச் சிருஷ்டிப்பவர்களின் தலையைத் தடவிக் கொடுக்கும்படியாக அது நம்மைத் தூண்டுகிறது. ஆனால், நாம் யாருடைய தலையையும் தடவிக் கொடுக்கக் கூடாது. அவர்கள் நம் கையையே கடித்தாலும் கடித்து விடுவார்கள். யாரையும் எதிர்த்துப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கக் கூடாது என்பது நம்முடைய கோட்பாடாக இருந்தாலும், ஈவிரக்கமின்றி அவர்களை மண்டையில் அடிக்க வேண்டும். ஹூம், நம்முடைய கடமை மிகமிகக் கடினமானதாக இருக்கிறது!''

அவர், தாமே ஏறக்குறைய நோயாளியாகவும் பல ஹீனமாகவும் இருந்துகொண்டு, எனக்கு 1921, ஆகஸ்ட் 9-ந் தேதியன்று ஒரு கடிதம் எழுதியிருந்தார்:

''ஏ. எம்!

''உங்கள் கடிதத்தை எல். பி. காமனேவுக்கு* அனுப்பி வைத்தேன். நான் மிக மிகக் களைத்துப் போயிருக்கிறேன். மிகச் சுலுவான காரியத்தைக்கூடச் செய்யச் சக்தியில்லாத வனாக இருக்கிறேன். நீங்கள் ரத்தமாக உமிழ்ந்து கொண்

---

* காமனேவ் - 1936-ம் வருஷ விசாரணையில், ஐந்தாம் படைவேலை செய்தவர் என்று நிரூபிக்கப்பட்டவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டிருக்கிறீர்கள். அப்படியிருந்தும் இன்னும் ஏன் சிகிச்சை செய்துகொள்ளப் போகவில்லை? இது மிக மிக விவேகமற்ற காரியம். ஐரோப்பாவில் உள்ள ஒரு நல்ல ஆரோக்கிய நிலையத்தில் போயிருந்தால், உங்கள் உடல் நிலை சௌகரியமாகும். அப்புறம் ஏதாவது பிரயோஜனமுள்ள காரியத்தை உங்களால் செய்யமுடியும். இது முக்காலும் உண்மை. ஆனால் இங்கோ உங்கள் உடம்பும் சொஸ்தப்படாது; உங்களால் எந்தக் காரியத்தையும் செய்யவும் முடியாது. இங்கே உங்களைத் தொந்தரவு படுத்திக் கொள்ளுவதைத் தவிர, பிரயோஜனம் எதுவும் இல்லை, அதைத் தவிர வேறு வேலையுங்கூட இல்லை. வெளியேறிச் சென்று, உடம்பைச் சொஸ்தமாக்கிக் கொள்ளுங்கள். பிடிவாதம் கூடாது என்று வேண்டிக் கொள்கிறேன்!

உங்கள்
லெனின்"

நான் ருஷ்யாவை விட்டுப் புறப்பட்டுப் போக வேண்டும் என்று ஏறக்குறைய ஒரு வருஷ காலமாக அவர் விடாப் பிடியுடன் வற்புறுத்திக் கொண்டிருந்தார். எந்நேரமும் பரிபூரணமாக வேலையில் மூழ்கியிருக்கும் அவருக்கு, ஒரு நோயாளிக்கு ஓய்வு தேவை என்னும் விஷயத்தை எப்படி ஞாபகத்திலேயே வைத்துக் கொண்டிருக்க முடிகிறது என்பதை எண்ணி வியப்புறுகிறேன். எனக்கு எழுதிய இந்தக் கடிதத்தைப் போன்று பலருக்கும் அவர் கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழர்களிடத்தில் நடந்து கொள்ளும் முறை

தோழர்களிடத்தில் ஒரு தனிமாதிரியாக அவர் நடந்து கொள்ளுவதையும், அவர்கள் விஷத்தில் கவனம் செலுத்துவதையும், அவர்களுடைய வாழ்க்கையின் சின்னஞ்சிறு விவகாரங்களைக்கூட விசாரிப்பதையும் நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அவர் தம்முடைய காரிய சித்திக்காக இவ்வாறு தோழர்களிடம் அக்கறை காட்டவில்லை. புத்தி சாலியாக உள்ள ஒரு தலைவன், ஒரு யோக்கியமான, கெட்டிக்கார ஊழியனிடம் தன் சுயநல அக்கரையைச் சில சமயங்களில் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளுவதுண்டு. ஆனால் லெனின் விஷயம் அப்படியில்லை. ஒரு உண்மையான தோழனைப் போல இதய பூர்வமாக அக்கரை காட்டுவார்; பிறரைத் தமக்குச் சமதையானவர்கள் எனக் கருதி அவர்களிடம் அன்பு காட்டுவார். கட்சியில் இருந்த மிகப் பெரிய மனிதர்களைக்கூட லெனினுக்குச் சமானமானவர்கள் என்று கூறமுடியாது. ஆனால் இந்த உண்மையை லெனின் உணரவில்லை; அல்லது ஒரு வேளை உணர்ந்து கொள்ள விரும்பவில்லை. சில சமயங்களில் அவர் மற்றவர்களிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக மிகக் கடுமையாய் நடந்து கொள்ளுவார். அவர்களோடு விவாதம் பண்ணும் போது ஈவிரக்கமில்லாமல் அவர்களைப் பரிகசிப்பார்; உள்ளத்தில் வஞ்சம் கொண்டவர் மாதிரி கூட அவர்களைப் பார்த்துச் சிரிப்பார். இவ்வாறெல்லாம் அவர் நடந்து கொண்டது உண்மையே. ஆனால் தாம் எந்த மனிதர்களை நேற்றுக் கடிந்து பேசினாரோ, அதே மனிதர்களுடைய திறமைகளையும், நேர்மையையும் இன்று வியந்து பாராட்டுவார். இதுமாதிரி எத்தனையோ சந்தர்ப்பங்கள்! 1918-1921-ல் மிகமிக மோசமான நிலைமைகளிலும் அவர்கள் தளராமல் வேலை செய்து வந்ததைப் புகழுவார்; எல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடுகளையும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த உளவாளி களுக்கு மத்தியிலும், யுத்தத்தினால் களைத்துப் போன தேசத்தில் ரணங்கள் வெடித்தது போலச் சதியாலோ னைகள் தலை தூக்கிக் கொண்டிருந்த சமயத்திலும் அவர்கள் அரும்பணியாற்றி வந்ததைப் பாராட்டுவார். அவர்கள் ஓய்வொழிச்சல் இல்லாமல் வேலை செய்தார்கள்; அவர்கள் சரிவரச் சாப்பிடவில்லை. ஒரே பயபீதியின் நடுவே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்தக் கஷ்டங்களால் லெனின் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உள்நாட்டுப் போரின் படுகொலைச் சூறாவளியால் வேரோடு அசைக்கப் பட்ட சமூகத்தில் முன்பின் அறியாத விதமாக உண்டாகும் அபாயங்கள் லெனினைப் பாதித்ததாகத் தோன்றவில்லை. ஒரே ஒரு தடவை தான்; எம். எப் ஆண்ட்ரியோவுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, ஏதோ தம் கஷ்டத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறவர் போல லெனின் பின்கண்ட வாறு சொன்னார்: ‘‘எம். எப்., நாம் வேறு என்ன தான் செய்யமுடியும்? போராடுவதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை. போராட்டம் நமக்குக் கஷ்டமாகத் தோன்றுகிறதா? ஆம்! கஷ்டமாகத்தான் தோன்றுகிறது. என்னைப் பொறுத்த வரையில் அது கஷ்டமாகத் தோன்று கிறது. என்னைப் பொறுத்த வரையில் அது கஷ்டமாக இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? எனக்கும் கஷ்ட மாகத்தான் இருக்கிறது. ஆனால் ட்ஸர்ஷின்ஸ்கியைப் பாருங்கள். அவர் அடியோடு கலகலத்து விட்டார். இது விஷயத்தில் நாம் எதுவும் செய்வதற்கில்லை. தோல்வி யடைவதைவிடக் கஷ்டப்படுவது உசிதம்.’’ என் முன்னிலையில் அவர் வெளிப்படையாகத் தெரிவித்துக் கொண்ட மனவருத்தம் இது ஒன்றுதான்: ‘‘மார்டோவ் நம்மோடு இல்லை. இதற்காக நான் மிகமிக வருந்துகிறேன். எப்பேர்ப்பட்ட உயர்ந்த தோழர்! எப்பேர்ப்பட்ட நேர்மை யான மனிதர்?’’ மார்டோவ் ஓரிடத்தில், ‘‘ருஷ்யாவில் இரண்டே இரண்டு கம்யூனிஸ்டுகள் தான் இருக்கிறார்கள். அவர்கள் லெனினும், கோலோந்தேயுந்தான்’’ என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுதியிருப்பதை வாசிக்கும்போது வெகுநேரம் வரை லெனின் சிரித்தார். அப்புறம் ஒரு தடவை பெருமூச்செறிந்து கொண்டு, "அவள் எப்பேர்ப்பட்ட புத்திசாலிப் பெண்!" என்றார்.

நிர்வாகியாக இருந்த ஒரு தோழரைத் தம் அறையிலிருந்து வெளியே அழைத்து வந்து வழியனுப்பிவிட்டு, என்னிடம் சொன்னார்: "உங்களுக்கு இவரை ரொம்ப நாட்களாகத் தெரியுமா? ஐரோப்பாவில் உள்ள எந்தத் தேசத்திலும் இவர் பிரதம மந்திரி பதவி வகிக்கலாம்." இவ்வாறு புன்னகையுடன் தம் கைகளைத் தேய்த்துக் கொண்டே, "அறிவு நிலையில் ஐரோப்பா நம்மைக் காட்டிலும் ஏழையாக இருக்கிறது" என்றார். ஆனால் தாம் வழியனுப்பிய தோழருக்கு அவமதிப்பு உண்டாகும்படி அவர் இந்த விஷயத்தைக் கூறவில்லை.

"பீரங்கிப்படையின் தலைமை இலாகாவுக்கு நாம் இருவரும் போய்வரலாம்" என்று லெனினிடம் ஒரு சமயம் கூறினேன். அங்கே விமான எதிர்ப்புப் பீரங்கிக்குரிய ஒரு கருவியைப் புதுமாதிரியாகச் செய்து கொண்டு வந்து வைத்திருந்தார் போல்ஷ்விக் கட்சி அங்கத்தினர் ஒருவர். அந்த மாதிரியான பீரங்கிக் கருவியை அவரே ஆராய்ந்து கண்டு பிடித்திருந்தார். "இதைப் பற்றி எனக்கு என்ன தெரியும்?" என்றார் லெனின். ஆனாலும் என்னோடு வந்தார்.

ஓர் இருட்டறையில் ஒரு மேஜையின்மீது பீரங்கிக்கருவி வைக்கப் பட்டிருக்கிறது. அங்கே முறைப்பான முகத் தோற்றத்துடன் ஏழு ராணுவ ஜெனரல்களும், வயது முதிர்ந்தவர்களும், விஞ்ஞானிகளும் கூடியிருந்தார்கள். இந்தக் கூட்டத்தின் மத்தியில் சாதாரண உருவத்தோற்றமுடைய லெனின் 'யாரோ எவரோ' என்று மாறிவிட்டார். கருவியைக் கண்டுபிடித்த ஆசாமி, கருவியின் அமைப்பைப் பற்றி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சொல்லு வதை இரண்டு மூன்று நிமிஷம் கவனமாகக் கேட்டார். அப்புறம் கருவியின் அமைப்பைப்பற்றிய நுணுக்கமான விவரங்களைக் கேட்கலானார். கருவியைச் செய்தவரும், ஜெனரல்களும் லெனின் கேட்ட கேள்விக்கெல்லாம் விளக்க மாகப் பதில் சொன்னார்கள். மறுநாள், கருவியைக் கண்டு பிடித்த ஆசாமி என்னைப் பார்த்து, "நீங்கள் ஒரு தோழ ருடன் வருவதாக ஏற்கனவே ஜெனரல்களிடம் சொல்லி யிருந்தேன். ஆனால் அந்தத் தோழர் யார் என்பதைச் சொல்லவில்லை. அவர்களும் லெனின்தான் வந்திருக்கிறார் என்பதைக் கண்டுகொள்ளவில்லை. ஒருவேளை லெனின் இவ்வளவு சாதாரணமாக, யாதொரு மெய்க்காவலும் தடபுடலும் இல்லாமல் வருவார் என்று அவர்கள் நினைத் திருக்க மாட்டார்கள். அவர்கள் என்னைப் பார்த்து, "வந்தவர் எஞ்சினியரா? அல்லது தொழில் நுணுக்கப் பேராசிரியரா? லெனினா? என்ன ஆச்சரியம்? நம்முடைய யந்திரசாதன நுட்பங்களையெல்லாம் அவர் எப்படித் தெரிந்துகொண்டார்! அவரைப் பார்த்தால் யந்திரசாதன நிபுணரைப் போலவே இருந்தது" என்றெல்லாம் சொன் னார்கள். எப்பேர்ப்பட்ட ஜாலவித்தை இது!"

உண்மையில் அவர்தான் லெனின் என்று அவர்கள் நம்பவில்லை. பீரங்கிப் படை இலாகாவிலிருந்து புறப்பட்டு நாங்கள் திரும்பிப் போய்க்கொண்டிருந்தோம். அப்போது, அந்தக் கருவியைக் கண்டுபிடித்தவரைப் பற்றி லெனின், சிரித்துக் கொண்டே சொன்னார்: "பாருங்கள்! அவரை என்னவோ ஏதோ என்று நினைத்துக் கொண்டிருந்தேம். அவர் ஒரு நல்ல தோழர் என்பதுமட்டுந்தான் எனக்குத் தெரியும். அவரோ இந்தக் கருவியைக் கண்டு பிடித்திருக் கிறார். இந்த வேலைதான் அவருக்கு இஷ்டமான வேலை போலிருக்கிறது. சரியான ஆசாமி. அந்தக் கருவியின் உபயோகத்தைப் பற்றி நான் வேண்டுமென்றே ஜெனரல் களிடம் சந்தேகம் கேட்டவண்ணமாக இருந்தேன். அதைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவனித்தீர்களா? அந்தக் கருவியைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காகவே இவ்வாறு கேட்டேன்.''

அப்புறம் குலுங்கக் குலுங்கச் சிரித்தார். ''அவர் வேறு ஏதேனும் கருவிகளைக் கண்டு பிடித்திருக்கிறாரா?'' என்று என்னிடம் கேட்டுவிட்டு, ''இந்த வேலையைத் தவிர வேறு எதையும் அவர் செய்யக் கூடாது. ஆஹா! இந்த யந்திர சாதன எஞ்சினியர்களுக்கெல்லாம், அவர்களுடைய வேலைக்கு ஏற்ப உயர்ந்த வசதிகளை மட்டும் நாம் செய்து கொடுத்தால்! இன்னும் இருபத்தைந்து வருஷங்களில் ருஷ்யா உலகத்திலேயே முன்னணியில் நிற்கும் நாடாகிவிடும்'' என்றார்.

தனிப்பட்ட முறையில் அவருடைய அனுதாபத்திற்குப் பாத்திரமற்ற தோழர்களைப் பற்றிக்கூட அவர் என் முன்னிலையில் புகழ்ந்து கூறியிருக்கிறார். அவரவர்களின் சக்திக்கு உரிய பெருமையைக் கொடுப்பது எப்படி என்று லெனினுக்குத் தெரியும்! ஸ்தாபன ரீதியாக அமைக்கும் திறமையில், எல். டி. ட்ராட்ஸ்கி வல்லவர் என்று பிரமாதமாகப் புகழ்ந்தார் லெனின். அவர் இப்படிப் புகழ்ந்தது எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணிற்று.

அதை லெனின் கவனித்துக் கொண்டார். உடனே சொன்னார்: ''ட்ராட்ஸ்கி சம்பந்தமாக நான் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன் என்பது குறித்துப் பொய்வதந்திகள் உலவுகின்றன; இது எனக்குத் தெரியும். ஆனால் உள்ளது உள்ளதுதான்; இல்லாதது இல்லாதது தான்; இதுவும் எனக்குத் தெரியும். என்னதான் சொன்னாலும், ராணுவ நிபுணர்களைத் திரட்டி ஸ்தாபன ரீதியாக அவர் அமைத்திருக்கிறார். அவரிடம் அந்த ஆற்றல் இருக்கத்தான் செய்தது.'' சிறிதுநேர மௌனத்துக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிறகு, துயரத்துடன், ''ஆனாலும் அவர் நம்மில் ஒருவராக இல்லை. நம்மோடுதான் இருக்கிறார்; ஆனால் நம்மவராக இல்லை. அவர் பேராசை கொண்டவராக இருக்கிறார். அவரிடத்தில் ஏதோ ஒரு குணம் இருக்கிறது. அது நல்ல குணமாக இல்லை. ஒரு வகையில் அவர் லாஸலி*லயப் போல் இருக்கிறார்'' என்றார். ''நம்மோடுதான் இருக்கிறார்; ஆனால் நம்மவராக இல்லை'' என்ற வார்த்தைகளை, எனக்குத் தெரிய அவர் இரண்டு தடவைகள் உபயோகித்து இருக்கிறார். இரண்டாவது தடவை வேறொரு மனிதரைப் பற்றிச் செல்லும்போது உபயோகித்தார். அவர் லெனின் காலமான புதிதிலேயே செத்துப் போய்விட்டவர்.

ஒவ்வொருவரையும், இன்னார் இப்படிப்பட்டவர் என்பதைக் கண்டு, கொள்ளுவதில் லெனின் திறமைசாலி. ஒரு தடவை நான் அவருடைய இருப்பிடத்துக்குப் போயிருந்தபோது, ஒரு ஆசாமி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்துகொண்டிருந்தான். லெனின் அப்பொழுது எழுதிக் கொண்டிருந்தார். குனிந்த தலை நிமிராமலேயே, அவன் போன திசையைச் சுட்டிக் காட்டி, ''அவனை உங்களுக்குத் தெரியுமா?'' என்று, என்னிடம் கேட்டார். ''உலக இலக்கிய'' சமாச்சாரத்தில் நானும் அவனும் இரண்டுமுறை தொடர்பு கொள்ள நேர்ந்த விவரத்தைச் சொன்னேன்.

''விஷயம் என்ன?'' கேட்டேன்.

''அவன் அடிமைப் புத்திபடைத்தவன். அயோக்கியப் பயலாகவும் இருக்கக்கூடும். இப்பொழுது தான் அவனை முதல் முதலாகப் பார்க்கிறேன். என் அபிப்பிராயம் தவறாகக் கூட இருக்கலாம்'' என்றார் லெனின்.

---

*(லாஸலி - சென்ற நூற்றாண்டில், ஜெர்மனியில் தொழிலாளர் இயக்கத்தை ஸ்தாபிப்பதில் உதவியாக இருந்தவர். அப்புறம் ட்ராட்ஸ்கியைப் போல விரோதியின் கையாளாக மாறியவர்-ஹாரி கௌல்டு)

www.tamilarangam.net



ஆனால் லெனினுடைய அபிப்பிராயம் தவறானதல்ல. சில மாதங்களுக்குப் பிறகு, அந்த ஆசாமி, லெனினுடைய அபிப்பிராயம் சரிதான் என்பதைப் பரிபூரணமாக நிரூபித்து விட்டான். பிறரைப் பற்றி ஓயாமல் சிந்தனை செய்து கொண்டிருந்தார் லெனின். ஏனென்றால், அவர் சொன்னது போல, “நம் கட்சியின் ஸ்தாபனம் சமநிலையின்றி இருக்கிறது. அக்டோபருக்குப் பிறகு அநேக தினுசான ஆட்கள் உள்ளே நுழைந்து விட்டார்கள். உங்கள் அன்புக்குரிய உத்தமர்களான படித்த கூட்டத்தைத்தான் இந்தக் குற்றத்திற்குக் காரண கர்த்தாவாக்க வேண்டும். அவர்களுடைய கேவலமான நாச வேலையின் பலன் இது.” நாங்கள் கார்க்கியில் உலாவிக் கொண்டிருந்தபோது லெனின் இவ்வாறு சொன்னார். நான் அலெக்ஸின்ஸ்கியைப் பற்றிப் பேச ஆரம்பித்தேன். எதற்காக என்று எனக்கு ஞாபகமில்லை. ஒருவேளை அந்தச் சமயத்தில் அவன் தன் கீழ்த்தரமான ஏமாற்று வித்தைகளில் ஒன்றைச் செய்யத் தொடங்கியதனாலோ என்னவோ, அவனைப் பற்றிப் பேசலானேன். உடனே லெனின் சொன்னார்: “நானும் அவனும் முதல் முதலில் சந்தித்தபோது, எனக்கு அவனைப் பார்க்கவே பிடிக்காமல் அருவருப்பாக இருந்தது. எனக்கு ஏற்பட்ட இந்த அருவருப்பை என்னால் அடக்க முடியவில்லை. பார்த்த மாத்திரத்திலேயே இம்மாதிரி எனக்கு அருவருப்பை உண்டாக்கியவன் எவனும் இல்லை. நாங்கள் ஒன்று சேர்ந்து ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படி நேர்ந்தது. அப்போது என்னைப் பல வழிகளிலும் நான் அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. இது மகாமோசம். ஏனோ எனக்கு அப்படி இருந்தது. இந்தக் கீழ்த்தரமான ஆசாமியை எனக்கு அடியோடு பிடிக்கவில்லை.” அப்புறம் தோளைக் குலுக்கிக் கொண்டு, ஆச்சரியத்தோடு சொன்னார்: “ஆனால் அந்த அயோக்கியன் மாலினோவ்ஸ்கியை மட்டும் என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவன் விஷயம் ஒரு மர்மமாகவே இருக்கிறது.”

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்னைப் பொறுத்தமட்டிலும் லெனின் ஒரு கண்டிப்பான குருநாதர்; உற்ற நண்பர். ஒருமுறை என்னைப் பார்த்து, "நீங்கள் ஒரு புதிர்" என்று தமாஷாகச் சொன்னார். "இலக்கிய விஷயத்தில் நல்ல எதார்த்த வாதியைப்போல இருக்கிறீர்கள். மக்களைப் பற்றிய அபிப் பிராயத்தில் கற்பனார்ந்த வாதியாக இருக்கிறீர்கள். உங்களைப் பொறுத்தவரையில், எல்லா மக்களுமா சரித் திரத்தின் அடிமைகளாக இருக்கிறார்கள்? நமக்குச் சரித் திரம் தெரியும். நாம் அடிமைகளைப் பார்த்து, 'பலிபீடங் களைப் புரட்டிப் போடுங்கள்! கோயில்களை இடியுங்கள்! தெய்வங்கள் ஒழிக!' என்று சொல்லுகிறோம். ஆனால் நீங்கள் தொழிலாளி வர்க்கத்தின் ஆற்றல்சான்ற கட்சி யானது முதலில் படித்த கூட்டத்திற்குச் சௌகரியம் செய்து கொடுக்க வேண்டும் என்று கூறி, அதை நான் சரி என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறீர்கள்."

என் அபிப்பிராயம் தவறாக இருக்கலாம். ஆனால் லெனினுக்கு என்னோடு பேசிக் கொண்டிருப்பதில் விருப்பம் இருந்ததாகவே எனக்குத் தோன்றுகிறது. அநேகமாக எப்பொழுதும் அவர், "வாருங்கள். என்னை வந்து பாருங்கள்-நாம் சந்தித்துப் பேசுவோம்" என்றே சொல் லுவார். ஒருமுறை சொன்னார்: "உங்களோடு பேசுவது எனக்கு ஒரு விசித்திரமாக இருக்கிறது. நீங்கள் எத்தனையோ தினுசான பரந்த அபிப்ராயங்கள் கொண்டவராக இருக்கிறீர்கள்." அவர், படித்த கூட்டத்தின் மனப்போக்கு எப்படி இருக்கிறது என்று விசாரிப்பார் அவருக்கு விஞ்ஞானிகள் விஷயத்தில் பிரத்தியேகமான ஒரு அக்கரை. அந்தச் சமயத்தில் நான் "விஞ்ஞானிகளின் நல அபிவிருத்திக் கமிட்டி" சம்பந்தமாக என். பி. சலாதோவுடன் வேலை செய்து கொண்டிருந்தேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாட்டாளி இலக்கியம்

பாட்டாளி இலக்கியத்தில் அவர் பெரிதும் கவனம் செலுத்தி வந்தார். ''இந்த இலக்கியத்தினால் என்ன பலன் விளையும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று லெனின் கேட்டார். எவ்வளவோ பலனை தான் எதிர் பார்ப்பதாகவும், ''லிட்வஸ்''* ஒன்றை அமைப்பது அவசியம் என்று கருதுவதாகவும் சொன்னேன். அந்த ஸ்தாபனத்தில் மொழியாராய்ச்சி, அந்நிய நாட்டு இலக்கி யங்கள் அதாவது மேலைநாட்டு, கீழைநாட்டு இலக்கி யங்கள், கிராமிய இலக்கியம், உலக இலக்கிய வரலாறு ஆகியவற்றிற்கும், பிரத்தியேகமாக ருஷ்ய இலக்கிய வரலாற் றிற்கும் தனித்தனி வகுப்புகள் திறக்கப்பட வேண்டுமெனவும் சொன்னேன். அவர் கண்களை உருட்டி விழித்து, சிரித்துக் கொண்டே, ''ஹூம், ஹூம்'' என்றார். ரொம்ப விரிவான திட்டம்! ரொம்பத் தடபுடலான திட்டம்! அது விரிவாக இருப்பதை நான் எதிர்பார்க்கவில்லை. தடபுடலாக இருந்தால் - உம்? இந்த விஷயங்களைக் கற்பிக்க நம் வசம் பேராசிரியர்கள் இல்லையே! பூர்ஷ்வாப் பேராசிரியர்கள் வரலாறு கற்றுக் கொடுப்பது வேறு தினுசாக அல்லவா இருக்கும்? ஊஹூம், அந்தக் காரியத்தை ஆரம்பிக்க இது தக்க தருணம் என்று எனக்குத் தோன்றவில்லை. மூன்று அல்லது ஐந்து வருஷங்கள் நாம் காத்திருக்க வேண்டியதுதான்'' என்று கூறினார்.

''வாசிப்பதற்கு நேரமே கிடைக்கவில்லை'' என்று அவர் வருத்தப்பட்டுக் கொள்ளுவார். டெம்யான் பெட்னியின் பிரசார வேலையைப் பாராட்டி அடிக்கடி அழுத்தம் திருத் தமாகக் குறிப்பிடுவார். ஆனாலும், ''அவருடைய பிரசார வேலை மெருகேறாத நிலையிலேயே இருக்கிறது. அவர் வாசகனை விட ஒருபடி மேலே இருந்து வேலை செய்ய

---

* லிட்வஸ்- இலக்கியப் பயிற்சி ஸ்தாபனம்

www.tamilarangam.net



வேண்டியிருக்க, வாசகனைப் பின்பற்றியே போய்க் கொண்டிருக்கிறார்'' என்று கூறுவார்.

மாயகாவ்ஸ்கி*யிடம் அவருக்கு நம்பிக்கை கிடையாது அவரை நினைத்தால் அவருக்குக் கொஞ்சம் என எரிச்சலும் கூட உண்டாகும்.

''ஒரேயடியாக முழக்குகிறார். சில சொல் திரிபுகளைக் கண்டுபிடிக்கிறார். அவர் எந்த ஒரு அம்சத்தையும் தொட வில்லை என்பது என் அபிப்பிராயம். மேலும் அவர் எழுது வது புரியவில்லை. ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் இருக்கிறது. படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அவரிடம் திறமை இருக்கிறதா? அதிகத் திறமைகூட இருக்கிறதோ? ஹூம், ஹூம். பார்க்கலாம். இப்போது ஏராளமாகக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இல்லையா? செய்திப் பத்திரிகைகளில் ஒரு பக்கம் முழுவதிலும்கூட கவிதை வெளிவருகிறது. கவிதை நூல்கள் தினந்தினமும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.'' லெனின் இவ்வாறு கூறவே, இந்த மாதிரியான ஒரு கால நிலையில் வாலிபனுக்குக் கவிதையிடம் கவர்ச்சி பிறப்பது இயற்கைதான் என்றும், நல்ல வசனம் எழுதுவதைவிட மட்டமான செய்யுள் எழுதுவது எளிது என்பது என் அபிப்பிராயம் என்று கூறினேன். மேலும் குறைந்த நேரத்தில் கவிதை எழுதி விடலாம் என்றும் சொன்னேன். அத்துடன் செய்யுள் இயற்றுவது எப்படி எனக் கற்றுக்கொடுக்கும் வாத்தியார்கள் பலர் நம்மிடம் இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தேன். ''செய்யுள் இயற்றுவது வசனம் எழுதுவதைவிட எளிது என்று நான் நம்பவில்லை. என்னால் அதைக் கற்பனை பண்ண முடியாது. என்னை உயிரோடு நிறுத்தித் தோலை

---

* மாயகாவ்ஸ்கி-இவர் பிற்காலத்தில் தம் குறைபாடு களைக் களைந்து விட்டார். சோவியத் யூனியனின் தலை சிறந்த கவிஞர் என்று ஸ்டாலினால் மதிக்கப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரித்தாலும் என்னால் இரண்டு வரிகூடக் கவி எழுத முடியாது'' என்றார் லெனின். அப்புறம் புருவங்களை நெரித்தார். ''பழைய புரட்சி இலக்கியங்கள் யாவற்றையும்-இங்கும் ஐரோப்பாவிலும் உள்ள எல்லாப் புரட்சி இலக்கியங்களையும் நாம் மக்களிடையே பரப்ப வேண்டும்!'' என்று சொன்னார்.

அவர் தாய் நாட்டை விட்டு வெகு காலமாக வெளி நாட்டில் வாழ்ந்த ருஷ்யர். தம் நாட்டைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தவர். வெளிநாட்டிலிருந்து பார்க்கும் போது ருஷ்யா அதிக ஜாஜ்வல்யத்துடனும், அதிக அழகுடனும் அவருக்குக் காட்சியளித்தது. அந்த நாட்டின் மூல சக்திகளையும், அந்த நாட்டு மக்களின் விசேஷத் திறமைகளையும் அவர் சரியாக மதிப்பிட்டிருந்தார். ஆனால் அந்தச் சக்திகளும், திறமைகளும் இன்னும் சரிவர வெளிப்படவில்லை. யாதொரு மாறுதலும் இன்றி ஒரே மாதிரி நசுக்கி அமுக்கிக் கொண்டிருக்கும் சரித்திரம், அவற்றை இன்னும் தட்டி எழுப்பவில்லை. ஆனாலும் அவை ருஷ்யாவின் விசித்திரமான இருள் மண்டிய வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு, தங்க நட்சத்திரங்கள் போல எல்லா இடங்களிலும் மின்னிக்கொண்டுதான் இருக்கின்றன.

விலாடிமிர் லெனின் இந்த உலகத்துக்கே உரிய ஒரு மகா பெரிய மனிதர். அவர் காலமாகிவிட்டார். அவரை அறிந்தவர்களுக்கு அவருடைய மரணம் துக்கத்தைக் கொடுக்கும் ஒரு தாக்குதல். உண்மையில் துக்கத்தைக் கொடுக்கும் தாக்குதல்தான்.

ஆனால் மரணத்தின் இருள் அவருடைய பெருமையை, உலகத் தொழிலாளி வர்க்கத்தின் தலைவர் என்ற அவருடைய பெருமையை, பின்னும் கொஞ்சம் அழுத்தமாகத்தான் உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிறது:

வேஷம், புரட்டு, வதந்தி என்பனவற்றின் இருண்ட மேகம் இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிகமாக இருண்டு

www.tamilarangam.net



விட்டாலும் சரிதான், பைத்தியக்கார உலகத்தின் மண்டிச் செறிந்த இருள் நடுவே லெனின் உயர்த்திப் பிடித்த தீப்பந் தத்தை எந்தச் சக்தியாலும் அணைத்துவிட முடியாது.

உலகம் நிரந்தரமாக ஞாபகத்தில் வைத்துப் பேணு வதற்குரியவர் லெனின். அந்தத் தகுதி அவரைப் போல அவ்வளவு அதிகமாக வேறு எவரிடத்திலும் இல்லை.

விலாடிமிர் லெனின் காலமாகி விட்டார். ஆனால் அவருடைய சிந்தனையையும், உறுதியையும் பிதுரார்ஜித மாகப் பெற்றவர்கள் உயிரோடு இருக்கிறார்கள்; வாழ் கிறார்கள்; மனித சரித்திரத்திலேயே வேறு எதையும் விட அதிக வெற்றியை அடைந்து வரும் பணியைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்ப்
புத்தகாலயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்